வெளியீடு 21-9-1999

Issued 21-9-1999

179
3,000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 24, 1998 - தொகுதி 60 - எண் 2

Tuesday 24th November, 1998—Volume 60 - No. 2

... ... பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...ssembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

V2d, 31 N98
N98 . 60-2
220159.

[Price Rs. 3.00

173/2000

**24-11-1998**

# உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 499 - 542

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) காவல் துறையினரால் விசாரிக்கப்பட்ட சென்னையைச் சார்ந்த சித்ரா என்பவர் மரணம் 542 - 561

(ஆ) தூத்துக்குடி, கழுகுமலையில் தியாகி இமானுவேல் சேகர் சிலை சேதம் 561 - 565

3. **தன்னிலை விளக்கம்—**

காஞ்சிபுரம் இரயில்வே விழா அழைப்பிதழ் குறித்து 23-11-1998 அன்று தான் அவையில் பேசியது பற்றி எதிர்க் கட்சித் தலைவர் விளக்கம் 565 - 570

4. **அறிக்கைகள் அளித்தல்—**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1997 மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை 571

5. **அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.இ.) 571

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.இ.) 573

(இ) பேரவை நிகழ்ச்சி நிரலில் மாற்றம் 632

பக்கங்கள்

6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

| | |
|---|---|
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 571 - 572 |
| (ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 572 - 573 |
| (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 573 - 574 |
| (ஈ) தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 1998 | 574 - 575 |
| (உ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1998 | 575 |
| (ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 575 - 576 |
| (எ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998 | 576 - 577 |

7. **மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1998-99 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1997-98, அளித்தலும் அவற்றின் மீது விவாதமும்—** 577 - 632

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 577, 582, 594, 595, 604, 606, 612, 614, 620, 621, 622, 623 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 578 - 585 |
| * திரு. இ. புகழேந்தி | 585 - 591 |
| * திரு. ஜி. நிஜாமுதீன் | 591 - 597 |


220189




பக்கங்கள்

7. **மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1998-99 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1997-98, அளித்தலும் அவற்றின் மீது விவாதமும்—**தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. ஆர்.ஆர். சேகரன் | 598 - 603 |
| திரு. ஜி.கே. மணி | 603 - 608 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 608 - 613 |
| திரு. சி. வேலாயுதன் | 613 - 618 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி | 618 - 623 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 623 - 627 |
| திரு. பெ.சு. திருவேங்கடம் | 627 - 632 |

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 632 - 634

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 9, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 நவம்பர் 24, செவ்வாய்க் கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு."

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக் காட்டும் ஒளிமிக்க விளக்காகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. ஞானசேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

21—

**புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக மாற்றுதல்**

***14454—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், பாகாயம் புறக்காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், பாகாயம் புறக்காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆணை எண் 887 உள்துறை (காவல்துறை-14) நாள் 9-7-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் 9-7-1998 ஆம் நாளன்று இந்த பாகாயம் புறக்காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாக மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளதாகத் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அந்த ஆணை பிறப்பித்த பின்னரும்கூட அந்தக் காவல் நிலையத்திற்கு என்று இன்னும் jurisdiction, அதாவது எல்லை, வகுக்கவில்லை. அது அரசுக்கு வந்து பல மாதங்களாக அப்படியே pending-ல் இருக்கிறது. எல்லை வகுக்காத காரணத்தினாலே—ஏற்கெனவே 5 காவலர்கள், ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மட்டும் இருக்கிறார்கள்—அங்கு வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. மதர் ஸ்டேஷனாக, வழக்குப் பதிவு செய்யக்கூடிய ஸ்டேஷனாக இன்னும் அது முழுமையாகச் செயல்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வரவர்கள் உடனடியாக அந்தக் காவல் நிலையத்திற்கு எல்லைகளைப் பிரித்துத் தந்து இன்னும் கூடுதலாக 14 காவலர்கள், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், 1 ஆய்வாளர் என்று நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணை பிறப்பிக்கப்பட்டு, இதுபோன்ற ஒவ்வொரு நிகழ்விலும் படிப்படியாகத்தான் பல காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. இருந்தாலும்கூட அரசின் சார்பில் பிறப்பிக்கப்படுகின்ற ஆணைகள் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்று நான் அந்தந்தத் துறைகளை முடுக்கிக் கொண்டிருக்கின்றேன். சில நேரங்களில் "ஆணை" என்பதில் பெரிய "ணை"—யன்னாவிற்குப் பதிலாக சின்ன "னை"— யன்னா இடம் பெற்று "ஆனை" போல அசைந்து அசைந்து அந்த ஆணைகள் போகிற நிலைமை இருக்கிறது. அதைத் துறைகள் திருத்திக் கொள்ளும் என்று நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

22—

### வெளிநாடுகளுக்கு முட்டைப் பவுடர் ஏற்றுமதி

***18052—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதல்-அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் முட்டைப் பவுடர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்திலுள்ள திருவாளர்கள் எஸ்.கே.எம். இண்டஸ்ட்ரீஸ் என்ற முட்டைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் முட்டைப் பவுடர் பெல்ஜியம், ஜப்பான், தாய்வான், ஹாங்காங், ஆஸ்ட்ரியா, தாய்லாந்து, கொரியா, ஜெர்மனி மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முட்டை தயாரிப்பு தமிழ்நாட்டில் இரண்டாவது இடத்திலே இருக்கக்கூடியது நாமக்கல் மாவட்டம். நாமக்கல் மாவட்டத்தில் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 2.5 கோடி முட்டைகள் நாமக்கல்லில் மட்டுமே உற்பத்தி ஆகிறது. அங்கு முட்டைப் பவுடர் தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையை அரசு நிறுவுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசு பரிசீலிக்கும். ஏற்கெனவே இராஜபாளையம் என்று கருதுகின்றேன், அங்கே இதுபோன்ற ஒரு முட்டைப் பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலை நிறுவுவதற்காகக் கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டு அது ஆரம்பிக்கப்படாமலே இருக்கிறது என்பதையும் நினைவிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொருட்களைப் பதப்படுத்திப் பயன்படுத்துவதிலே இப்பொழுது முன்னேறிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, பால் பவுடரைப் பொறுத்தவரையிலே பாலுக்குப் பதிலாகப் பால் பவுடரைப் பயன்படுத்துகின்ற வகையிலே, இப்பொழுது முட்டைக்குப் பதிலாக முட்டைப் பவுடரைப் பயன்படுத்துகின்ற முறை

வந்திருக்கிறது. அரசாங்கம் அளிக்கின்ற சத்துணவுத் திட்டத்திலே இந்த முட்டைப் பவுடரைப் பயன்படுத்தி, குழந்தைகளுக்கு வாரத்திற்கு இரு முறை என்ற நிலையிலே, ஒரு முறை இந்த முட்டைப் பவுடரைப் பயன்படுத்தி உணவு அளிக்க அரசு திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சத்துணவில் இப்பொழுது முட்டைகள்தான் வழங்கப்படுகின்றன. முட்டைப் பவுடர் குழந்தைகளுக்குத் தேவையான ஒரு உணவு என்றாலும்கூட, முட்டைப் பவுடர் அளிப்பதாக உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டைப் பவுடர் தொழிற்சாலை அரசினுடைய செலவில் ஆரம்பிக்கப்படும், பரிசீலிக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். நான் ஏற்கெனவே உள்ளாட்சி மானியக் கோரிக்கையில் பேசியபோது, இராசிபுரத்தில் அதிகமான முட்டைகள் தயாரிக்கப்படுகின்றன; ஆகவே, அங்கு ஒரு முட்டைப் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டு இருந்தேன். பரிசீலிக்கப்படும் என்று அப்போது முதல்வர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, இப்போதும் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, இராசிபுரத்தில் அரசு உதவியுடன் முட்டைப் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்றுதான் சொன்னேனே தவிர, எவ்வளவு காலத்திற்குள் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முட்டைப் பவுடரைப் பற்றிய கேள்வி என்றாலும், இன்றையதினம் பத்திரிகைச் செய்திகள் வாயிலாக பல தகவல்கள் வந்து இருக்கின்றன. முட்டையைப் பயன்படுத்தி புற்று நோயைக் கண்டறிந்து அதற்குரிய சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தத் துறையிலே முட்டையைப்



பயன்படுத்தி, அப்படி நோயைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது புதிய தகவல். இதுபற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிந்து, பிறகு விளக்கம் அளிப்பார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டைப் பவுடர் தொழிற்சாலை, இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு அடிக்கல் நாட்டு விழா மத்திய மந்திரிகளால் நடைபெற்றது. ஆனால், அந்த தொழிற்சாலை இயங்கவில்லை. இந்தியன் வங்கி மற்றும் அரசிடம் உதவி வாங்கி மோசடி செய்து இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தனியார் துறையால் ஒரு முட்டைப் பவுடர் தொழிற்சாலை, இராஜபாளையம் நகரில் தொடங்கப்படுவதற்காக அங்கே ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அங்கே அந்தத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்படாமலே இருக்கிறது. இது வங்கி விவகாரம்; எதுவும் எனக்குத் தெரியாது. விவரங்கள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தால், அது பற்றி எதுவும் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டைப் பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலை, ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஓராண்டு காலமாக இயங்கி வருகிறது. அதன் மூலதனத்திலே அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதனுடைய மூலதனம் 41 கோடி ரூபாய். அதிலே டிட்கோவினுடைய பங்கு 11 சதவீதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்கு வாங்கப்படுகின்ற முட்டைகள் எந்த முறையில் வாங்கப்படுகின்றன? டெண்டர் முறையிலா அல்லது நியமன முறையிலா என்பதை அறிய விரும்புவதோடு, சில நேரங்களில் சத்துணவுக் கூடங்களில் முட்டைகள் கெட்டு வீணாகி விடுகின்றன. அவையெல்லாம் என்ன செய்யப்படுகின்றன? அதிலிருந்து வேறு ஏதேனும் பொருள் தயாரிக்கப்படுகிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சத்துணவுக்கு வாங்கப்படுகின்ற முட்டைகள் எல்லாம் டெண்டர் முறையிலேதான் வாங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதைப்போல, இந்தக் கெட்டுப்போன முட்டைகளை எல்லாம் வேறு எதற்கும் பயன்படுத்தாமல், அவைகள் அறவே அழிக்கப்படுகின்றன. அதன்படி, சேலம் மாவட்டத்தில் குளிர்ப்பதனக் கூடங்களிலே வைக்கப்பட்டு இருந்த சுமார் 40 இலட்சம் முட்டைகள், அவற்றின் உரிமையாளர்களுடைய ஒப்புதலோடு, சுகாதார அதிகாரிகளுடைய முன்னிலையில் முறையாக அழிக்கப்பட்டன என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் வரக்கூடிய முட்டைகள் அழுகி விடுகின்றன; அவை காலதாமதமாகி வருகின்ற காரணத்தால், அவற்றின் உள்ளே குஞ்சுகள்கூட இருக்கக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் வந்து, ஆங்காங்கு குழந்தைகள் பயப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, உடலுக்கு ஆரோக்கியக் கேடுகளெல்லாம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இந்த சத்துணவுக்கு முட்டை கொடுக்கக்கூடிய பழக்கத்தை மாற்றி, முட்டைப் பவுடர் கொடுக்கக் கூடிய முறையை அரசாங்கம் கொண்டு வந்தால், இவைகளையெல்லாம் தவிர்க்க முடியும் என்று கருதுகின்றேன். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முட்டையாக இருந்தால்தான் அது கெட்டுப் போனதா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். பவுடராக வழங்கப்படுகிற



நேரத்தில் அதில் பல தகராறுகள் ஏற்படக்கூடும். பவுடர் என்கின்ற அளவிலே குழந்தைகளுக்கு வழங்குவது இயலாத காரியம்; அதிகச் செலவும் ஆகும். இப்பொழுதே, வாரம் ஒரு முறை குழந்தைகளுக்குச் சத்துணவிலே முட்டை கொடுப்பதால், ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்குச் செலவாகிறது. முட்டைகளிலே குஞ்சுகளும் சில சத்துணவுக் கூடங்களில் இருப்பதாக திரு. வேலாயுதன் அவர்கள் சொன்னார்கள். திரு. வேலாயுதன் எப்போதும் விளையாட்டாகப் பேசுகின்றவர் அல்ல. அப்படி எங்கேயாவது குஞ்சுகள் இருந்தால், அவைகளைக் கொண்டு வந்து அவையிலேயே காட்டுவதற்கு வேலாயுதன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

23—

## தகவல் தொழில்நுட்ப மையம்

***7785—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகவல் தொழில் நுட்பத்திற்கான Information Technology Institute of Tamilnadu மையம் எங்கே எப்போது நிறுவப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தகவல் தொழில்நுட்பத்திற்கான மையம் தமிழ்நாட்டில், சென்னை தரமணியில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் (TANITEC) என்ற பெயரில் இவ்வாண்டு மாண்புமிகு முதல்வரால் 11-9-1998 அன்று தொடங்கப்பட்டு செப்டம்பர் மாதம் முதல் இயங்கி வருகிறது.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களுக்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வி. இது மையம் என்ற நிலையிலிருந்து I.T.I.T. (Information Technology Institute of Tamilnadu) என்று மாறி அதற்குப் பின்னால் சென்ற ஆண்டு TANITEC என்று அதற்குப் புதிய பெயர் சூட்டப்பட்டு இது ஒரு நிகர்நிலைப்

பல்கலைக்கழகமாகவும் கம்பெனி ஆக்ட்டில் இது பதிவு செய்யப்படுவதாகவும் சுய நிதிப் பல்கலைக்கழகமாகவும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதனுடைய முன்னேற்றம் இப்பொழுது எவ்வாறு இருக்கிறது? அண்டை மாநிலங்களில் இந்தத் துறையில் கணிசமான முன்னேற்றத்தை எய்தியிருக்கிறார்கள். அரசும் இதற்கும் நல்ல முயற்சி செய்வதை நன்றாக அறிவேன். இருந்தாலும் இன்னும் இதை வேகப்படுத்துவதற்கு அரசு என்ன முயற்சி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலத்தில் அந்தத் திட்டம் தனி அலுவலரைப் பெற்று தனியாக ஒரு புதியக் கட்டடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்ற முறையில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு, எல்காட் நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இப்பொழுது இயங்கி வருகிறது. பி.டெக். - தகவல் தொழில்நுட்பத்தில் இளம் பொறியியல் மற்றும் முதுநிலை பொறியியல் பாடப் பிரிவுகளை அகில இந்திய தொழில் நுட்ப குழுவின் ஒப்புதலுடன் தொடங்க இருக்கிறது. இந்த ஆண்டு பி.டெக். முதல் நிலை வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. மேல்நிலை வகுப்பு வருகிற ஆண்டில்தான் தொடங்கப்படவேண்டும். ஆகவே, அந்தச் சிறப்புப் படிப்புள்ள முதல்நிலை வகுப்பு தொடங்கப்பட்டு செயல்படுகிறது. மேலும் வளர்ச்சிக்கான வழிவகைகளுக்காக, அதற்காக ஒரு நிபுணர் வெளிநாட்டிலிருந்து வந்து பொறுப்பு ஏற்றுக்கொள்ளவிருக்கிறார். அவர் வருகிற சனவரியில் பொறுப்பு ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பின்னர்தான் இந்த அமைப்பு வளர்ச்சி பெறுகிற சூழ்நிலையில்தான் நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக உயர முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

24—

**அரியலூர் தொகுதியில் தொழில்நுட்பக்**
**கல்விப் பயிலகம் அமைத்தல்**

* **16368—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அரியலூர் தொகுதியில் தொழில்நுட்பக் கல்விப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரம்பலூர் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டம் தற்பொழுது புதிதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கு அரசாங்கத்தால் நிறுவப்பட்ட எந்தத் தொழில்நுட்பப் பயிலகமும் இல்லை. ஆகவே, வரும் நிதியாண்டிலாவது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு அங்கு ஒரு தொழில்நுட்பப் பயிலகம் தொடங்குவதற்கு பரிசீலிப்பார்களா எனபதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு தொகுதிகளில் பாலிடெக்னிக் படிப்புக்கு அரசு வசதி செய்யவேண்டுமென்று கேட்கிற வேண்டுகோள் இருக்கிறது. ஆனால் பாலிடெக்னிக்கை நடத்துவதற்கு ஆண்டுதோறும் ஆகின்ற செலவு, 4 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆகின்ற அளவுக்குச் செலவாகிறது. எனவே, அந்தச் செலவை ஆண்டுதோறும் புதிய செலவாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. புதிய செலவை ஏற்க இயலவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஏற்கெனவே அரியலூர் தொகுதியில், தொகுதி இடம்பெறும் பெரம்பலூர் மாவட்டத்தில் தற்பொழுது இரண்டு பாலிடெக்னிக்குகள் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் அங்கீகாரத்துடன் இயங்கி வருகின்றன. அவை சுயநிதி பாலிடெக்னிக்குகள். அப்படிப்பட்ட சுயநிதி அடிப்படையில் வேண்டுகோள் வருகின்றபோது அவை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

25—

## பட்டுக்கோட்டை மருத்துவமனையில் கூடுதல் வசதி

***16626—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பட்டுக்கோட்டை மருத்துவமனையில் நோயாளிகளின் நலனையும், எண்ணிக்கையையும் கருத்திற்கொண்டு கூடுதல் படுக்கை வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-45

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டு அந்த வசதியைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை 140 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாகும். அவை முறையே, ஆண்களுக்கு 56, பெண்களுக்கு 28, மகப்பேற்றுக்கு 10, குழந்தைகள் நலப் பிரிவிற்கு 10, மகப்பேற்றுக்குப் பிந்தைய சிகிச்சைக்கு 16, காச நோய்ப் பிரிவிற்கு 20 எனப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. இன்றுள்ள சூழ்நிலையில் படுக்கைகளை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்ற நிலை வருமானால் இந்த அரசு அதை நிச்சயம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பொங்கலூரில் ஓர் ஆரம்ப



சுகாதார நிலையம் இருக்கிறது. ஆனால் அங்கு டாக்டர்கள் இல்லை. சமீபத்திலே ஒரு டாக்டர் வந்து போய்க் கொண்டிருந்தார். அவர் மீண்டும் அன்னூருக்கு மாற்றப்பட்டதாக நேற்றையதினம் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிலையான ஒரு டாக்டரைக் கொடுப்பதோடு அல்லாமல், சுற்றுப்புற கிராமங்களில் மருத்துவமனைகள் இல்லாததைக் கருத்தில்கொண்டு அதனை படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500 டாக்டர்கள் ஓய்வு பெறுகிறார்கள். அந்த இடங்களை நிரப்புவதற்காக சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்து டாக்டர்களை நியமனம் செய்ய வேண்டும். அதற்கான வேண்டுகோளை சர்வீஸ் கமிஷனுக்கு நாங்கள் முன்கூட்டியே தெரிவித்திருக்கின்றோம். அங்கே டாக்டர்களைத் தேர்வு செய்வதிலே காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தாலே சில மருத்துவமனைகளில் முழுமையாக டாக்டர்களை நியமிக்க முடியவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை அரசு உடனடியாகப் பரிசீலித்து நாளை முதற்கொண்டு ஒரு நல்ல டாக்டரை அங்கே நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள தானிப்பாடி அரசு மருத்துவமனையில் படுக்கைகள் இருந்தும், நல்ல கட்டடம் இருந்தும், அங்கே உள் நோயாளிகளை அனுமதிப்பதில்லை. எனவே, அங்கே உள் நோயளிகளை அனுமதிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், அங்கு மருத்துவர்களும் ஊழியர்களும் சரியாக வராத காரணத்தால்—இரண்டு இலட்சம் மக்கள் வாழ்கின்ற—அந்தப் பகுதி மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். அதைப் போக்குகின்ற வகையில் மருத்துவர்களையும், ஊழியர்களையும் நியமனம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கைகள் இருந்து, நோயாளிகள் நிச்சயமாக மருத்துவமனைக்கு உள்ளே அனுமதிக்கப்பட வேண்டிய

நிலை இருக்குமானால் அவர்கள் நிச்சயமாக உள் நோயாளிகளாகத்தான் கவனிக்கப்பட வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இந்தக் குற்றச்சாட்டு இதுவரை அரசின் பரிசீலனைக்கு வரவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் புதிதாக பந்தலூர், குந்தா என்று இரண்டு தாலுகாக்கள் உருவாகியிருக்கின்றன. இதில் பந்தலூர் தாலுகாவில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக உயர்த்துவதற்கு உண்டான திட்டம் அரசிடம் உள்ளதா என்பதையும், அப்படி உயர்த்தப்படும்போது அதில் அமர்த்தப்படும் மருத்துவத் துறையைச் சார்ந்த அனைவரும் குறிப்பிட்ட காலம் நிச்சயமாக அங்கே பணியில் இருக்க வேண்டும்—ஏனென்றால் நீலகிரியிலிருந்து வெளியே போய்விடுகிறார்கள்—என்ற அந்த உத்தரவையும் சேர்த்து வழங்க ஆவன செய்யப்படுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எங்கே புதிதாக தாலுகா உருவாக்கப்பட்டாலும் அங்கே உடனடியாக தாலுகா மருத்துவமனை மேம்படுத்தப்பட்டு, தாலுகா மருத்துவமனைக்கு உரிய இலக்கணப்படி டாக்டர்கள், செவிலியர்கள், அனைத்துப் பிரிவுகளைக் கொண்ட மருத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

முற்பகல் 9-50

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே இயங்கி வருகின்ற அரசு மாவட்ட மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களும், செவிலியர்களும் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் வருகின்ற நோயாளிகளைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், புறநோயாளிகளாக கிட்டத்தட்ட 3,000, 4,000 பேர்



வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களைச் சரியாகக் கவனிப்பதற்குப் போதுமான மருத்துவர்களும், செவிலியர்களும் உடனடியாக நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்னால் நான் காஞ்சிபுரத்திலுள்ள மருத்துவமனையைச் சோதிக்கச் சென்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வந்திருந்தார்கள். அந்த மருத்துவமனையிலே உள்ள குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அதிகாரிகளை உடனடியாக அங்கே அனுப்பி, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடுகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. இன்னமும் குறைபாடுகள் இருக்குமானால், அதுபற்றியும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொரையாரில் ஓர் அரசு மருத்துவமனை இயங்கி வருகின்றது. அங்கே போதுமான அளவு டாக்டர்கள் இல்லை. சமீபத்தில், 15 தினங்களுக்கு முன்னால், அங்குள்ள பள்ளி மாணவர் விடுதியில் படிக்கின்ற மாணவர்களின் உடல்நலன் பாதிக்கப்பட்டு, அவர்களை அந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது அங்கே மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால், காரைக்காலில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டுசென்று சேர்க்க வேண்டிய நிலை உருவானது. எனவே, அப்படிப்பட்ட நிலை இல்லாமல், அங்கே மருத்துவர்கள் நிரந்தரமாக இருப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது குறிப்பிட்டதைப்போல, இப்பொழுது 500 டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கின்றது. அவர்களை சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்து, அரசுக்கு அந்தப் பட்டியலை அனுப்ப வேண்டும். அந்தப் பட்டியல் வராத காரணத்தினாலே, நாம் நேரடியாக நியமிக்க முடியவில்லை. இதற்கு முன்னாலே 10(ஏ)(1) விதி அடிப்படையிலே நியமனம் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. அப்படி நியமிக்கக் கூடாது என்று தேர்வாணையம் சொல்கின்ற காரணத்தினாலே, நாம் அந்த இடங்களை நிரப்ப முடியவில்லை. இருந்தாலும், இருக்கின்ற டாக்டர்களை வைத்து சரிசெய்து

கொண்டிருக்கிறோம். எனவே, தேர்வாணையத்திலிருந்து பட்டியல் வந்த உடனே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கிணங்க நிரந்தரமாக அங்கே ஒரு டாக்டர் நியமிக்கப்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர்கள் நியமனத்தைப் பொறுத்தவரை, உதாரணமாக எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் பெண் டாக்டர்களே கிடையாது; படித்தவர்களே கிடையாது என்று சொல்ல வேண்டும். அங்கே பெண் டாக்டர்களை நீங்கள் நியமித்தால்கூட, அவர்கள் வருவதில்லை. அப்படி வந்தால்கூட, ஒன்றிரண்டு தினங்களிலே விடுப்பில் சென்றுவிடுகிறார்கள். இல்லை, யாரையாவது பிடித்து மாறுதல் வாங்கிக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். ஆகவே, எங்களுடைய தொகுதியிலே, குறிப்பாக முதுகுளத்தூரில் நிரந்தரமாகப் பெண் டாக்டர்களே இல்லை என்பது மிகப் பெரியதொரு குறைபாடு. அத்துடன், 7 டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டே இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். இந்த நிலையில், நான் நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, விதி 10(ஏ)(1) கீழ் அந்தக் காலத்திலே நியமித்தார்கள். அப்படி நியமித்துவிட்டு, பிறகு சர்வீஸ் கமிஷன் மூலம் நிரப்பிக்கொள்ளலாம். ஆகவே, அந்த ஒரு முறையை மறுபடியும் ஏற்படுத்தலாம். வேலையில்லாத டாக்டர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால், அரசு வேலை செய்கிற டாக்டர்கள் எங்கள் பகுதியைப் போன்ற பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு வர மறுக்கிறார்கள். ஆகவே, தற்காலிக அடிப்படையில் உடனடியாக டாக்டர்களை நியமிக்கின்ற ஒரு முறையை மறுபடியும் அரசு கொண்டுவருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய இந்த வினாவிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, தேர்வாணையம் டாக்டர்களைத் தேர்வு செய்து அனுப்புகின்ற வரையிலே காத்திருக்காமல் விதி 10(ஏ)(1) நியமனம் மூலமாக டாக்டர்களை நியமிக்கலாமா என்பது. அதைப் பொறுத்தவரையில், அரசாங்கம் எவ்வளவோ முயற்சி எடுத்தும்,





தேர்வாணையம் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இருந்தாலும், அதுபற்றி மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில், உண்மையிலேயே டாக்டர்கள் யாரை நியமனம் செய்தாலும், இரண்டு மாதத்திற்குள்ளாக எப்படியோ பெரியவர்களைச் சந்தித்து, அவர்களை மாறுதல் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திற்கு பல்வேறு கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. என்ன காரணத்தினாலோ, இராமநாதபுரம் மாவட்டம் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு மாவட்டமாக இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் அந்தக் குறையைப் போக்குவதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை நிச்சயமாக முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவருக்குத் தெரிந்த பெண் டாக்டர்கள் யாராவது இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியாற்ற வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிவித்தால், இன்றைக்கே அதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கி தொகுதியில் மணமேல்குடி, குளத்தூர் தொகுதியில் இலுப்பூர் ஆகிய இரண்டு இடங்களும் இரண்டு மாதங்களுக்கு முன்னால், புதிதாகத் தாலுகாக்களாக தொடங்கப்பட்டன. அங்கே படுக்கைகளை அதிகரித்து, இந்த ஆண்டே கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தாலுகா என அறிவித்த உடனேயே, உடனடியாக அங்கே தாலுகா என்ற அடிப்படையிலே அரசாங்க மருத்துவமனை ஒன்று தொடங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதற்கான கட்டடங்கள் கட்டி, டாக்டர்களை நியமிப்பதற்கான உத்தரவுகளும் ஏற்கெனவே பிறப்பிக்கப் பட்டாகிவிட்டது. இன்னும் ஆறு மாத காலத்திற்குள்ளாக அந்தப் பணி முழுமையாக நடைபெறும்.

[1998 நவம்பர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், வட்ட மருத்துவமனைகளாக மாற்றப்பட்ட அந்த மருத்துவமனைகளிலே உரிய வசதிகள் செய்து தரப்படும் என்று அறிவித்தார்கள். என்னுடைய ஆண்டிமடம் தொகுதியில், செந்துறை, வட்டமாக உயர்த்தப்பட்டு, அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் வட்ட மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு ஓர் ஆண்டு காலம் ஆகியும் இன்னும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. அதைப்போலவே இரும்புலிக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம், 24 மணி நேர மருத்துவமனையாக மாற்றப்பட்டது. குமிளியம், பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டது. இந்த மருத்துவமனைகளிலே வேண்டிய வசதிகள் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாக, பல்வேறு முறைகளின் மூலமாக முறையிட்டும்கூட, இந்த மருத்துவமனைகளுக்கு உரிய வசதி வாய்ப்புகள் இன்னும் செய்து தரப்படவில்லை. அதை விரைவிலே செய்து தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி. ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தாராபுரம் தாலுகா மருத்துவமனையில் இரத்த சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டு செயல்படாமல் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? இரத்த சேமிப்புக் கிடங்கு இயங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த சேமிப்புக் கிடங்கு கட்டியவுடன், அது முறைப்படி இயங்குவதற்கான தகுதி பெற்றிருக்கிறதா என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசோதித்த பிறகுதான், இரத்த சேமிப்புக் கிடங்கு செயல்படுவதற்கு அனுமதிக்கிறார்கள். ஏனென்றால் இரத்த சேமிப்பு என்பது மிக முக்கியமானது மட்டுமல்ல, அந்த இரத்தத்தை வேறு சில நோயாளிகளுக்குக் கொடுக்கின்ற நேரத்தில், அந்த நோயாளிகளும்



1998 நவம்பர் 24]

காப்பாற்றப்பட வேண்டும். எனவே, அதுகுறித்து ஆய்வு செய்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியில் இருக்கின்ற அரவக்குறிச்சி மருத்துவமனையில் போதிய டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அங்கே ஒரு டாக்டர் மட்டும் இப்போது பணியாற்றி வருகிறார். அதுபோன்று, என்னுடைய ஊரான பள்ளப்பட்டியில் 24 மணி நேர தாலுகா...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி துணை வினா ஆகும்? இப்படி இருந்தால், ஓர் உறுப்பினர் பாக்கி இல்லாமல் நான் பேச அனுமதி கொடுக்கவேண்டி வரும். இவ்வாறு கேட்பது இதுவே இறுதியாக இருக்கவேண்டும். வினாவைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையிலே பெண் டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக பெண் டாக்டர்களை நியமனம் செய்வதற்கும், மருத்துவமனை தலைவர் மற்றும் அலுவலர்கள் தங்குவதற்கும் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பள்ளப்பட்டிக்குச் சென்று அங்கு நடைபெற்ற அரசு மருத்துவமனை விழாவிலே கலந்து கொண்டேன். அப்போது அங்கே ஒரு பெண் மருத்துவர் இருந்தார். அதற்குப் பிறகு, அந்தப் பெண் மருத்துவர் வேறு இடத்திற்கு மாற்றம் வேண்டுமென்று கேட்டு..வேறு இடத்திற்கு சென்றுவிட்டார். இப்படிச் சில இடங்களிலே பெண் மருத்துவர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இத்தனைக்கும் தேர்வாணையத்திலே பெண் டாக்டர்களை அதிகமாகத் தேர்வு செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கம் வேண்டுகோளும் வைத்திருக்கிறது. அப்படி பெண் டாக்டர்கள் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்படுவார்களே யானால், மாண்புமிகு உறுப்பினர்கள், யார் யார் எங்கெங்கே கேட்டு இருக்கிறார்களோ அங்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து நிச்சயமாக நியமிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பலமுறை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில், தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் நடந்து பல கஷ்டங்கள் ஏற்படுகின்ற காரணத்தால், குரோம்பேட்டை பொது மருத்துவமனையில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட மார்ச்சுவரி வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறேன். இந்த நேரத்திலாவது அதற்கு அனுமதி தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, குரோம்பேட்டை, சென்னைக்கு அருகிலே இருக்கின்ற காரணத்தினால், சென்னையிலே இப்படிப்பட்ட வசதிகள் இருக்கிற காரணத்தினால், குரோம்பேட்டைக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. குரோம்பேட்டையைவிட, 100 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்தில் இப்படிப்பட்ட வசதிகள் செய்துதர வேண்டுமென்று அரசு முயற்சித்து, வாலாஜா போன்ற இடங்களில் எல்லாம் அந்த வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**26—**

### கடையநல்லூர் மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாக்குதல்

***16663—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் அரசு மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாக நிலை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் அரசு மருத்துவமனையை First Referral Unit-ஆக நிலை உயர்த்த கீழ்க்கண்ட தகுதிகள் உள்ளன.

52 படுக்கை வசதிகள்; மேலும் 22 படுக்கை வசதிக்கு ரூ.25 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. ஆக மொத்தம் 77 படுக்கை வசதிகள் உள்ளன. நல்ல அறுவை சிகிச்சை அரங்கு உள்ளது. போதுமான ஊழியர்கள் மற்றும் மருத்துவர்கள் உள்ளார்கள். 'ஸ்கேன்' மற்றும் 'எக்ஸ்ரே' வசதிகள் உள்ளன. மேலும், இந்த மருத்துவமனையைச் சுற்றி 9 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் சொக்கம்பட்டி, வடகரை, இடைகால், எலத்தூர், சாம்பவர், சேந்தமரம் ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு, கடையநல்லூர் அரசு மருத்துவமனையை First Referral Unit- ஆக நிலை உயர்த்தித் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே மனநிறைவு அடையக்கூடிய வகையிலே இங்கே தெரிவித்தார்கள். அரசு ஏற்கெனவே இருந்த 52 படுக்கைகளோடு, மேலும் புதிதாகக் கட்டடம் கட்டி, படுக்கை வசதிகளைச் செய்து தந்திருக்கிறது. அனைத்துப் பிரிவு ஊழியர்களையும் நியமித்திருக்கிறது. ஆனால், அங்கே First Referral Unit தொடங்குவதற்கான வாய்ப்பில்லை. ஏனென்றால், ஒரு மாவட்டத்திலே ஓரிடத்திலேதான் அரசு தலைமை மருத்துவமனை இயங்கமுடியும். ஏற்கெனவே நெல்லை மாவட்டத்திலே தென்காசியில் அரசு தலைமை மருத்துவமனை அமைந்திருக்கிற காரணத்தால், கடையநல்லூரில் அப்படிப்பட்ட மருத்துவமனையை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் மாவட்ட அரசு மருத்துவமனையில், மயக்க

மருந்து கொடுக்கும் மருத்துவ அலுவலர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார். அவர் விடுமுறையில் சென்றுவிட்டால், குறிப்பிட்ட நேரத்தில் அறுவை சிகிச்சை செய்யமுடியாத நிலை ஏற்பட்டு, அங்கே இருக்கக்கூடிய நோயாளிகள் எல்லாம் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அது மாவட்ட மருத்துவமனையாக இருக்கிற காரணத்தினால், போதுமான எண்ணிக்கையில் மயக்க மருந்து கொடுக்கும் அலுவலர்களை, பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே மயக்க மருந்து கொடுக்கக்கூடிய மருத்துவர்கள், மருத்துவமனைகளிலே மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல, ஓர் அரசு மருத்துவமனைக்கு ஒருவருக்கு மேல் நியமனம் செய்யமுடியவில்லை. அவர் லீவிலே சென்றாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய டாக்டர்கள் மயக்க மருந்து கொடுக்கக்கூடிய தகுதி படைத்தவர்கள்தான். இருந்தாலும், அந்தக் குறையைப் போக்குவதற்கு என்ன செய்ய முடியும் என்பதை அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்ட அளவிலான மருத்துவமனைகளில், இரத்த அழுத்தத்தைச் சோதிக்கக்கூடிய, இ.சி.ஜி. கருவியை இயக்கக்கூடிய பணியாளர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. அதனால், அந்தக் கருவி இருந்தும் பயனற்ற நிலையில் இருக்கிறது. எனவே, வட்ட அளவிலான மருத்துவனைகளில், இ.சி.ஜி. கருவிகளை இயக்கக்கூடிய பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ.சி.ஜி. கருவிகளை இயக்கக்கூடிய டெக்னீஷியன்கள் இல்லாத இடத்தில், டாக்டர்களே அவற்றைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இ.சி.ஜி. கருவியை இயக்குவதற்கு டெக்னீஷியன்கள் கிடைப்பதில்லை. இப்போதுதான், தமிழ்நாட்டில், புதிதாக அந்தப் படிப்புப் படிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டு, அந்தப் படிப்பைப் படித்துக் கொண்டு





வருகிறார்கள். அதிலே தேர்ச்சி பெற்று வருகிறவர்களை, முறையாக வேலை வாய்ப்பகம் மூலமாக இந்த அரசு தேர்வு செய்து நிரப்பும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மருத்துவமனையில் இ.சி.ஜி. டெக்னீஷியன் இல்லையென்று சொன்னால், அந்தப் பதவியை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இத்துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான், வட்டத் தலைநகரங்களுக்கு ஆம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டது. ஆனால் ஓட்டுநர்கள் நியமிக்கப்படவில்லை. விரைவில் அவர்கள் நியமிக்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஆம்புலன்ஸ் வேண்டும் என்று சொன்ன கோரிக்கையை ஏற்று ஆம்புலன்ஸ்கள் எல்லாம் பெரும்பாலும் வழங்கியாகிவிட்டது. அதை ஓட்டுவதற்கு ஓட்டுநர்கள் தேவை. நிதி இலாகாவிலே நிதிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் அவர்களை நியமிப்பதிலே கொஞ்சம் பிரச்சினை இருக்கிறது. இந்த அரசு நிதித் துறையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கான ஆணை பெற்று விரைவில் ஓட்டுநர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளயங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே உள்ள மேலப்பாளயம் ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் வாழக்கூடிய ஒரு பகுதி. அங்கே அரசு மருத்துவமனை இருக்கிறது. நம்முடைய அரசு ஏற்பட்ட பின்புதான் அங்கேயுள்ள மக்களுடைய பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அங்கே ஆறு டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு மாதத்திலேகூட அப்படி ஆறு டாக்டர்களும் பணியாற்றவில்லை. **Deputation** என்ற பெயராலே அவர்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய

கிராமங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆக, மேலப்பாளயத்தில் ஒரு டாக்டர்தான் அந்த மருத்துவமனையிலிருந்து பணியாற்றக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால் செவிலியர்களே மருந்துச் சீட்டு எழுதிக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த நிலையைப் போக்குகின்ற வகையில் அந்தப் பகுதி மக்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அங்கே ஆறு டாக்டர்களும் பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோள் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவர் பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அருகிலுள்ள சாத்தூரிலுள்ள அரசு மருத்துவமனையில் இரண்டு குழந்தைகள் நல மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவர் சிவகாசிக்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். ஆகவே அவரைப் பணிமாற்றம் செய்ய இயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு சொக்கர் அவர்கள் என்னிடத்திலே அந்த வேண்டுகோளை வைத்தார்கள். அதற்கான ஆணை இன்று பிறப்பிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் அரசு மருத்துவமனையில் ஒரே ஒரு மருத்துவர் பணியாற்றி வந்தார். அவரும் இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார். அருகிலிருக்கிற நாங்குநேரியிலிருந்து ஒரு மருத்துவர் வந்து செல்கிறார். ஆகவே அங்கு உடனடியாக இரண்டு மருத்துவர் களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. சி. கோபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**27–**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்குதல்

***8204—திரு. சி. கோபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், இறைவன்காடு ஊராட்சிக்கும் அப்புக்கல் ஊராட்சிக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோபு, இருக்கையில் இல்லை.

வினா எண் 28, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**28–**

### சென்னை மாநகரில் கொசுக்களைக் கட்டுப்படுத்துதல்

***14353–டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாககளுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 24

(அ) சென்னை மாநகரில் கொசுக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வளர்ச்சிப் பருவத்திலேயே கொசுக்களை ஒழிக்க எல்லா நீர் நிலைகளிலும் கொசுப்புழுக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு கொசு உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. கொசுக்களை ஒழிக்க கொசுக்கொல்லி மருந்துகள் புகை மூலம் பரப்பப்பட்டு வருகிறது. மேலும் நகரிலுள்ள கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை விஞ்ஞான முறையில் மூடவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 29, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**29–**

**குளிர்சாதன சேமிப்புக் கிடங்கு அமைத்தல்**

***9773—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர் சத்திரத்தில் மிளகாய் வற்றல் சேமித்து வைப்பதற்கு வசதியாக குளிர்சாதனம் கொண்ட சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை



1998 நவம்பர் 24]

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவூர் சத்திரத்தில் ஏராளமான விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்து வருகிறார்கள். அங்கு அவர்கள் உற்பத்தி செய்கிற மிளகாய் வற்றலைப் பாதுகாக்கப் போதுமான வசதி இல்லை. மிளகாய் வற்றலை விவசாயிகள் உற்பத்தி செய்கிற அந்த மிளகாய் வற்றலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் அங்கே குளிர்சாதன வசதி கொண்ட சேமிப்புக் கிடங்கை அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 1038 ஹெக்டேரில் அக்டோபர் வரை 1240 டன் மிளகாய்தான் உற்பத்தி ஆகியிருக்கிறது. இதுவரை அரசாங்கத்தின் சார்பில் மிளகாய்க்கு குளிர்பதனக் கிடங்கு எதுவும் இல்லை. ஆனால், மாநிலத்தில் தனியார்கள் 16 இடங்களில் குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் அமைத்திருக்கின்றார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே இதற்கென தனியாகக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கின்ற வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**30–**

**கடனா நதி அணையின் நீரின் கொள்ளளவைப் பெருக்குதல்**

***9502—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடனா நதி அணையின் நீரின் கொள்ளளவைப் பெருக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் கடனா நீர்த்தேக்கக் கொள்ளளவை 76.82 மில்லியன் கன அடி அதிகரிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 18 கோடியே 82 இலட்சம் 1998-99 ஆம் ஆண்டு பகுதி - 2 திட்டத்தின்கீழ் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, முடிவு செய்யும் நிலையில் உள்ளது.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன. அதோடு, இந்த அணையினுடைய கொள்ளளவு மண் மேடுகளால் ஏற்கெனவே நான்கில் ஒரு பங்கு குறைந்துள்ளது. இந்த அணையின் பாசனத்தில் உள்ள காங்கேயன் கால்வாய் கடைக்கோடி குளமாக உள்ளதால் அங்கே தண்ணீர் 6 ஆண்டுகளாகச் செல்வதே கிடையாது. கிட்டத்தட்ட 6, 7 குளங்களில் விளைச்சலுக்குத் தண்ணீரே வரவில்லை. எனவே, இந்த அணையை உயர்த்திக் கட்டுகின்ற பணியோடு சேர்த்துக் கால்வாய்கள் முழுவதையும் மராமத்துச் செய்து, கடைக்கோடி குளம்வரை தண்ணீர் செல்வதற்கு வழிவகைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன என்று உறுப்பினர் சொன்னார். திட்டத்திற்கான பணத்தை ஒதுக்கியவுடனேயே ஒரு வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி வைக்கமுடியாது. நில ஆர்ஜிதம் இருக்கிறது. அதிலே பல்வேறு பணிகள் இருக்கின்றன. இருந்தாலும், விரைவுபடுத்தி, அதனுடைய நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, இப்போது வேகமாகச் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த அணையின் கொள்ளளவை அதிகப்படுத்துவதனால் தண்ணீர் தேக்கி வைக்கமுடியும் என்பதோடு மட்டுமல்ல, அதிலே இருக்கின்ற அச்சம்பட்டு அணைக்கட்டு, ஆழ்வார்க்குறிச்சி தென்கால், அதற்குக் கீழே கீழ ஆம்பூர் பெருங்கால் திட்டம், மஞ்சம்புளி அணைக்கட்டு, காக்காநல்லூர் அணைக்கட்டு, காங்கேயன் அணைக்கட்டு, ஆகிய இந்த அணைக்கட்டுகளில் இருக்கின்ற கால்வாய்களுக்கும் சேர்த்து தண்ணீர் போகிற அளவு பணிகள் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. அ. அசோகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



31-

## திருவாரூரில் பணிமனையை இடமாற்றுதல்

***15860—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையினை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை கடைத் தெருவின் மையப் பகுதியில் அமைந்திருப்பதால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் பொதுமக்களுக்கு இடையூறாகவும் உள்ளது. இந்த நிலையினை சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு அண்மையிலே நேரிலே பார்வையிட்டு வந்துள்ளது. மேலும், திருவாரூர் நகரம் மாவட்டத் தலைநகராக அறிவிக்கப்பட்டதால், பேருந்துகளையும் விரிவுபடுத்தவேண்டியிருப்பதால், அதற்குப் பணிமனை வளாகம் தேவைப்படுகிறது. எனவே, அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் ஆதீனத்திற்குச் சொந்தமான இடம். ரூ.23,87,455 கொடுக்கப்பட்டு, 1989-லேயே அந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதை எதிர்த்து, அந்த நிலம் தனக்குச் சொந்தம் என்று தனியார் ஒருவர் வழக்குத் தொடர்ந்து, அதுவும் நீதிமன்றத்திலே தள்ளுபடி செய்யப்பட்டு, போக்குவரத்துக் கழகத்திற்கு ஆதரவாக நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. ஆகவே, அதே இடத்தில் பணிமனையை விரிவுபடுத்துகின்ற முயற்சியினை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

32—

**நீலாம்பூரிலிருந்து மதுக்கரை வழியாக புறவழிச்சாலை அமைத்தல்**

***2991—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கேரளாவை இணைக்கும் கோயம்புத்தூரை அடுத்த நீலாம்பூரிலிருந்து மதுக்கரை வழியாகச் செல்லும் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கேரளாவை இணைக்கும் கோயம்புத்தூரை அடுத்த நீலாம்பூரில் இருந்து மதுக்கரை வழியாக புறவழிச்சாலை அமைக்கும் திட்டம், 'கட்டுதல், நிர்வகித்தல், பின்னர் ஒப்படைத்தல்' (BOT) முறையில் செயல்படுத்துவதற்காக லார்சன் அண்டு டுப்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணி இப்போது நடைபெறுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு எத்தனை திட்டங்களுக்கு அனுமதி கோரியுள்ளது? எத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்கு அனுமதி வந்துள்ளது? விரைவில் அனுமதி பெற அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நேற்றையதினம் நான் விடையளித்தேன். தமிழ்நாட்டிலிருந்து இந்த ஆண்டு 2700 கி.மீ. தூரம் தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதிலே 1200 கி.மீ. வரை மத்திய சர்க்கார் தேசிய நெடுஞ்சாலையாக்குவதற்கு ஏற்றுக்கொண்டு, அறிவித்திருக்கிறது. இன்னும் அறிவிக்கை (Notification) வரவில்லை. அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர், சாலைகள், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்காக மத்திய அரசை மாநில அமைச்சர்கள் அணுகுவதே கிடையாது என்று ஆதங்கப்பட்டுக் கொண்டாரே; ஆகவே, நீங்கள் தரைவழிப் போக்குவரத்து அமைச்சரிடம் இந்தத் திட்டம் சம்பந்தமாக, தமிழ்நாட்டின் திட்டம் சம்பந்தமாக பேசியிருக்கிறீர்களா? நீங்கள் சொல்லுவது, அதிகாரியிடம் மனு கொடுத்திருக்கிறோம், துறை மந்திரியிடம் மனு கொடுத்திருக்கிறோம், எங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, அவர்கள் சொல்வது உண்மையா? நீங்கள் சொல்வது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரொம்ப பழைய செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதுகுறித்து பலமுறை மத்திய அமைச்சர் என்னிடம் பேசியிருக்கிறார், நானும் அவரிடம் பேசியிருக்கிறேன். தமிழக அதிகாரிகள் மத்திய அரசு அதிகாரிகளிடம் பேசியிருக்கிறார்கள். மத்திய அரசு அதிகாரிகளே, தரைவழிப் போக்குவரத்துத் துறை அதிகாரிகளே, இங்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். எனவே, சமுகமாக காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர் இடையிலே ஏதாவது கொக்கி போட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

33—

**நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் மூலம் வழக்குகள் தீர்வு**

***17833—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் நுகர்வோர் குறைதீர் மன்றம் உள்ளது?

(ஆ) அதன்மூலம் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் சென்னை (தெற்கு), சென்னை (வடக்கு), செங்கல்பட்டு, விழுப்புரம், கோயம்புத்தூர், திண்டுக்கல், விருதுநகர், கன்னியாகுமரி, மதுரை, நீலகிரி, வேலூர், ஈரோடு, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, தர்மபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, திருநெல்வேலி என 24 மாவட்ட குறை தீர்க்கும் அமைப்புக்கள் செயல்படுகின்றன.

(ஆ) அதிலே 30-9-1998 வரை 38,815 வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்குகள் தேங்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த வழக்குகளையெல்லாம் விரைந்து முடிப்பதற்கு அரசு உரிய உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் 30-4-1998 வரை 1227 வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து நிறைய வழக்குகள் இருக்குமானால் அவற்றை விரைவுபடுத்தித் தீர்ப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 34, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**34—**

**பெண்களுக்கென தொழிற் பயிற்சிப் பள்ளி**

***15328—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் பெண்களுக்கென தனியாக தொழிற் பயிற்சிப் பள்ளி (I.T.I.) தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, அரக்கோணம் நகரம், வளர்ந்து வருகின்ற நகரம். அது, மொத்த வாக்காளர்களில் ஆண் வாக்காளர்களைவிட, பெண் வாக்காளர்கள் அதிகம் உள்ள தொகுதியாகும். 33 விழுக்காடு பெண்களுக்கு என்று வேக வேகமாக இடஒதுக்கீட்டினைச் செயல்படுத்துகிற இந்தக் கால கட்டத்தில், அரக்கோணம் நகரில் செயல்பட்டுக்கொண்டு வருகின்ற தொழிற் பயிற்சிப் பள்ளியில் வெறும் 59 பெண்கள்தான் தொழிற்பயிற்சி பெற்று வருகிறார்கள். அரக்கோணத்தைச் சுற்றியுள்ள வேலூர், காஞ்சிபுரம் மற்றும் சென்னை போன்ற இடங்களிலிருந்து பெண்கள் வெளியிலே சென்றுதான் தொழிற் பயிற்சி பெற்று வருகிறார்கள். எனவே, என்னுடைய அரக்கோணம் நகரத்திலே பெண்களுக்கு என்று ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசினுடைய தொழிற் பயிற்சி நிலையம் அரக்கோணத்திலே ஒன்று இருக்கிறது. அதிலே இடஒதுக்கீட்டு முறை அடிப்படையில் 30 சதவீதம் பெண்கள் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். . அதுமட்டுமல்லால் இரண்டு தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் - Sri Krishna I.T.I., Tamil Nadu Technical Training Institute - அரக்கோணத்தில் செயல்பட்டு வருகின்றன. இதிலும் பெண்களுக்கு இடம் தருகிறார்கள். ஆகையினால் தனியாக பெண்களுக்கென்று ஓர் ஐ.டி.ஐ. தொடங்க வேண்டிய அவசியம் இப்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

35—

## ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்தல்

***20038—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்குப் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு.ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம் இருக்கையில் இல்லை.

வினா எண் 36, திரு. ஜி.எல். வெங்கடாசலம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

36—

## பாலக்கோட்டில் தொழிற்பேட்டை

***15996—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு தொகுதி, பாலக்கோட்டில் தொழிற்பேட்டை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு தொகுதியில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.





**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 3 ஆண்டுகளில் 50 தொழிற்பேட்டைகள் தொடங்கப்படும் என்று அறிவித்து, அதன்மூலம் 17 இடங்களில் தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருவதாக அறிகிறேன். பாலக்கோடு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. எங்கள் தொகுதியிலே உள்ள இளைஞர்களின் வேலைவாய்ப்பைக் கருத்திற்கொண்டு, கலைஞர் அவர்களுடைய பொன் விழா ஆண்டை, அவர்கள் நினைவு கூர்கின்ற வகையில் பாலக்கோடு தொகுதியில் தொழிற்பேட்டை தொடங்கப்பட்டு அதன் மூலமாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று கேட்கின்ற அதேநேரத்தில் எங்களுடைய பாலக்கோடு ஒன்றியம் மிகவும் பின்தங்கிய ஒன்றியமாக இருக்கிறது. அங்கே சிறு தொழில் செய்ய அரசிடம் கடன் பெறுகின்ற தொழில் முனைவர்களுக்கு மானியம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து வழங்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, தருமபுரி மாவட்டத்திலே இதுவரை கிட்டத்தட்ட பெரிய தொழிற்கூடங்கள் ஐந்தும், 20 சிறிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அதிலே, குறிப்பாக பர்கூரிலும் ஊத்தங்கரையிலும் கட்டப்பட்டிருக்கின்ற தொழிற்கூடங்கள் முழுமையாக இன்னும், பலமுறை நாங்கள் பத்திரிகையிலே அறிவித்தும், அதோடுமட்டுமல்லாமல் அதனுடைய விலையை எந்த அளவிற்கு அரசுக்கு செலவானதோ அந்த அளவிற்குக்கூட வழங்கலாம் என்று பரிசீலித்து முன்வந்தாலும், விற்பனையாகாத சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, மீண்டும் பாலக்கோடு தொகுதியிலே தொடங்க வேண்டுமென்றால், அங்கே தொழில் முனைவர்கள் முன்வந்தால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. கு. மனோகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

37—

## கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை

***5954—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) சிலையை குறித்த காலத்தில் அமைக்க சிலை அமைப்புக் குழு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைப் படிக்கிறேன்.

(அ) கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவுவதற்கு சிலை மற்றும் ஆதார பீடத்திற்குத் தேவைப்படும் மொத்த கற்கள் 3681-ல் இதுவரை 3072 கற்கள் செதுக்கி முடிக்கப்பட்டு 38 அடி உயரத்திற்கான ஆதார பீடம் அமைக்கின்ற பணி 11-10-1998 அன்று முடிக்கப்பட்டுள்ளது. 12-10-1998 முதல் ஆதார பீடத்திற்கு மேல் வைக்கப்படவுள்ள 95 அடி உயர சிலைக்கான 5 அடி உயரம் உள்ள கற்கள் அமைக்கும் பணியில், ஒரு அடிக்கு முடிவுபெற்றுள்ளது. மொத்தத்தில் இதுவரை 43 அடி உயரம் சிலை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. தொடர்ந்து சிலை அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. திட்டமிட்டபடி 1999 ஆகஸ்ட் திங்கள் இறுதிக்குள் சிலையை அமைக்கும் பணி நிறைவுபெறும்.

(ஆ) திருவள்ளுவர் சிலையை குறித்த காலத்திற்குள் அமைக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. எனவே, சிலையை குறித்த காலத்தில் அமைக்க சிலை அமைப்புக் குழு ஒன்று அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு தமிழகத் தலைநகரிலே



வள்ளுவர் கோட்டம் கண்ட இந்த அரசு, தென்குமரி முனையிலே திருவள்ளுவர் சிலை எழுப்ப 1975-ல் முடிவுசெய்து, அதற்குப் பிறகு 1990-லே விழா தொடங்கப்பட்டு, அதற்குப்பிறகு அந்த வேலை தொய்வு அடைந்து, மீண்டும் 1996-லே ஆணையிடப்பட்டு, இதுவரை அந்தச் சிலை அமைக்கும் பணி முற்றுப்பெறவில்லை. ஆகவே, அந்தச் சிலையை குறித்த காலத்தில் திறந்திட அரசு ஒரு குழுவை அமைத்து விரைவுபடுத்திட வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதுடன், அந்தச் சிலை அமைப்புக்கு இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது, அந்தச் சிலையின் தோராய மதிப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 6-9-1990 அன்று திருவள்ளுவர் சிலைக்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வந்தன. கடந்தகால ஆட்சியில் திருவள்ளுவர் சிலைக்கான நிதி ஒப்பளிப்பு 1-3-1995 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, அந்தப் பணிகள் நடைபெறாமல் இருந்தன. மீண்டும் கலைஞர் நான்காவது முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், 12-12-1996 முதல் அந்தப் பணிகள், கலைஞர் அவர்களுடைய அறிவுரைகளுக்கேற்ப முடுக்கிவிடப்பட்டு, விரைவாக நடைபெற்று வருகின்றன. மேலும், அந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக 25-6-1997 அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் கோட்டையில், சிற்பி கணபதி ஸ்தபதி மற்றும் கட்டுமானக் கழக அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று, அந்தக் கூட்டத்தில் திருத்திய மதிப்பீடு ஒன்றும் தயாரிக்கப்பட்டு, நிதி ஒப்புதலும் வழங்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது வேகமாக நடைபெற்று வருகின்றன. ஸ்தபதிக்கு மாதம் ஒன்றுக்கு 25 இலட்சம் ரூபாய் அளவிற்கு பணிகள் முடிக்கப்பட்டு, பணம் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காக 3 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஆய்வுசெய்து மாதாமாதம் அவர்களுக்குரிய பணமும் வழங்கப்படுகிறது. அந்தக் குழுவில் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப் பணித் துறை, திருநெல்வேலி, கண்காணிப்புப் பொறியாளர், தூத்துக்குடி, செயற் பொறியாளர், பொதுப் பணித் துறை, நாகர்கோவில் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். மாதாமாதம் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆணைக்கேற்ப, நானும்

துறை அதிகாரிகளும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அந்தப் பணிகளை முடுக்கிவிட்டு, வேகமாக நடைபெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்து வருகிறோம். அந்தப் பணியைத் தொடங்குவதற்காக முதலில் ஒதுக்கப்பட்ட நிதியில் சிற்பிக்காக ரூ.360.15 இலட்சமும், கட்டுமான கழகத்திற்கு ரூ.137.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. அன்றைய மதிப்பீடாக ரூ.497.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி ஸ்தபதி அவர்களுக்கு ரூ.614 இலட்சமும், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்கு ரூ.172 இலட்சமும் மொத்தமாக ரூ.786 இலட்சம் மதிப்பீட்டில் அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. ஸ்தபதி அவர்களுக்கு இதுவரையில் 398.83 இலட்சம் கட்டுமானக் கழகத்திற்கு ரூ. 143 இலட்சமும், மொத்தத்தில் இதுவரையில் ரூ. 541.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு வருகின்ற திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் அந்தப் பாறைப் பகுதியிலே மிகப் பெரிய ஓடை ஒன்று இப்போது புதிதாக உருவாகி இருக்கின்றது. கிட்டத்தட்ட ஐம்பது, அறுபது அடி ஆழத்திற்கு அந்த ஓடை இருக்கிறது. அதனால் கடல் நீர் திருவள்ளுவர் சிலையினுடைய பாதம் வரைக்கும் வந்து செல்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால் அந்தப் பகுதியிலே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு ஆபத்து ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே, அதனைச் சரி செய்வதற்கு அந்தப் பகுதியில் முழுவதுமாக கான்கிரீட் தளம் அமைத்து அந்தச் சிலை அமையவிருக்கின்ற பகுதியைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கப்பலோடைப் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்ற அந்தக் கசிவையும் அந்தப் பகுதியையும் செம்மைப்படுத்துவதற்காக ஐ.ஐ.டி. நிபுணர்கள் சென்று பார்த்து அதற்கான மதிப்பீடுகளையெல்லாம் தயாரித்து இப்போது அந்தப் பணியைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு வேகமாக எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுரியில் திருவள்ளுவருடைய சிலையை அமைக்கும் பகுதியில், அதாவது சிலையினுடைய ஆதார பீடம்வரையிலும் கடல் அலையினுடைய வேகம் மிக அதிகமாக இருந்த காரணத்தினால் அந்தப் பணியிலே ஒரு சமயத்தில் தடை ஏற்பட்டது. இந்தத் திருவள்ளுவர் சிலைக்கும் அந்த ஆதார பீடத்திற்கும் 100 அடிக்குத் தள்ளி, கடல் அலை மோதாத அளவிற்கு மிகப் பெரிய பாறைகளையோ அல்லது கான்கிரீட் பிளாக்ஸ் போன்றவைகளைப் போட்டோ அலையினுடைய வேகத்தைத் தடுத்து நிறுத்தி அதனை முழுமையாக பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்கின்ற ஒரு கருத்து இருக்கிறது. எனவே, அதைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கு ஏற்பதான் ஐ.ஐ.டி. நிபுணர்கள் இரண்டு, மூன்று முறை சென்று பார்த்து இருக்கிறார்கள். மேலும், கட்டுமானக் கழகத்தினுடைய அதிகாரிகள், பொதுப் பணித் துறையினுடைய அதிகாரிகள் எல்லோரும் கலந்து பேசித்தான் அலைகள் அடிக்காமலும், தொய்வின்றிப் பணிகள் நடைபெறுவதற்கும், எந்தக் காலத்திலும் ஆபத்து இல்லாத நிலையில் அந்தச் சிலை சிறப்பாக அமைவதற்கும் ஏற்றவகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**38—**

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

***17947—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, வேடந்தாங்கல் பகுதியில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

[1998 நவம்பர் 24

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல் பகுதியைச் சுற்றி 20, 25 கிலோ மீட்டர் தொலைவில்தான் கால்நடை மருத்துவமனை இருக்கிறது. மேலும் இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத் தொடக்க விழாகூட இங்கு நடைபெற இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து இந்த நிதியாண்டிலாவது இதுகுறித்து அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, வேடந்தாங்கல் கிராமத்தில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடைக் கிளை நிலையமோ தற்போது இல்லை. ஒரு கால்நடை மருத்துவமனையை அமைக்க வேண்டுமானால் ஏற்கெனவே மருந்தகம் ஒன்று இயங்கினால்தான் மருத்துவமனையாக நிலை உயர்த்த முடியும். மேலும், ஒரு மருந்தகத்தைத் தோற்றுவிக்க நாள் ஒன்றுக்கு அந்தப் பகுதியிலிருந்து 40 கால்நடைகள் சிகிச்சைக்காக வரவேண்டும். தற்சமயம் 7 கிலோ மீட்டர் தூரத்தில் கருங்குழியில் கால்நடைக் கிளை நிலையமும், வேடந்தாங்கலைச் சுற்றி எண்டத்தூரில் 10 கிலோ மீட்டரில் கால்நடை மருந்தகமும், தண்டலம் கிராமத்தில் 12 கிலோ மீட்டர் தூரத்தில் கால்நடைக் கிளை நிலையமும், மதுராந்தகத்தில் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஆண்டுகளில் தேவைகளின் அடிப்படையில் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1998 நவம்பர் 24]

39—

### திரவ நைட்ரஜன் ஆலை மற்றும் உறை விந்து நிலையம்

***21495—டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலேயே அதிகமாக செயற்கை முறை கருவூட்டல் கால்நடைகளுக்கு செய்யப்படும் கன்னியாகுமரி மாவட்டத்தில் திரவ நைட்ரஜன் ஆலை மற்றும் உறை விந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபற்றி செயற்குறிப்பு எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. பொ்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அபிஷேகப்பட்டியிலிருந்துதான் குமரி மாவட்டத்திற்கு உறை விந்து வரவேண்டியுள்ளது. காலதூரம் இருப்பதால் அது கெட்டுப்போய்விடும் சூழ்நிலை இருப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் வேதனைப்படுகிறார்கள். குமரி மாவட்டத்தில் திங்கள் நகரில் இதுபோன்ற நிலையம் அமைப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாகக் கால்நடைத் துறை அலுவலர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே விரிவுபடுத்துகின்ற வகையில் குமரி மாவட்டத்தில் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கெனவே 10 திரவ நைட்ரஜன் ஆலைகளும், 4 உறைவிந்து உற்பத்தி நிலையங்களும், 12

உறைவிந்து வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன. திரவ நைட்ரஜன் மேலும் தேவைப்படும்போது அவை தனியாரிடம் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரு மருத்துவமனை, மருத்துவமனை, மருந்தகங்கள், நடமாடும் மருந்தகப் பிரிவு என்ற வகையில் 72 இடங்களில் இந்த செயற்கை முறை கருவூட்டல் கால்நடைகளுக்காக செய்யப்படுகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இன விருத்திக்கேற்ற கால்நடைகளின் எண்ணிக்கை 1997-98 ஆம் ஆண்டின் கணக்குப்படி 69,353 ஆகும். இவற்றில் 60,926 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் சென்ற ஆண்டு செய்யப்பட்டிருக்கிறது. உறை விந்துக் குச்சி அல்லது திரவ நைட்ரஜன் மூலம் கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவிதமான பாதிப்பும், தேக்கமும் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகிலுள்ள திருநெல்வேலி மாவட்ட அபிஷேகப்பட்டியில் உறை விந்து உற்பத்தி செய்யும் நிலையம் உள்ளது. மேலும் புதியதாக ஒரு உறை விந்து உற்பத்தி நிலையமும், திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையமும் அமைக்க வேண்டுமானால் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் இதனை அமைக்க தற்போது தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அனைத்தும் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கின்றது. கல்லூரிகளைத் திறப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படுகின்ற கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் தமிழ்நாட்டில் இருக்கின்ற கால்நடை ஆய்வாளர்களுக்குப் பதிலாக தங்களை நியமனம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்தக் கல்லூரியில் பெரிய வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்ததோடு, வன்முறைகளைக் கட்டவிழ்த்த காரணத்தினால், அரசு பரிசீலித்து கல்லூரிகளை மூட உத்தரவிட்டது. தற்போது கல்லூரிகளைத் திறப்பதற்காக அந்தக் கல்லூரி நிர்வாகத்தின் மூலமாக கல்லூரி மாணவர்களுடைய பெற்றோர்களுக்கு ஒரு உறுதிமொழி ஆணை அனுப்பப்பட்டு ஏறக்குறைய 1,140 பேர்களுக்கு உறுதிமொழி ஆணை வழங்கப்பட்டு 120 பேர்தான் அனுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்து அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே தேர்வாணைக் குழு மூலம் அல்லாமல் படித்த கால்நடை பட்டதாரிகளுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என்றும், அதைப்போல 2126 கால்நடைக் கிளை நிலையங்களையும் உடனடியாக கால்நடை மருந்தகங்களாக, மருத்துவமனைகளாக நிலை உயர்த்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் தற்போது சாத்தியமில்லை என்பதால் மீண்டும் பெற்றோர்களை அழைத்துப் பேசுவதற்காக உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு, நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. ஏறக்குறைய நான்கு மாதங்களாக இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரி மூடப்பட்டுக் கிடக்கிறது. மாணவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரில் சென்று தந்த வாக்குறுதியின் அடிப்படையிலே அந்த உண்ணாவிரதம் திரும்பப்பெறப்பட்டது. இன்று காலையிலேகூட அந்த மாணவர்கள் எல்லாம் சந்தித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே நேரடியாகத் தலையிட்டு - ஏற்கெனவே அமைச்சரவர்கள் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தியும் சுமுகத் தீர்வு ஏற்படவில்லை. நான்கு மாதங்களாக இந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு -- பேச்சுவார்த்தை நடத்தி, நிர்வாகத்தினரையும், பல்கலைக்கழகத்தினரையும், மாணவர் பிரதிநிதிகளையும், பெற்றோர் பிரதிநிதிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, அந்தக் கல்லூரியை உடனடியாகத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து நானும்

பேசியிருக்கிறேன். மாணவர்களுக்கு அவர்கள் எதை விரும்புகிறார்கள், சாத்தியமானவைகளை கோரிக்கைகளாக வைக்கிறார்களா அல்லது சாத்தியமற்றவைகளை கோரிக்கைகளாக வைக்கிறார்களா என்பதை அறியாமல், ஒரு போராட்டம் என்றாலே அதை ஆதரித்து விடுவது என்கிற நிலைமைக்கு நாமும் செல்லக்கூடாது. நான்கூடத் தேவையில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களே அந்த மாணவர்களோடு பேசி, அவர்களுடைய கோரிக்கை நியாயமானது, செய்யக் கூடியது என்று அவர்கள் தனக்கே ஒரு திருப்தி அடைவார்களேயானால் அதுபற்றி இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

முற்பகல் 10-35

**திரு. எஸ்.திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விவாதம் கிடையாது. அவர்கள் கருத்தைச் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு நான் அனுமதிக்க முடியாது.

வினா எண் 40, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

40—

### தாட்கோ மூலம் நீர்மூழ்கி இயக்கிகள்

***4855—திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், நெய்வேலி பகுதியைச் சுற்றியுள்ள ஆதிதிராவிட விவசாயிகளுக்கு தாட்கோ மூலம் மானியம்/கடன் அடிப்படையில் நீர்மூழ்கி இயக்கிகள் வாங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் தாட்கோவின் செயல் திட்டத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் ஆதிதிராவிட மக்களை விவசாயத்தில் ஈடுபடுத்திட ஊக்கப்படுத்தும் பொருட்டு, தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா? மேலும், தமிழகத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு முறையில் ஆதிதிராவிட மக்கள் விவசாயம் செய்வதற்கு தாட்கோ மூலம் கிணறு, பம்ப்செட் மற்றும் பைப் லைன்கள் எல்லாம் போடப்பட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவை கிடப்பில் போடப்பட்டுள்ளதை அரசு அறியுமா? அதை நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் தற்சமயம் மானியத்துடன் கடன், டீசல் பம்ப்செட் மற்றும் மின்சார பம்ப்செட்டுகளுக்கு மட்டுமே ஆதிதிராவிட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் தாட்கோவின் மூலம் நீர்மூழ்கி இயக்கிகள் வாங்க எவரும் விண்ணப்பிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெய்வேலி பகுதிக்கு இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படுமா என்று கேட்கின்றார். இதை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறுவதற்காக பம்ப் செட் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி தாட்கோ மூலமாக எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆதிதிராவிட மக்களுக்காக தமிழக அரசு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, எனது தொகுதியிலுள்ள மேல்புவனகிரி ஒன்றியம், கத்தாழை கிராமத்திலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால், தற்சமயம் நெய்வேலி நிலக்கரி சுரங்க நிர்வாகம், அவற்றையெல்லாம் நில ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறது. எனவே, ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்த நிலத்தை மீண்டும் வேறு இடத்தில் கொடுத்து, நிலப்பட்டா வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா அல்லது

நிலக்கரி சுரங்க நிர்வாகத்திடமே அரசு வற்புறுத்தி வேறு இடம் வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்தப் பிரச்சினையை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் உங்களுடைய கோரிக்கையை மனுக்கள் மூலமாகத் தந்தால், சம்பந்தப்பட்ட நிர்வாகத்துடன் பேசி, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) காவல் துறையினரால் விசாரிக்கப்பட்ட சென்னையைச் சார்ந்த சித்ரா என்பவர் மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. சென்னையைச் சார்ந்த சித்ரா என்ற பெண் மரணம் அடைந்ததைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. லா. சந்தானம், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பாகவும், திரு. ஐ. கணேசன், திரு. டி. மணி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் கவன ஈர்ப்பாகவும் எடுத்துக்கொள்ள அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அனைத்தையும் சிறப்புக் கவன ஈர்ப்பாக மாற்றி, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலில் பேச அழைக்கின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதி கேட்டிருந்தேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முடிந்த பிறகு பார்க்கலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறொரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பில் இப்போது பேச அனுமதித்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பெயர் இதில் இல்லையே; இருந்தால் கூப்பிடுகிறேன். இப்போது, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, வளசரவாக்கம், ஆழ்வார்த் திருநகர் பகுதியில் இருக்கக்கூடிய கிரி தெருவில் வசிக்கின்ற ரவி என்பவருடைய மனைவி சித்ரா என்கிற பெண்ணை, அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி அமைந்தகரையைச் சார்ந்த காவல் நிலைய அதிகாரிகள் மாருதி வேனிலும், ஜீப்பிலும் இரவு 10 மணிக்கு சித்ராவினுடைய வீட்டிற்கு வந்து சித்ராவையும் அவருடைய தம்பி சிவாவையும் அழைத்துச் சென்று, காவல் நிலையத்திலே அன்று இரவு 2 மணி வரை விசாரித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, அவருடைய கணவர் ரவி என்பவர் அமைந்தகரையிலுள்ள விக்னேஸ்வரா டிரேடர்ஸ் என்கிற இரும்புக் கடையில் விற்பனையாளராக பணியாற்றிய இடத்திலே 2 இலட்ச ரூபாய் களவுபோன காரணத்தினாலே, அந்தக் கடையின் உரிமையாளர் புகார் அளிக்க, அந்தப் புகாருடைய அடிப்படையிலே ஏற்கெனவே ரவி என்பவரை அழைத்துச்சென்றும், அவருடன் பணியாற்றுகின்ற இன்னொருவரையும் அழைத்துச் சென்று விசாரித்தபோது, திருட்டுப் பொருட்களை விற்ற பணத்தை தன்னுடைய மனைவியிடம் கொடுத்து வைத்திருப்பதாகச் சொன்னதன் அடிப்படையிலே சித்ராவை அழைத்துச் சென்று விசாரித்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாலை 6 மணிக்கு மேல் பெண்களை அழைத்துச் சென்று காவல் நிலையத்திலே வைக்கக்கூடாது, விசாரிக்கக்கூடாது என்கிற விதியை நம்முடைய அரசு கடுமையாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிற காலகட்டத்தில், அமைந்தகரை காவல் நிலையத்தைச் சார்ந்திருக்கின்ற

காவலர்கள் சித்ராவை அழைத்துச் சென்று சித்ராவினுடைய தம்பியை வெளியே அமர வைத்துவிட்டு 3 மணி நேரம் உள்ளே விசாரித்தபோது அழுகுரல் கேட்டதாகவும் பிறகு 2 மணிக்கு கைத்தாங்கலாக 4 காவலர்கள் அந்தப் பெண்மணியை காவல் நிலையத்திற்கு உள்ளே இருந்து அழைத்துவந்து, சிவாவையும் உடன் ஏற்றிக்கொண்டு மாருதி வேனிலே கொண்டுபோய் இரவு இரண்டு மணிக்கு அவருடைய இல்லத்திலே விட்டுவிட்டு வந்ததாகவும் பிறகு சித்ரா தற்கொலை செய்து கொண்டதாகவும் அந்த வீட்டினுடைய உரிமையாளர் ஒரு புகாரை மதுரவாயல் காவல் நிலையத்திலே கொடுக்கிறார்.

*முற்பகல் 10-40*

ஏற்கெனவே அந்தப் பெண்மணி 4,5 காவலர்களாலே கற்பழிக்கப்பட்டு அதனால் அவமானம் தாங்காமல் இறந்து விடுவதாகவும், தான் 5 மாத கர்ப்பிணி என்றும் ஒரு கடிதம் இருந்ததாகவும் சொல்கிறார்கள். ஆனால், காவல் துறை அந்தக் கடிதம் பொய் என்றும் இது விஷமிகளுடைய வேலை என்றும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. கற்பழிக்கப்பட்டதற்காக ஏற்கெனவே போஸ்ட்-மார்ட்டத்திற்கு அனுப்பியபோது கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே 3 மருத்துவர்கள் கொண்ட குழு போஸ்ட்-மார்ட்டம் செய்து பார்த்தபோது இதிலே கற்பழிப்புக்கு எந்தவிதமான அடையாளமும் இல்லை என்கிற கருத்தைச் சொல்லியிருக்கிறது. தூக்கு போட்டுக்கொண்ட காரணத்தினால்தான் அந்தப் பெண்மணி இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறுநாளே அக்டோபர் 13-ந் தேதி இதுபோன்ற ஒரு புகார் வந்த உடனேயே இதில் சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய, அல்லது சந்தேகப்படக்கூடிய 5 காவலர்களை இடைக்கால பணி நீக்கம் செய்திருப்பதை, நடவடிக்கை எடுத்திருப்பதை நிச்சயமாக நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இதுபோன்ற சங்கதிகளை 6 மணிக்கு மேலே விசாரிக்கக்கூடாது, பெண்களைக் காவல் நிலையத்திலே வைக்கக்கூடாது என்று ஏற்கெனவே அரசு உத்தரவு போட்டிருந்தும்கூட காவலர்கள் அழைத்துச் சென்று இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெறுவதற்கு வழிவகுத்துவிட்டது உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இதிலே மேற்கொண்டு என்ன புலன் விசாரணையில் தெரிந்திருக்கிறது; அந்தக் கடிதம் காவல் துறையினர் சொன்னதுபோல் பொய்யான கடிதம்தானா; இதனுடைய உண்மை





என்ன; நடந்தது என்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் பகுதி மீனாட்சியம்மன் நகர் அருகே சித்ரா என்பவர் தற்கொலை செய்து கொண்டது பற்றிய செய்திகள் பரபரப்பாக தமிழகம் எங்கும் பேசப்படுகிறது.

காவல் நிலையத்தில் மாலை 6 மணிக்கு வைக்கக்கூடாது என்ற விதியை மீறி அவரை விசாரணைக்காக அழைத்துச் சென்று திரும்பவும் அனுப்பிய நிலையிலே அவர் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி வந்திருக்கிறது. இதிலே குறிப்பாக அப்படித் தவறாக நடந்து கொண்ட காவலர்கள், அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்ற செய்தி வரவேற்கக்கூடிய ஒன்று. குறிப்பாக அந்தப் பகுதியில் வேறுவிதமான செய்திகளும் வந்தவண்ணம் இருக்கின்றன. தற்கொலை செய்துகொண்ட சித்ரா, தானே கைப்பட கடிதம் எழுதியதாகவும் அதை ஜெராக்ஸ் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கடிதத்திற்கும், அந்தச் செய்திக்கும் மாறாக அது சித்ரா எழுதவில்லை என்ற ஒரு செய்தியும் வெளிப்பட்டு இருக்கிறது. ஆகவே இதிலே சமூக விரோத சக்திகளும் தலையிட்டிருப்பார்களோ என்ற அச்சம் ஏற்பட்டு இருக்கிறது. அதேபோல இப்படித் தொடர்ந்து இந்த மாதிரியான சம்பவங்கள் நடைபெறுகிறபோது நம்முடைய தமிழ்நாடு அரசு எச்சரிக்கையோடு இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்வதோடு, இப்படிப்பட்ட தவறான நடவடிக்கையிலே ஈடுபடுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லால் நிரந்தரமாகவே இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாத வண்ணம் தடுப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். இந்தச் செய்திகளை எல்லாம் பார்க்கிறபோது இதிலே அரசியல் ஆதாயம் தேடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது என்பது கடந்த சில தினங்களாக பத்திரிகைச் செய்தியின் வாயிலாகப் பார்க்கிறேன். ஆகவே இதிலே அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிற சக்திகளையும் தமிழ்நாடு அரசு எச்சரிக்கையோடு இருந்து முறியடிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்:

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்ரா வழக்கில் இது கொலையா, தற்கொலையா, தற்கொலை என்றால் அதற்குக் காரணம் போலீஸின் சித்ரவதையா அல்லது அவரது கணவனின் திருட்டுத்தனத்தால் ஏற்பட்ட அவமானமா என்ற பல்வேறு கருத்துக்கள் நிலை கொண்டிருக்கின்றன. எது எப்படி இருந்த போதிலும் இதற்கெல்லாம் பயந்துகொண்டு 6 மணிக்குமேல் ஒரு குற்றவாளியை அழைத்து விசாரிக்கக்கூடாது என்பது காவல் துறை கையைக் கட்டுவதுபோல் இருக்கிறது.

முற்பகல் 10-45

தமிழகத்தில் பல ஏரியாக்களிலே கொலைகள், கற்பழிப்புகள் அல்லது திருட்டுகள் போன்ற பிரச்சினைகளில் காவலர்கள், நாங்கள் 6 மணிக்குமேல் சென்று யாரையும் விசாரிக்க மாட்டோம் என்று சொல்கின்ற ஒரு தேக்கமான நிலை நிலவிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, கற்பழிப்பவர்கள் காலையில்தான் கற்பழிக்க வேண்டும். மாலையில்தான் கற்பழிக்க வேண்டும் அல்லது இரவில்தான் கற்பழிக்க வேண்டும் என்ற நிலை இல்லை. ஆகவே, பெண்களை விசாரிப்பதற்கு அல்லது ஆண்களை விசாரிப்பதற்கு நேரம் காலம் என்று இல்லாமல், வேண்டுமென்றால் பெண்களை விசாரிப்பதற்கு பெண் காவலர்களை வைத்து அழைத்து அவர்களை விசாரிப்பதற்கு காவல் துறைக்கு அனுமதி வழங்க வேண்டும். ஏனென்றால் சமீபத்திலே நாகையிலே நடந்த வழக்கு ஒன்றில் நாங்கள் காவல் நிலையத்திற்குச் சென்றபோது 'இரவு நேரமாக இருக்கிறது, காலையிலே வாருங்கள்' என்றார்கள். குற்றவாளி தப்பித்துவிடுவான் என்று நாங்கள் சொன்னபோது, நாங்கள் என்ன செய்வது, அரசு இந்த மாதிரி நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். இந்நிலை நாகையில் மட்டும் அல்ல, எல்லா இடங்களிலேயும் இருக்கிறது. எதற்கோ பயந்துகொண்டு எதற்கோ போகக்கூடாது என்கிற கதையாக இருக்கிறது. முதலைக்கு பயந்துகொண்டு குளத்திற்குப் போகாமல் இருக்கமுடியாது. முதலையைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். திருட்டு கம்ப்ளெயின்ட் வந்திருக்கின்றது, பணம் வீட்டிலே இருப்பதாகக் கூறுகின்றார்கள். இதில் இரவு, காலை என்று பார்த்தால் அந்தக் குற்றவாளி தப்பித்துவிடுவான். மேலும் அந்தப் பணத்தை மறைப்பதற்கோ அல்லது குற்றங்களை, தடையங்களை மறைப்பதற்கோ அது பயன்படக்கூடும். ஆகவே





போலீசாருடைய நடவடிக்கையும் நாட்டிற்கு வேண்டும். அதில் ஒருவன் தவறு செய்யலாம். அதற்காக முழு போலீசையுமே ஸ்தம்பித்து செயலிழக்க வைத்துவிடக்கூடாது. அது நாட்டின் நலனுக்கு நல்லதல்ல. ஆகவே அவர்களையும் செயல்பட விடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி). குற்றவாளியை 6 மணிக்கு மேல் விசாரிக்க வேண்டுமானால், அவர் பெண்ணாக இருப்பாரேயானால் பெண் காவலர்களைக் கொண்டு அழைத்து முறையாக விசாரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்காக காவல் துறையே ஸ்தம்பித்து செய்லபட முடியாத நிலையை ஏற்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அமைந்தகரை காவல் நிலையத்தில் காவலர்கள் தலித் இளம் பெண் சித்ராவின் கணவனைக் கைது செய்து லாக்கப்பில் அடைத்துவிட்டு கணவன் எதிரிலேயே காவல் நிலையத்தில் 3 மாத கர்ப்பிணியை 4 காவலர்கள் மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் தலைகுனியக் கூடிய செய்கை. வேலியே பயிரை மேய்ந்த கதையாக காவலர்களே இந்த மாதிரி செய்வது அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்கும்போதே 'காவல் துறையில் 75% ஈரல் கெட்டுப் போய்விட்டது' என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், 100% ஈரல் கெட்டுப் போய்விட்டது; இதயம் கெட்டுப் போய்விட்டது; மூளையும் கெட்டுப் போய்விட்டது. இந்த மாதிரி மிருகத்தனமாக இருக்கிற காவலர்களை எல்லாம் நீங்கள் பதவி நீக்கம் செய்ய வேண்டும். அவர்கள் மேலே மானபங்க வழக்கு அல்லது தற்கொலைக்குத் தூண்டிய வழக்குப் பதிவு செய்தால்தான் அந்தக் காவலர்களுக்கு புத்திவரும், பயம்வரும். அந்தக் காவலர்களைக் காப்பாற்றுகிற அளவிலே, சஸ்பெண்ட் செய்துவிட்டு 3 மாதங்கள் கழித்து ஆறிப்போன உடனேயே பழையபடியும் வேறு இடத்திற்குப் போடுவது மாதிரியான செய்கைகளையெல்லாம் — எந்த அரசாங்கம் வந்தாலும் அப்படித்தான் செய்கிறார்கள். (சிரிப்பு) ஆம். நான் உண்மையைத்தான் பேசுகிறேன். நான் என்ன ஒன்சைடாகவா பேசுகிறேன். இந்த மாதிரியான மிருகத்தனமான காரியங்களைச் செய்பவர்கள் மீது நீங்கள் வழக்குப் பதிவு செய்து அவர்களை வேலை நீக்கம் செய்யுங்கள். இதற்குக்

காரணம், உயர் மட்ட அதிகாரிகள் அவர்களுக்கு டிசிப்ளின் கற்றுக் கொடுக்கவில்லை. ஐ.ஜி. ஆனாலும் சரி, டி.ஜி.பி. ஆனாலும் சரி அவர்களை ராஜினாமா செய்யச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் அவர்களையே வேலை நீக்கம் பண்ணுங்கள். அப்படிச் செய்தால்தான் ஒரு பயம் வரும். சின்னச் சின்ன அதிகாரிகளின் மேல் நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள். பெரிய அதிகாரிகளைக் கண்டு கொள்வதே கிடையாது.

இரவு 6 மணிக்கு மேலே காவல் நிலையத்திற்குப் பெண்களை அழைத்துப் போகக் கூடாது என்கின்ற சட்டம் இருப்பது சாதாரண கிராமப்புற பெண்களுக்கும், காவலர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிகிறது. ஆனால், சென்னை மாநகரிலுள்ள காவலர்களுக்குத் தெரியவில்லை என்றால் என்ன அர்த்தம். ஆகவே, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அந்த நேரத்திலே ஒரு கடிதத்தை எழுதி வைத்திருந்தது அந்த அம்மா 'என்னை காவல் நிலையத்திலே கற்பழித்துவிட்டார்கள்'. அதை வந்து விசாரிக்கிறது யார்? CB-CID-யாம், அந்தப் போலீஸ்காரர்களாம். போலீஸ்காரன் போலீஸ்காரர்களைக் காப்பாற்றத்தான் செய்வான். அவன் கிட்டேயுள்ள அதிகாரத்தை வைத்து மெடிக்கல் ரிப்போர்ட்டிலே இந்த மாதிரி மாற்றி எழுது. இல்லையென்றால் உன் மேலேயும் கேஸ் போடுவேன் என்று சொல்லி மெடிக்கல் ஆபீசரையே மிரட்டுவான். அவர்கள் சொல்வதை வைத்துக்கொண்டு நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் எப்படி? அந்தப் பக்கத்திலேயுள்ள மாதர் சங்கம் ஆய்வு செய்து அது அந்த அம்மா எழுதிய கடிதம்தான் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே தவறு செய்தவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முயற்சி எடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன். எங்களது இயக்கத்தின் சார்பாகப் பல போராட்டங்கள், உண்ணா விரதம், மகளிர் உண்ணா விரதம், பொதுக் கூட்டம், ஊர்வலம் அருமை அண்ணன் காளிமுத்து தலைமையில் மாபெரும் ஊர்வலம் நடத்தினோம். அதுமட்டுமல்லால், 9-ஆம் தேதி நாங்கள் கவர்னர் மாளிகையில் மனு கொடுப்போம். இந்த நாடே அரளுகின்ற அளவிலே (சிரிப்பு) நாங்கள் பெரிய ஊர்வலம் நடத்தி கவர்னர்கிட்டே பெட்டிஷன். ஒரு பெண் கவர்னர்கிட்டே, ஒரு பெண் முதலமைச்சர் (குறுக்கீடு) முன்னாள் முதலமைச்சர் பெட்டிஷன் கொடுத்துதான் நடவடிக்கை எடுக்க





வேண்டும் என்று இல்லாமல், தவறைத் தெரிந்துகொண்டு நீங்களே நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் என்ன சொல்லுகிறோம் என்றால், இதிலே நாங்கள் அரசியல் பண்ண விரும்பவில்லை (சிரிப்பு). ஹை கோர்ட் நீதிபதி ஒருவர் தலைமையிலே விசாரணைக் கமிஷன் அமைப்பதிலே உங்களுக்கு என்ன பாதகம் வந்துவிடப் போகிறது? இதிலே என்ன இருக்கிறது? அறிவித்துவிட்டால் நாட்டிலே பிரச்சினை ஒழிந்துவிடுகிறது. விசாரித்து அறிக்கையைக் கொடுத்தார்கள் என்றால் அதன் மேலே நடவடிக்கை எடுங்கள் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

முற்பகல் 10-50

12 போலீஸ்காரர்களை சஸ்பெண்ட் பண்ணியிருக்கிறீர்கள். முதலிலே 4 பேர், பிறகு 8 பேர், மொத்தம் 12 பேர். நீங்கள் எல்லோரையுமே வீட்டுக்கு அனுப்புங்கள். இந்த I. G., D.G.P. ஆகியோர் வந்ததிலேயிருந்து சென்னை மாநகரிலே எங்கே பார்த்தாலும் மக்கள் நடமாடுவதற்குப் பயமாக இருக்கிறது. கொலை, கொள்ளை இந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் பயப்படுகிறார்கள், ஒரு டிசிப்ளின் இல்லை. அதனாலே இவர்கள் மேலே, அந்த நிர்வாகத்திலே, திறமையின்மைக்கு நீங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தால்தான் அவர்களக்குப் பயம் ஏற்படும். கீழ்மட்ட அதிகாரிகள் மீதே நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் கண்டிப்பாக, நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கமாட்டீர்கள். எதிர்க்கட்சி சொல்லி நாம் நடவடிக்கை எடுப்பதா என்று, நீங்கள் ஏறுக்கு மாறாகத்தான் செய்வீர்கள். ஏனென்றால் நாங்கள் சொல்லி கேட்டால், இவர்கள் சொல்லி நாம் நீதி விசாரணை வைக்க வேண்டுமா என்ற அந்த வைராக்கியம் எல்லாம் வேண்டாம் தலைவரே (சிரிப்பு). நீங்கள் நீதி விசாரணை வைப்பீர்கள் என்றால் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். அதனாலே வைராக்கியத்தைக் கொஞ்சம் தளர்த்திவிட்டு நீதி விசாரணை வைப்பீர்கள் என்றால் — அந்தக் குற்றத்தைப் பண்ணியவர்கள் போலீஸ்காரர்கள்தான் — உங்களுக்கு என்ன பாதிப்பு வருகிறது? அதனாலே நீதி விசாரணை வையுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துதான் பேசவேண்டும். முதலமைச்சரைப் பார்த்து 'தலைவரே' என்று குறிப்பிடுகிறீர்களே?

**திரு. இரா. தாமரைக்கனி:** முதலமைச்சர்தானே நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள் பேசுவதற்குத்தான் அனுமதி கொடுக்கிறீர்கள். நடவடிக்கை எடுப்பது முதலமைச்சர்தானே. அதனாலே அவரைப் பார்த்துதானே பேச வேண்டும். தவறு செய்தவர்கள், எந்தப் பெரிய ஆளாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்தால் உங்கள் ஆட்சிக்கு நல்லது. நடவடிக்கை எடுக்காவிட்டால் ஒரு தலித் பெண்மணியை, 3 மாதக் கர்ப்பிணியை இப்படிக் காவலர்களே, வேலியே பயிரை மேய்ந்த அளவிலே, இந்த மாதிரி கெடுத்துவிட்டார்கள் என்று சொல்லி முதலமைச்சருக்குதான் கெட்ட பெயர் வரும். ஏற்கெனவே இந்தக் காவலர்களை நீங்கள் நம்புவதே கிடையாது. நீங்கள் * என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை அவர்கள் நிரூபித்துவிட்டார்கள். அந்த *, அந்தக் காவலர்கள் பெண்ணை கற்பழித்ததனாலே மிருகத்திற்குச் சமம். * என்று சொல்ல விரும்பவில்லை என்றால் மாற்றிக்கொள்ளுங்கள். அவர்கள் மீது நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலையை விட்டு நீக்க வேண்டும். உயர்மட்ட அதிகாரிகளுக்கு நோட்டீஸ் விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர், காவலர்களை * என்று சொன்னார் என்று சொன்னீர்கள். அதற்கு ஒன்றும் ஆதாரம் இல்லை. அந்த வார்த்தையை திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்ன சொன்னீர்கள்? திரும்பச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு தடவை நான் சொல்ல வேண்டுமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவலர்களை முதலமைச்சர் * என்று சொன்னார் என்று சொன்னீர்களே, அப்படி முதலமைச்சர் சொன்னதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** 75 பர்சன்ட் ஈரல் வெந்து போய்விட்டது என்று முதலமைச்சரே சொல்லியிருக்கிறாரே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். அதைத்தான் சொல்லலாமே ஒழிய * என்று சொல்லக்கூடாது.

* உறுப்பினரால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.





V 211, 31 N98 N98.60.2

**திரு. இரா. தாமரைக்கனி:** Same அர்த்தம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ற வார்த்தையைத் திரும்பப்பெறவில்லையென்றால் நான் அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** * என்ற வார்த்தையை மட்டும் திரும்பப் பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலித் இனத்தைச் சேர்ந்த சித்ரா, தன்னுடைய கணவன் தவறு செய்துவிட்டான், அதற்காக போலீசார் விசாரணைக்கு அழைத்துச் செல்லுகிறார்கள் என்று நினைத்த அந்த அப்பாவிப் பெண்ணை இரவு நேரத்திலே பெண் காவலர்கள் அழைத்துச் செல்லாமல், ஆண் காவலர்கள், உதவிக் கமிஷனர் மற்றும் இன்ஸ்பெக்டர் ஆகியோர் அந்த தலித் இனப் பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கணவன் கண் எதிரே மானபங்கப்படுத்தியதாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் நல உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்களும், பொது மக்களும் மிகத் துல்லியமாக, கணவன் எதிரே மானபங்கப்படுத்தப்பட்டது உண்மை என்று சொல்லக்கூடிய அளவிற்கு மானபங்கப்படுத்தப்பட்டதை தாங்கிக் கொள்ள முடியாமல் தன்னுடைய வீட்டிற்கு, சுமார் இரவு இரண்டு மணிக்கு மேலே போலீஸ் வேனிலே அழைத்து வரப்பட்ட சித்ரா, தன் வீட்டிலே தூக்கு போட்டுத் தற்கொலை செய்து கொண்டிருக்கக்கூடிய அவல நிலை தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. மக்களுக்கு காவல் புரியவேண்டிய அந்தப் போலீஸாரே, காவலுக்கு பதிலாக கணவன் முன்னால் கற்பழித்திருக்கிறார்கள் என்று கேட்கும்போது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை நல்லவர்களின் உள்ளங்களும் பதைபதைக்கிறது. அந்தத் தவறை போலீஸ்காரர்கள் செய்திருப்பது உண்மையா இல்லையா என்பதனை விசாரிக்க ஒரு நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் ஏற்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

* உறுப்பினரால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

220159

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் 12 ஆம் தேதியன்று அமைந்தகரைக் காவல் நிலையத்தில், ஒரு களவு என்ற காரணத்தைச் சொல்லி ரவி என்பவரைக் கைது செய்து, அதற்குப் பின்னால் மாலை 6 மணி அளவில் அவருடைய மனைவி சித்ரா என்ற பெண்ணைக் காவல் நிலையத்தார் கைது செய்துகொண்டு சென்றிருக்கின்றார்கள்.

அதிலே விதிமுறைகள் மீறப்பட்டிருக்கின்றன. 6 மணிக்குப் பின்னால் பெண்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக் கூடாது என்ற விதிமுறையைக் காவல் நிலைய அதிகாரிகள் மீறியிருக்கின்றார்கள். மேலும், அவர்களைப் பெண் காவலர்களை வைத்து அழைத்துச் சென்று விசாரணை செய்திருந்தால் இந்த அளவிற்குப் புகார்கள் வருவதற்கு இதிலே இடம் இருந்திருக்காது. அப்படி இன்னொரு தவறையும் நம்முடைய காவல் துறை செய்திருக்கின்றது.

எனவே, இந்தப் பெண்மணியைக் காவல் நிலையத்தில் வைத்து காவல் துறை அதிகாரிகள் சித்திரவதை செய்தார்கள் என்பது ஒருபுறிருக்க, அந்தப் பெண்மணியை மானபங்கப்படுத்தியுள்ளார்கள் என்ற செய்தி இன்னொருபுறம். ஆக, இரண்டு விதமாகப் பத்திரிகைகளிலெல்லாம் இன்று வருகின்றது. அதற்குப் பின்னால் பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இதுசம்பந்தமாக ஒரு நீதி விசாரணை வேண்டும்; இந்த நடவடிக்கை - கா்வல் துறை அதிகாரிகள் எடுத்த இந்த நடவடிக்கை மிகத் தவறானது என்பதை நாட்டுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் இந்த இரண்டு நிகழ்ச்சிகளை மிக அக்கறையோடு, கவலையோடு நம்முடைய காவல் துறை அதிகாரிகள் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ள, இதுசம்பந்தமான ஒரு நீதி விசாரணை - இதிலே நியாயம் கிடைக்க வேண்டும்; சரி எது, தவறு எது என்பதை இந்தநாட்டு மக்கள் அறிய வேண்டுமென்ற வகையில் ஒரு நீதி விசாரணை - நீதிமன்றத்தைச் சார்ந்த அதிகாரிகளை வைத்து, உரிய நடவடிக்கை மேற்கொள்வேண்டும். இன்று காவல் துறையின் மீது இவ்வளவு கடுமையான ஒரு குற்றச்சாட்டை நாம் சந்திக்க வேண்டிய இந்த நிலையில், இதற்கு ஒரு மாற்று என்ற முறையில், இந்தச் சம்பவத்திலே ஈடுபட்ட 12 காவலர்கள்மீது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முதல் கட்டமாக நல்ல ஒரு முடிவை





எடுத்திருக்கின்றார்கள்; பாராட்டுகின்றோம். அந்த வகையிலே அவர்கள் மீது சரியான ஒரு விசாரணை செய்து குற்றவாளிகள் என்று நாம் அறிவோமேயானால் அவர்கள்மீது குற்றவியல் அடிப்படையிலே விசாரணைக்கு ஏதுவான ஆதாரங்களை வைத்துக் கொண்டு அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, வேலை நீக்கம் செய்வதோடு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைந்தசரை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட சித்ரா என்கின்ற பெண் காவல் நிலையத்திலிருந்து திரும்பியவுடனே தற்கொலை செய்து கொண்டிருக்கிறார் என்கின்ற செய்தி வருகிறது. ஆனால் விதிகளுக்கு மாறாக காவல் துறையினர் அவரை இரவு நேரத்திலே அழைத்துச் சென்று விசாரணை நடத்தியிருக்கிறார்கள் என்பதனை அறிந்தவுடனே அரசு அப்படித் தவறுதலாகச் செய்த காவலர்களைத் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்து வைத்திருக்கிறது என்பது உள்ளத்திற்கு ஆறுதலை அளிக்கக்கூடிய விதமாக இருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு அவர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட நேரத்திலே காவல் துறையினரால் மானபங்கப்படுத்தப்பட்டார் என்கின்ற செய்தியை முன்வைத்து அதற்கு விசாரணை வேண்டும் என்கின்ற கோரிக்கையை அரசியல் ரீதியாக வலுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மானபங்கப்படவில்லை என்பது மருத்துவர்கள் சான்றிதழில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும்கூட, அதை அங்கிருக்கின்ற மாதர் சங்கங்களும் மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளாது மீண்டும் விசாரணை நடத்த வேண்டும் என்கிற நிலையைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். தவறு செய்த காவலர்கள்மீது நடவடிக்கை எடுத்த இந்த அரசு, உண்மையான நிலையைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று பார்வர்டு பிளாக் சார்பிலே கேட்டு அமர்கிறேன், நன்றி.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைந்தகரை காவல் நிலையத்திலே சித்ரா என்ற பெண்மணிக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமை குறித்து அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளிலே — உரிய காலத்திலே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தாலும்கூட — இந்தக் காவல் நிலையத்திலே அந்தப் பெண் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டாளா அல்லது மானபங்கப்படுத்தப்பட்டாளா என்கின்ற இத்தகைய நிலைமைகளையெல்லாம் ஆய்வதற்கு முன்னாலே எந்தச் சூழ்நிலையிலே அந்தப் பெண்மணியை அங்கே அழைத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் அந்தக் காவல் துறை அதிகாரிகளுக்கு ஏற்பட்டது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மரணத்திலே மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற சந்தேகங்களை ஓரளவிற்கு அரசானது நிவர்த்தி செய்திருக்கிறது என்பது ஆறுதலளிக்கக்கூடிய செய்தி என்றாலும்கூட அந்த சித்ரா என்ற பெண்மணியினுடைய மரணத்தைக் குறித்து விசாரித்த பி.யூ.சி.எல். என்று சொல்லக்கூடிய மக்கள் குடியுரிமை அமைப்பானது சில ஐயங்களை எழுப்பி இருக்கிறது. அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாக இரவு நேரங்களில் காவல் நிலையங்களில் வைத்து விசாரிக்கக் கூடாது என்று சொல்வதனுடைய நோக்கமே இரவு நேரங்களில் நடமாட்டங்கள் அதிகமாக இருக்காது, இருள் நேரமாக இருக்கிற காரணத்தினாலே நடமாட்டங்கள் குறைவாக இருக்கும், நடமாட்டங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே தவறுகள் நடைபெற ஏதுவாக இருக்கும் என்கின்ற காரணத்தினாலேதான் மாலை 6.00 மணிக்கு மேல் விசாரிக்கக் கூடாது என்ற நடைமுறையை அரசு பின்பற்றி வருகிறது. எந்தக் காரணத்திற்காகவும் இதை மீறக் கூடாது. அதிலும் குறிப்பாக பெண் தொடர்பான நேர்வுகளில் இதை மீறக் கூடாது. இதைக் கட்டாயமாக காவல் நிலையங்களுக்கு வலியுறுத்த வேண்டும். கடைப்பிடிக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்கக் கூடாது. அதுபோலவே இந்த மாதிரி தவறுகளைச் செய்கிற அதிகாரிகள் கண்டுபிடிக்கப்படுவார்களேயானால், அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசே நிவாரணத் தொகை வழங்குவதற்குப் பதிலாக, உரிய நட்ட ஈட்டுத் தொகையையும் தவறு





செய்தவர்களிடத்திலேயிருந்து வசூலிக்கக்கூடிய அளவுக்கு அரசு விதிமுறைகளை கெடுபிடி செய்தால்தான், கடுமையாக விதித்தால்தான், இத்தகையத் தவறுகள காவல் நிலையங்களில் நடப்பதைத் தவிர்க்க முடியும் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு மீண்டும் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். ஓய்வு பெற்ற ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டாவது, அந்தக் குடியுரிமை அமைப்பு ஆய்வு செய்து அளித்திருக்கின்ற ஐயங்களைத் தெளிவுபடுத்துகிற வகையிலே, விசாரணை செய்திட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அமைந்தகரை குற்றப் பிரிவு காவல் துறையினரால் விசாரிக்கப்பெற்ற சித்ராவின் மரணம் குறித்து இங்கே தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஞானசேகரன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிவபுண்ணியம் அவர்களும், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் ஜி. நிஜாமுதீன் அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் தாமரைக்கனி அவர்களும், பா.ம.க. சார்பில் ஐ. கணேசன் அவர்களும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மணி அவர்களும், ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சந்தானம் அவர்களும் மற்றும் தீரன் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை அளித்து பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். முதலில் அது பற்றிய குறிப்பினை இந்த அவையில் வைக்க நான் விரும்புகிறேன்.

சென்னை, அரும்பாக்கம் காவல் நிலைய குற்ற வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட ரவி என்ற குற்றவாளியின் மனைவி சித்ரா என்பவர் 13-10-1998 அன்று அதிகாலை அமைந்தகரை குற்றப் பிரிவு காவல் நிலையத்தினரால், காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரணை செய்த பின் 13-10-1998 அன்று காலை நெற்குன்றம், மீனாட்சி அம்மன் நகர், கிரி தெருவிலே உள்ள தனது வீட்டில் தூக்கில் பிணமாகத் தொங்கியுள்ளார்.

முற்பகல் 11-05

இதுகுறித்து, இறந்துபோன சித்ரா குடியிருந்த வீட்டின் உரிமையாளர் புருஷோத்தமன் கொடுத்த புகாரின் மீது மதுரவாயில் காவல் நிலையத்தில்

குற்ற எண் 1254/88, பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருமணம் நடந்து 7 ஆண்டுகளுக்குள் சித்ரா இறந்ததால், பிரேத விசாரணையை பொன்னேரி கோட்டாட்சியர் செய்துள்ளார். இது ஒரு விதி முறை. திருமணம் நடந்து 7 ஆண்டுகளுக்குள் ஒரு பெண் இறந்தால், அது வரதட்சணைக் கொடுமையாக இருக்குமோ என்கின்ற ஐயப்பாட்டின் காரணமாக கோட்டாட்சியர் பிரேத விசாரணை நடத்த வேண்டிய விதியின்படி செய்துள்ளார். புலன் விசாரணையை அம்பத்தூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் முதலில் மேற்கொண்டபோதிலும், பின்னர் அரசின் ஆணைப்படி இந்த வழக்கு மாநில குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. விசாரணையில் 11-10-1998 அன்று சென்னை அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனியில் உள்ள விக்னேஸ்வர் உறார்ட்வேர்ஸ் என்ற கடையின் உரிமையாளர் ரமணய்யா என்பவர் அரும்பாக்கம் காவல் நிலையத்தில் 10-10-1998 அன்று இரவு தனது கடையிலே இருந்து சுமார் 2.5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் களவு போய்விட்டதாகக் கொடுத்த புகாரின் மீது அரும்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற எண் 781/98 இந்திய தண்டனைச் சட்டம் 457, 380 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் பதிவு செய்யப்பட்ட விரல் ரேகை, அந்த நிறுவனத்தில் பணிபுரிந்த அருண் என்கின்ற ஆனந்தன் என்பவரது ரேகை எனத் தெரிய வந்ததால், அந்த அருண் கைது செய்யப்பட்டுள்ளார். அருண் ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில் திருடப்பட்ட சொத்தில் பாதித் தொகை கைப்பற்றப்பட்டது. அவர் கொடுத்த தகவலின் பேரில் அதே நிறுவனத்தில் பணிபுரியும் ரவி என்பவர் 12-10-1998 அன்று கைது செய்யப்பட்டார். ரவியிடமிருந்து ரூபாய் 10 ஆயிரம் கைப்பற்றப்பட்டது. மீதமுள்ள தொகையைக் கைப்பற்றும்பொருட்டு அண்ணா நகர் காவல் உதவி ஆணையாளர் 12-10-1998 அன்றே ரவியின் மனைவி சித்ராவின் வீட்டுக்குச் சென்று சித்ராவை விசாரணை செய்தும், அன்று இரவு சித்ராவை அமைந்தகரை காவல் நிலையம் அழைத்துச் சென்றும் விசாரித்து உள்ளார். சித்ராவோடு அவரது நெருங்கிய உறவினரான சிவா என்கின்ற சிவகணேசனும் அமைந்தகரை காவல் நிலையம் சென்றுள்ளார். 12-10-1998 – 13-10-1998 அன்று அதிகாலை 4.00 மணியளவில் விசாரணை முடித்து சித்ராவையும் சிவா என்பவரையும் உதவி ஆணையாளர் தனது ஜீப்பில் ஏற்றி அவர்கள் வீட்டின் அருகில் விட்டுவிட்டு வந்துள்ளார்.



சித்ரா, தான் காவல் துறையினரால் கற்பழிக்கப்பட்டதால் தற்கொலை செய்துகொண்டதாக எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்று சம்பவ இடத்தில் இருந்ததன்பேரில் அவரது மரணம் பற்றி காவல் நிலைய ஆணை எண் 145-ன்கீழ் விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. பிரேத மறு பரிசோதனை செய்த மருத்துவக் குழுவினர், சித்ரா பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லை என்றும், அவர் தூக்கு மாட்டிக் கொண்டுதான் இறந்து உள்ளார் என்றும் கருத்தினைத் தெரிவித்துள்ளார்கள். சித்ராவின் உள் உறுப்புக்கள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. சித்ரா எழுதியதாகக் கூறப்பட்ட கடிதம் கையெழுத்து நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் உள்ள கையெழுத்து சித்ராவினுடையது அல்ல என்று அந்த நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளார்கள். சித்ரா எழுதியதாகத் தயாரிக்கப்பட்டுள்ள கடிதத்தை எழுதிய நபர் யார் என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது. சித்ராவை இரவு நேரத்தில் விசாரணைக்கென காவல் நிலையம் அழைத்து வந்ததற்காக 13-10-1998 அன்று ஒரு இன்ஸ்பெக்டரும், 4 காவலர்களும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பின்னர் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையை மேற்கொண்டபின், ஒரு துணை ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 4 காவலர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், பிறகு 30-10-1998 அன்று அரசின் ஆணையின் பேரில் ஒரு அசிஸ்டென்ட் கமிஷனர் (ஏ.சி.) தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முற்பகல் 11-10

மேலே சொன்னதிலே இருந்து சித்ராவின் மரணம் தற்கொலை என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் சித்ராவின்மீது எந்தவிதமான காயங்களும் இல்லை என்பது பிரேதப் பரிசோதனை அறிக்கையிலிருந்து தெரிகிறது. சித்ரா மரணம் தற்கொலைதான் என்றும் இந்தப் பிரேதப் பரிசோதனை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. சித்ரா, தான் கற்பழிக்கப்பட்டதாகவும், அதனால் தற்கொலை செய்து கொண்டதாகவும் ஒரு கடிதம் அவருடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது. அந்தக் கடிதத்தை சித்ராவின் கையெழுத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, அது சித்ராவால் எழுதப்பட்டது

அல்ல என்று கையெழுத்து நிபுணர்கள் சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள். இதிலிருந்து துர்நோக்கம் காரணமாக சில பேர் வேண்டுமென்றே அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எழுதிய இந்தக் கடிதத்தை அனைவருக்கும் விநியோகம் செய்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இரவு நேரங்களில் பெண்களைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரக்கூடாது என்று அரசு பலமுறை அறிவுரைகளை வழங்கி உள்ளது. இருந்தாலும் இதை மீறி, இந்த சித்ராவை காவல் நிலையத்திற்குக் அழைத்து வந்த அனைத்து காவலர்களும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இது உடனடியாக C.B.,C.I.D.விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. துணை ஆணையாளர் அந்தஸ்தில் உள்ள அதிகாரியே இதுபோன்ற சம்பவத்தில் முதல் முறையாக தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே நீதி விசாரணை வேண்டுமென்று மக்கள் குடியுரிமை அமைப்பு போன்ற அமைப்புக்கள் தந்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் அவர்களுடைய ஐயத்தைப் போக்குவதற்கும் நீதி விசாரணை பயன்படும் என்றும் உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். நீதி விசாரணை கூடாது என்பதல்ல, எத்தனையோ சம்பவங்களில் இந்த அரசு, இதுவரையிலே நடைபெற்ற ஆட்சிகளைவிட அதிகமாக நீதி விசாரணைகளை நடத்தி அதனுடைய அறிக்கைகளை இந்த அவைக்கு வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். ஆனால் நீதி விசாரணை, அப்படியே, அப்பட்டமாக, துல்லியமாக, கருத்துக்களை எது நடந்ததோ அதை சொல்லிவிடுகிறதா என்றால், - நான் நீதி விசாரணை அனைத்தையும் குறை கூறவில்லை - ஆனால் உதாரணத்திற்கு ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். ஏதோ கடந்த கால வரலாற்றைச் சொல்லி இதை நியாயப்படுத்த விரும்பவில்லை.

கடந்த கால ஆட்சியில் சிதம்பரத்தில் பத்மினி என்ற பெண் கற்பழிக்கப்பட்டார் என்கிற செய்தியும், நந்தகோபால் என்கிற அவர் கணவர் கொல்லப்பட்டார் என்ற செய்தியும் வந்தது. 3-6-1992-ல் அந்த நிகழ்ச்சி நடைபெற்றதாக அந்தச் செய்தி வந்தது. ஆனால் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காக ஒரு மாதம் கழித்து 13-7-1992-ல் பத்மினி, நீதிமன்றத்திற்கு அவராகச் சென்று முறையீடு செய்து அந்த முறையீட்டுக்குப் பிறகு, C.B.I. விசாரணை வேண்டுமென்று அவர் கேட்டு, அன்றைக்கு இருந்த அரசின் சார்பில் நாங்கள் C.B.,C.I.D. விசாரணைக்குத்





தயாராக இருக்கின்றோம். C.B.I விசாரணை தேவையில்லை' என்று அன்றைக்கு இருந்த கடந்த கால ஆட்சியிலே சொல்லப்பட்டு, அவ்வாறு C.B.,C.I.D. விசாரணைக்கு கோர்ட்டும் அன்றைய அரசின் கோரிக்கையை ஏற்று உத்தரவிட்டது. 22-7-1992-ல் அந்த உத்தரவு இடப்பட்டது. இந்த C.B.,C.I.D. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அதே காலகட்டத்தில் கடலூர் செஷன்ஸ் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்கு இடையிலே கடந்த கால ஆட்சியில் நீதி விசாரணை ஒன்றும், Retired District Judge பழனியப்பன் அவர்களைக் கொண்டு ஒரு நீதி விசாரணையும், 17-6-1992-லேயே கோர்ட்டுக்கு பத்மினி செல்வதற்கு முன்பாகவே ஒரு நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டது. நீதி விசாரணையினுடைய ரிப்போர்ட்டில் என்ன வந்திருக்கிறது என்றால் - அந்த ரிப்போர்ட் 31-1-1994 அன்று தரப்பட்டது. ஆனால், அந்த ரிப்போர்ட் அவையிலே 6 மாதங்களுக்குள் வைக்கப்படவில்லை. அந்த ரிப்போர்ட் குறிப்பில் தலைமைச் செயலாளர் குறிப்பு எழுதியிருக்கிறார். கமிஷன் அறிக்கை 31-1-1994 ஆம் நாளன்று அரசுக்கு வரப்பெற்றது. நிர்வாகக் காரணங்களால் 30-7-1994 ஆம் நாளோடு முடிவடைகிற ஆறு மாதத்திற்குள் இந்த அறிக்கையை தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்க முடியவில்லை' என்று ஆறு மாதம் வரை வைக்கப்படவில்லை என்று அந்த ஆட்சியின் தலைமைச் செயலாளரே குறிப்பு எழுதியிருக்கிறார். - ஆனால் நீதி விசாரணையிலே என்ன முடிவு கூறப்பட்டது என்றால் "...The death of Thiru Nandagopal should have been a suicidal one and the oral and documentary evidence available in the enquiry does not make out the case of rape of Thirumathi Padmini as alleged by her." ஆக, கற்பழிக்கப்படவில்லை. இந்த விசாரணையில் கிடைக்கப் பெறுகின்ற வாய்மொழி சாட்சியங்களும், ஆவண சாட்சியங்களும், பத்மினி குற்றம் சாட்டியவாறு காவல் துறையினரால் அவர் கற்பழிக்கப்பட்டதை மெய்ப்பிக்கவில்லை", என்றுதான் நீதி விசாரணையினுடைய அறிக்கை வந்திருக்கின்றது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், அந்த வழக்கு செஷன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று, அதனுடைய தீர்ப்பு 1997 ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்தத் தீர்ப்பில் பத்மினி கற்பழிக்கப்பட்டது உண்மைதான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, நீதிமன்றத் தீர்ப்புக்கும், நீதி விசாரணையினுடைய கண்டுபிடிப்பிற்கும் உள்ள வேறுபாட்டையும் நாம் உணர்ந்துகொண்டு, அடிக்கடி நீதி விசாரணை கேட்பதிலே உள்ள தாத்பர்யத்தை உங்களுடைய மனசாட்சிக்கே விட்டுவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 நவம்பர் 24

முற்பகல் 11-15

நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி அந்தக் குற்றவாளிகளுக்கு பத்தாண்டு காலம், ஆறாண்டு காலம் அல்லது ஐந்தாண்டு காலம் தண்டனை, அஃதன்னியில் பத்தாயிரம் ரூபாய், ஐம்பதாயிரம் ரூபாய் என்றெல்லாம் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, இப்போது அப்பீலுக்குக் கூட அந்தக் குற்றவாளிகள் எல்லாம் சென்றிருக்கிறார்கள். எனவே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, அது கற்பழிப்புதான், போலீசார் கற்பழித்தார்கள் என்பதுதான். ஆனால் அன்றைக்கு இருந்த அரசு அமைத்த நீதி விசாரணையினுடைய தீர்ப்பு, பத்மினி காவல்துறையினரால் கற்பழிக்கப்படவில்லை என்பது. எனவேதான் நீதி விசாரணையை அறவே புறக்கணிக்க வேண்டுமென்று கூறவில்லை, எல்லா நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கின்றது. உடனடியாகக் காவல் துறையினர் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஒரு ஏ.சி.-யே இடை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார். இதற்கிடையில் R.D.O. விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீதி விசாரணை நடைபெற்று, அதனுடைய பரிந்துரைகளைப் படித்துப் பார்த்து, பிறகு வழக்குத் தொடுத்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக- இப்போதே R.D.O.விசாரணை முற்றுப் பெற்றதும், உடனடியாக நீதிமன்றத்திற்கே இந்த வழக்கைக் கொண்டு செல்ல இந்த அரசு தயங்காது என்பதையும், அவர்கள் இப்போது இடைக்காலப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தாலும் கூட, R.D.O. விசாரணைக்குப் பிறகு உண்மைகள் தெரியுமேயானால் உரிய நடவடிக்கையைக் காவல் துறையினர் மீது இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதையும், அநியாயங்களுக்கு இந்த அரசு என்றைக்கும் துணை போகாது, அவர்களுக்கு என்றைக்கும் ஆதரவு தராது என்பதையும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்து அமைகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேல் அனுமதி கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நாங்கள் சொன்ன கருத்துக்குப் பதில் சொல்லவில்லை. நீதி விசாரணை வேண்டுமென்று..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன கருத்தை வைத்துத்தான் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால் ..



1998 நவம்பர் 24]

(திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. பி. ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்று பேசிக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்பா? சரி.

(திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. பி. ஆர். சுந்தரம் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்).

### (ஆ) தூத்துக்குடி, கழுகுமலையில் தியாகி இமானுவேல் சேகர் சிலை சேதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. கழுகுமலையில் தியாகி இமானுவேல் சிலை உடைப்பு குறித்து டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில், தியாகி இமானுவேல் சேகர் அவர்களுடைய சிலை, கடந்த 20 ஆம் தேதி நள்ளிரவு உடைக்கப்பட்டிருக்கிறது. இப்போதுதான் இராமநாதபுரம் மாவட்டக் கலவரம் ஓய்ந்து அமைதி திரும்பக்கூடிய வேளையில், திட்டமிட்டு இப்படியொரு அநாகரிகமான செயலைக் சிலர் செய்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே பலமுறை இம்மாமன்றத்திலேயே சுட்டிக்காட்டியிருக்கிறேன். தொடர்ச்சியாகத் தமிழகத்திலே கலவரம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது என்ற சூழ்நிலையை எப்படியாவது உருவாக்குவதற்காக, சிலர் சென்னையிலே இருந்தும், பல பகுதிகளில் இருந்தும் அரசியல் உள்நோக்கத்தோடு அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்தச் சிலையைக் கடந்த 19 ஆம் தேதி இரவு நான்தான் திறந்துவைத்தேன். தியாகி இமானுவேல் சேகர் அவர்கள் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய தலைவர். அவருடைய அடையாளச் சின்னமாக இருக்கக்கூடிய அந்தச் சிலையை உடைத்த உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முற்பகல் 11-20

அந்தச் சிலை உடைக்கப்பட்ட உடனேயே உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டுமென்று அங்கே இருக்கக்கூடிய,

கழுகுமலைப் பகுதி லட்சுமிபுரத்தைச் சேர்ந்தவர்களும், அதேபோல அங்கே இருக்கக்கூடிய ஒன்றாவது வார்டு பகுதி மக்களும் சாதாரண முறையில் காவல் துறையினரைக் கேட்டுக்கொள்வதற்காகக் கூடியபோது, அவர்களைக் கலைப்பதற்காக தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ** காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் தொடுத்து 4 பேர் இப்போது ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள். நியாயத்திற்காகக் குரல் கொடுக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் மீது இவ்வாறு வன்முறைத் தாக்குதல் தொடுப்பது என்பது காவல் துறையினரின் தொடர்ச்சியான நடவடிக்கையாக இருக்கிறது. எப்படி காவல் நிலையங்களில் கற்பழிப்பு நடக்கிறதோ, எப்படி காவல் நிலையங்களில் வன்முறை காரணமாக மரணம் நிகழ்கிறதோ, அதைப்போல சமீப காலங்களில், குறிப்பாக தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ** அவர்களுடைய நடவடிக்கை மனித உரிமை மீறல் அதிகமாகக் கொண்டதாக இருக்கிறது. எனவே, இத்தகைய நிகழ்ச்சிகளில் காவல் துறையின் அத்துமீறல்களை கண்டிக்கக்கூடிய வகையில் மட்டுமல்ல, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையிலே தமிழக அரசு செயல்பட வேண்டும் என்றும், அந்தச் சிலையை உடைத்தவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போல அண்மையில் மானாமதுரையில் அண்ணல் அம்பேத்கர் சிலையை உடைத்திருக்கிறார்கள். இதுபோல் தொடர்ச்சியாக அம்பேத்கர் சிலை, தியாகி இமானுவேல் சிலை ஆகிய சிலைகளை உடைக்கக் கூடியவர்கள் யார் என்று கண்டுபிடிக்கத் தயக்கம் காட்டுவது ஏன்? பல ஆண்டு காலமாக எத்தனையோ வழக்குகளை எல்லாம் கண்டுபிடித்த காவல் துறையில் இந்தச் சிலைகளை உடைத்த உண்மைக் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் மட்டும் ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். எனவே இந்த சிலைகளை உடைத்த உண்மைக் குற்றவாளிகளை கண்டுபிடிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தியாகி இமானுவேல் சிலையையும், மானாமதுரையில் உடைக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் சிலையையும் வெண்கலச் சிலைகளாக இந்த அரசு நிறுவ வேண்டுமென்றும் கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசும்போது ஒரு குறிப்பிட்ட அதிகாரியின் பெயரைச் சொன்னீர்கள். அதை நான் அனுமதிக்க

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது





முடியாது. நீங்கள் தூத்துக்குடி மாவட்ட காவல் துறை அதிகாரி என்று சொல்லுங்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் அதிகாரியின் பெயரைச் சொல்வதற்கு முன் என்னிடம் ஆதாரம் கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். இல்லையென்றால் அதை அனுமதிக்க முடியாது. நீங்கள் அதை வாபஸ் வாங்கவில்லை என்றால் நான் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவேன். நீங்கள் மரபுக்குக் கட்டுப்பட்டு பேசவேண்டும். நீங்கள் தெரிவித்த அந்தப் பெயரை வாபஸ் வாங்க வேண்டும். (குறுக்கீடு) அவர் கொடுத்த கவன ஈர்ப்பில் நீங்கள் பேச என்ன இருக்கிறது?

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே point of order கிடையாது, உட்காருங்கள். கவன ஈர்ப்பை நீங்கள் உங்கள் பெயரில் கொடுக்கவில்லை. நான் உங்களைப் பேச அனுமதிக்க மாட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் சரகத்திற்கு உட்பட்ட லட்சுமிபுரம் கிராமத்திலுள்ள புதிய தமிழகம் கட்சி உறுப்பினர்கள் சிமெண்டினால் செய்யப்பட்ட இமானுவேல் சேகர் உருவச் சிலை ஒன்றை ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர், அவ்வூர் தேவேந்திரகுல கூட்டமைப்பின் பராமரிப்பில் இருக்கும் காளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஒரு பீடம் அமைத்து நிறுவியுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களைக் கொண்டு இந்தச் சிலையை திறந்து வைக்கவேண்டும் என்பதற்காக சிலையை சாக்குத் துணியால் கட்டி மூடி வைத்திருந்தார்கள். அந்தச் சிலையை நிறுவுவதற்கான எந்தவித முன் அனுமதியையும் யாரும் பெறவில்லை. மூடி வைக்கப்பட்ட சிலையை கடந்த 20-11-1998 அன்று அதிகாலை 2-1/2 மணியளவில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். 20-11-1998 அன்று இரவு யாரோ சிலர் சிலையின் இடது பக்கத் தலையின் புருவத்திற்கு மேலே சேதப்படுத்தினார்கள். இது குறித்து 21-11-1998 அன்று காலை லட்சுமிபுரத்தைச் சேர்ந்த மாடசாமி என்பவர் கொடுத்த புகார் மீது கழுகுமலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் மேற்கொண்டு அசம்பாவிதம் ஏதும் நேராமல் இருக்க தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 நவம்பர் 24

முற்பகல் 11-25

சிலை சேதப்படுத்தப்பட்ட தகவல் அறிந்து மீனாட்சிபுரம் வடக்குத் தெரு மற்றும் சுற்றுப் புறங்களிலுள்ள புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த சுமார் 75 பேர் கருப்புசாமி என்பவர் தலைமையில் கூடி வன்முறையில் ஈடுபட்டார்கள். லட்சுமிபுரத்திலே அழகர் என்பவருக்குச் சொந்தமான கோழிப் பண்ணைக்கு வன்முறைக் கும்பல் தீ வைத்ததோடு, இரண்டு வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளது. இதுகுறித்து, கழுகுமலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 21-11-1998 அன்று காலை 11-00 மணியளவில் கழுகுமலை வடக்குத் தெருவில் மற்றொரு கும்பல் கற்களை வீசி வீடுகளுக்கும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டது. கும்பலைக் கலைக்க முயன்ற காவல் துறையினர் மீதும் அவர்கள் கல் எறிந்தார்கள். கலைந்து செல்லும்படி எச்சரிக்கை செய்தும் கேளாததால், குறைந்தபட்ச பலத்தை உபயோகித்து காவல் துறையினர் கும்பலைக் கலைத்துள்ளார்கள். இந்தச் சம்பவம் குறித்து, கழுகுமலை காவல் நிலையத்தில் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் சம்பந்தமாக புதிய தமிழகத்தைச் சேர்ந்த கருப்புசாமி, சர்க்கரை, பாலகிருஷ்ணன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, கலவரத்தின்போது ஏற்பட்ட சிறு காயங்களுக்காக அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். சிலை சேதப்படுத்தப்பட்ட வழக்கில் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த ஐயப்பன், சிவகுருநாத மணிகண்டன் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கோவில்பட்டி வருவாய் உட்கோட்ட அதிகாரி இதுகுறித்து இரு தரப்பினரையும் அழைத்துப் பேசியுள்ளார். சம்பவ இடத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அக்டோபர் திங்கள் 22, 26 ஆகிய நாட்களில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நண்பர் கிருஷ்ணசாமியும் கலந்து கொண்டிருந்த கூட்டத்திலேதான், இனிமேல் புதிதாகச் சிலைகள் வைப்பதாக இருந்தால் அரசின் முன் அனுமதி பெறவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அனைவரும் சேர்ந்து நிறைவேற்றியிருந்தும்கூட, அரசுக்குத் தெரிவிக்காமலேயே, முன்னனுமதி எதுவும் பெறாமலேயே இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டு, அதிலே இத்தகைய சம்பவங்கள்



1998 நவம்பர் 24] [கலைஞர் மு. கருணாநிதி]

உருவாகியிருக்கின்றன. எனினும், முன்னனுமதி பெறாத காரணத்தால், கலவரம் நடைபெறலாம் என்று யாரும் வாதிக்க முடியாது. கலவரம் நடைபெறாத ஒரு சூழ்நிலையை உருவாக்க காவல் துறை அங்கே பணியாற்றி வருகின்றது என்பதை எடுத்துக்கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

## 3. தன்னிலை விளக்கம்

### காஞ்சிபுரம் இரயில்வே விழா அழைப்பிதழ் குறித்து 23-11-1998 அன்று தான் அவையில் பேசியது பற்றி எதிர்க் கட்சித் தலைவர் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பைக் கொடுத்து, அதன் மீது சில கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நானும் சில கருத்துக்களைச் சொன்னேன். ஆனால், இன்று இரயில்வே துறையினர் அதற்கு ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்கள். பாரதிய ஜனதா அரசினுடைய தூண்டுதலின்பேரில் நாங்கள் அந்த அழைப்பை அச்சடிக்கவில்லை என்றும், நடைமுறைப் பழக்கப்படி, எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்த இடங்களில், எந்தெந்த ஆண்டுகளில் இரயில்வே துறையினருடைய விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன என்றும் விளக்கமாக இன்று அறிவித்திருக்கிறார்கள். அந்த முறையில், காஞ்சிபுரத்தைப் பொறுத்தவரை, காஞ்சிபுரம் என்றாலே சங்கராச்சாரியாருடைய பெயர் பெற்ற ஒரு நகரம் என்ற முறையில், அந்த இடத்தில் ஒரு விழா நடைபெறுகிறது என்ற முறையில், காஞ்சி சங்கராச்சாரியாரை அழைத்திருக்கிறார்கள்; அவர்களை முன்னிலைப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, நேற்று நம்முடைய சுப்பராயன் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், பாரதிய ஜனதா அரசு ஒரு மதச் சார்புள்ள அரசு போலச் செயல்படுகின்ற முறையில் இந்த அழைப்பு அமைந்திருக்கிறது. சங்கராச்சாரியாரை அழைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதன் அடிப்படையில், நானும் கருத்து சொல்கின்றபோது, இந்த நாட்டில் பி.ஜே.பி. அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிற சூழ்நிலையைப்

பார்க்கின்றபோது இந்நாட்டை ஒரு மத சார்புள்ள நாடாக ஆக்கிவிடுவார்களோ என்ற அச்சம் நமக்கு ஏற்படுகிறது என்று நான் சொன்னேன். ஆனால், இரயில்வே துறையினர் பல விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். இதற்கு முன்பு 1995 ஆம் ஆண்டு ஒரு விழாவை நடத்தியிருக்கிறார்கள். சங்கராச்சாரியாரை அழைத்துதான் அந்த விழாவை நடத்தியிருக்கிறார்கள். அதேபோல, செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதி மேல்மருவத்தூரில் ஒரு விழா நடத்தியிருக்கிறார்கள். அந்த விழாவில், அங்கே இருக்கின்ற மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரை அழைத்திருக்கிறார்கள். அதேபோல, கர்நாடகாவிலே பேலூர் இரயில் நிலையத்தில் 1997 ஆம் ஆண்டு ஒரு விழா நடத்தியிருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற பெரிய மதகுருமார்களை எல்லாம் அழைத்திருக்கிறார்கள். அதேபோல, கேரள மாநிலத்தில் ஆலப்புழை நகரில் 1997 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடந்த இரயில்வே விழாக்களில் அந்த நகரத்திலுள்ள உள்ளூர் பிரமுகரான ஆர்ச் பிஷப் சென்னம் பரம்பில் என்கின்ற கிறிஸ்தவப் பாதிரியாரை அழைத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-30*

ஆகவே, சங்கராச்சாரியார் அவர்களை காஞ்சிபுரத்தில் நாளை நடைபெற இருக்கின்ற அந்த விழாவிற்கு அழைத்ததில் எந்தவிதான தவறும் இல்லை என்று நான் உணர்கிறேன். அதோடு, இரயில்வே துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழகத்திற்கு இப்போது புதிதாக அகல இரயில் பாதைத் திட்டத்தில் நல்ல, சிறப்பான முறையிலே பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, இப்போது சென்னையிலிருந்து மதுரை வரை அகல இரயில் பாதையை மிகத் துரிதமாக செய்து கொண்டிருக்கிறார்கள். மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை, வருகின்ற பொங்கல் அன்று அகல இரயில் பாதையைத் தொடங்க இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிற இரயில்வே துறையினர், எந்தவிதமான அரசியல் சார்பும் இல்லாமல் ஆங்காங்கே இருக்கின்ற பெரியவர்களையும், மரியாதைக்குரியவர்களையும் விழாவிற்கு அழைத்திருக்கிறார்கள். இந்த விழாவில் யாரை அழைக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் கவலைப்படாமல் மரியாதைக்குரியவர்களை அழைக்கிறார்கள் என்கிற முறையில், நம்முடைய தமிழக முதலமைச்சர் நேற்று இங்கே அறிவித்த 'நாங்கள் இந்த காஞ்சி விழாவை புறக்கணிக்கிறோம்' என்ற வார்த்தையை, தயவுசெய்து மறுபரிசீலனை செய்து, நம்முடைய தமிழக அரசின் சார்பாக, அந்த விழாவில் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு பொன்முடி அவர்களை கலந்துகொள்ளச் செய்வதன்மூலம், தமிழகத்தில் இரயில்வே துறைக்கு உற்சாகத்தை ஊட்ட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே டிஸ்கஷன் செய்ய யாரையும் அனுமதிக்க முடியாது. No. It is a personal explanation given on his own remarks. It is not contradictory to your remarks. The rule is very clear. I cannot allow a discussion on this matter.

**திரு. கே. சுப்பராயன்:** நான் சொன்னது தவறு என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறார். அதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, விழாவிற்கு அழைத்ததைத் தவறு என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது தவறு இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறார், அது அவருடைய கருத்து. (குறுக்கீடு) உங்களை அவர் தவறாகச் சொல்லவில்லை. 'சுப்பராயன் தவறாகச் சொன்னார்' என்று இருந்தால் அதை குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(திரு. ஜி. பழனிசாமி, திரு. கே. சுப்பராயன், திரு. சி. வேலாயுதன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அனைவரும் எழுந்து நிற்கக் கூடாது. திரு. பழனிசாமி, நீங்கள் கட்சித் தலைவர். நீங்கள் இரண்டு பேரும் ஒரேநேரத்தில் எழுந்து நிற்கக் கூடாது. அதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் எழுந்து நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். 'சுப்பராயன் தவறாகச் சொன்னார்' என்று அவர் பேச்சில் இருந்தால் நான் அதை நீக்குகிறேன். உங்கள் பேச்சையொட்டி அவர் கொடுத்த விளக்கத்திற்கு மறுவிளக்கம் சொல்கிறார். அந்த விளக்கத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோமோ இல்லையோ, அது வேறு. தன்னிலை விளக்கத்திற்குப் பிறகு எந்த விவாதத்திற்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்று விதி இருக்கிறது.

[1998 நவம்பர் 24

**திரு. கே. சுப்பராயன்:** ஒரே ஒரு விளக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரை அனுமதிப்பதற்குக் காரணமே எதிர்க் கட்சித் தலைவர் இதிலே கோரிக்கை வைத்திருக்கிறார். (குறுக்கீடு) சரி, நீங்கள் ஒரேயொரு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** விவாதத்திற்கு அனுமதிக்கக்கூடாது என்று விதி இருக்கிறது என்று சொல்கிறீர்கள். பிறகு எப்படி இதை அனுமதிக்கிறீர்கள்?

**திரு. கே. சுப்பராயன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order-ல் பேசுவதற்கு அனுமதி அளிக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** எதிர்க் கட்சித் தலைவரைவிடவும், சுப்பராயனாகிய என்னைவிடவும் இந்த மாநில அரசைவிடவும், அரசியல் சட்டம் பெரிது. அரசியல் சட்டத்தினுடைய பூர்வபீடிகையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, இந்திய அரசு ஒரு மதச் சார்பற்ற அரசு என்று. இது தெளிவாக, உறுதிபட குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதச் சார்பற்ற அரசு விழாவிலே கிறிஸ்துவரோ, முஸ்லிமோ, இந்துவோ எந்த மத பிரதிநிதியோ அதிகாரபூர்வமாக பங்கேற்பது அரசியல் சட்டத்தை அவமதிப்பதாகும் என்பது என்னுடைய தெளிவான உறுதியான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விவாதத்திற்கு அனுமதி கொடுக்க மாட்டேன் என்று சொன்னதற்குக் காரணமே அதுதான். தனிப்பட்ட முறையிலே சுப்பராயன் சொல்கிற கருத்தை நான் நூற்றுக்கு நூறு ஆதரிக்கிறேன். அது வேறு பிரச்சினை. நேற்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் ஒரு கருத்தைச் சொன்னதற்கு தன்னிலை விளக்கம் சொல்ல அனுமதி கேட்டார். நான் கொடுத்து விட்டேன். இனிமேல் யாரையும் பேச விடமாட்டேன். முதலமைச்சருக்கு ஒரு கோரிக்கை வைத்தார். அதுபற்றி முதலமைச்சர் சொல்லலாம். (குறுக்கீடு) அதை யார் செய்தாலும் தவறு என்பது அவருடைய கருத்து. இதிலே விவாதம் கிடையாது. பேச வாய்ப்பு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.



1998 நவம்பர் 24]

**திரு. ஜி.கே. மணி:** இதற்கு முன்பிருந்த அரசுகளும் அரசு விழாவில் இந்த மாதிரி செய்திருக்கிறார்கள். ஆகவே, இது மதச் சார்பில்லாத அரசு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் சொல்வது, உங்களுக்கும் பொருந்தும். இதிலே யார் கலந்து கொண்டாலும் தவறு என்பது சுப்பராயன் அவர்களின் வாதம். எல்லோரும் கலந்துகொள்ளலாம் என்பது எதிர்க் கட்சித் தலைவருடைய விளக்கம். அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு அவர் கோரிக்கை வைத்திருக்கிறார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஏதாவது சொல்ல விரும்பினால் அதற்கு நான் அனுமதி கொடுக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நான் யாரையும் அனுமதிக்க மாட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) முதலமைச்சரைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்க மாட்டேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அதை அவரே ஒப்புக் கொண்டார், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(திரு. ஜி.கே. மணி நின்றுகொண்டே ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.)

முற்பகல் 11-35

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கு, அவரே ஒரு தன்னிலை விளக்கம் அளித்து, நேற்று தவறான தகவலின்பேரில் அல்லது உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாத நிலையில், அப்படி ஒரு கருத்தை வெளியிட்டுவிட்டேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் வெளியிட்ட கருத்துக்குள் நான் சென்று விவாதிக்க விரும்பவில்லை. இறுதியாக ஒரு கோரிக்கை வைத்து, 'என்னைப் போலவே முதலமைச்சரும் இதைப் புரிந்துகொண்டு போக்குவரத்துத் துறை அமைச்சரை அந்த விழாவிலே கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். நேற்று நான் பேசும்போது, காஞ்சி சங்கராச்சாரியார் மீது தனிப்பட்ட முறையிலே எந்தவிதமான வெறுப்போ, பகையோ எங்களுக்குக் கிடையாது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறேன்.

அதையே நண்பர் சுப்பராயன் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் நேற்று விளக்கம் அளித்துவிட்டு, இறுதியாகச் சொன்னபோது, காஞ்சி சங்கராச்சாரியார் மாத்திரம் அல்ல இஸ்லாமிய, கிறித்துவ சமுதாயத்தைச் சார்ந்த பெரியவர்களும் அங்கே அழைக்கப்பட வேண்டும்; இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்த விழாவிலே கலந்து கொள்ள மாட்டார் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஏன், நம்முடைய சுப்பராயன் அவர்களும், மூன்று பேருமேகூட கலந்துகொள்ளக் கூடாது என்பதுபோல வாதத்தை வைத்தார். இன்று காலையிலே, நான் அப்படிச் சொன்னதுகூட ஒரு நெருடல் என்று திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சங்கராச்சாரியார் மாத்திரமல்ல; கிறித்துவப் பெரியவர்களும், இஸ்லாமியப் பெரியவர்களும்கூட கலந்துகொள்ளக் கூடாது என்ற நோக்கில் அவர், மூன்று பேருமே விழாவிலே கலந்து கொள்ளலாம் என்று நான் சொன்னதை ஒரு நெருடல் என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு நெருடலாக இருப்பது எனக்கு நெருடலாக இருக்கலாம்; அல்லது இல்லாமல் இருக்கலாம். ஆனால், இன்றைக்குத் தமிழகத்தினுடைய சூழ்நிலை என்னவென்றால், மத நல்லிணக்கம் தேவை என்று எல்லாக் கட்சியினரும் ஒருமித்த குரல் கொடுத்து வருகிறார்கள். மதக் கலவரங்கள் ஆங்காங்கே, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்டு, பெரிய அளவிலேகூட கோவை மாநகரத்திலே வெடித்து, அதனுடைய காயங்கள், புண்கள் ஓரளவு ஆறினாலும்கூட வடுக்கள் இன்னும் மறையாத சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழகம் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. எனவேதான், அந்த வடு மறையாத நேரத்தில், ஒரு விழாவிலே, ஒரு மதத்தினுடைய தலைவரை மாத்திரம் அழைத்து கலந்துகொள்ளச் செய்வது சரியாக இருக்காது என்ற அந்தக் கருத்தில்தான், மற்ற மதத் தலைவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். என்னுடைய கருத்தை இரயில்வே நிர்வாகம் ஆலோசித்து வருவதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. அந்தக் கருத்து ஏற்கப்பட்டு, நாளையதினம் கிறித்துவ சமுதாயத்தின் சார்பிலும், இஸ்லாமிய மார்கத்தின் சார்பிலும் பெரியவர்கள் கலந்து கொள்வார்களேயானால், எங்களுடைய அமைச்சர் திரு. பொன்முடி அவர்களும் அதிலே கலந்து கொள்வார்; இல்லையானால், நேற்று எடுத்த நிலையிலேயிருந்து மாற்றம் இல்லை என்பதை நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





## 4. அறிக்கைகள் அளித்தல்

### 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம்

திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்-தொடர்ச்சி

**(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

**(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.'

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்த) சட்டமுன்வடிவு, 1998.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (எ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை,1998–99 மற்றும் திருத்திய மதிப்பீடுகள்,1997–98, அளித்தலும் அவற்றின் மீது விவாதமும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் மீது இந்த மாமன்றத்தில் விவாதத்தைத் தொடங்கி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு உதவும் வகையில் நான் ஆற்ற வேண்டிய உரையை @மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக நூல் வடிவாக இந்த மன்றத்தில் வைத்திருக்கிறேன். அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு என்னுடைய பதிலைப் பேரவைக்கு அளிக்கிறேன். இங்கு வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 635 முதல் 665 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர்கள் பேசவிருக்கிறார்கள். ஆகவே, 10 நிமிடத்திற்கு மேல் யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று அன்போடு வேண்டி, முதன்முதலாக பவானி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-4-1997-ல் இதே மின்சாரத் துறை மானியக் கோரிக்கைமீது நான் பேசிய கருத்துக்களின் அடிப்படையிலேயும், இன்று மின்சாரத் துறை இருக்கக்கூடிய நிலையைப் பற்றியும் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்பு வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

குறிப்பாக இன்று தமிழகத்தில் பொருளாதாரம் சிறப்பாக இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு நில வளம், நீர் வளம், சாலை வசதிகள், சுற்றுப்புறச் சூழல் இதற்கெல்லாம் மிக மிக அத்தியாவசியமானது மின்சாரம் என்று எல்லோரும் உணர்ந்திருக்கக்கூடிய இந்தக் சூழலில் நமக்குத் தேவையான மின்சாரத்தை தேவையான அளவுக்கு தொழிற்சாலைகள் வேகமாக வளர்ச்சியடைவதற்கு ஏற்றவகையில், வேளாண்மைத் துறைக்குத் தேவையான அளவுக்கு மின்சாரத்தைக் கொடுக்கக்கூடிய அளவில், நாம் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளாகியும்கூட இன்னும் முழுமையாக அந்தத் தேவையை நிவர்த்தி செய்ய முடியாத சூழலிலே இருக்கின்றோம் என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, நமது தேவை சுமாராக 5000 மெகா வாட் என்று சொன்னால், இன்று 4500 மெகா வாட் என்ற அளவுக்கு உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையில், அப்படி உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரமும் முழுமையாகப் பயன்பெறக்கூடிய அளவுக்குக் கிடைக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த நிதி ஆண்டிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது, விரைவாக, தனியார் 20 பேர்கள் மூலமாக 2200 மெகா வாட் மின்சாரமும் அதற்குப் பிறகு 16 பேர்கள் மூலமாக மின்சார உற்பத்தியும், பிறகு 9 பேர்களிடத்திலே ஒப்பந்தம் போடப்பட்டு செயல்படும் என்ற நிலையையும் தெளிவுபடுத்தினார்கள். ஆனால் இன்று தனியார்கள் 4



பேர் மூலமாகத்தான் அது செயல்படக்கூடிய காட்சியை நான் பார்க்கின்றேன். இப்படிப்பட்ட நிலை எதிர்காலத்திலே இல்லாமல், கடினமான சூழ்நிலை இருந்தாலும்கூட, நிதி ஆதாரம் மிக மிகக் கடினமாக இருந்தாலும்கூட, அதையெல்லாம் நிவர்த்தி செய்தால்தான், நாட்டினுடைய பொருளாதாரம் மேம்படும் என்ற நிலையைக் கருத்திற்கொண்டு, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். எதிர்காலத்திலே, 2000-2001-லிருந்து 2007 வரை மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படும் என்று உங்களுடைய குறிப்பிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் எந்த அளவுக்கு விரைவுபடுத்துகின்றோமோ, அந்த அளவிற்குத்தான் நாட்டினுடைய பொருளாதாரம், நாட்டினுடைய முன்னேற்றம் - அது நாட்டினுடைய பொருளாதாரம், நாட்டினுடைய முன்னேற்றம் - அது தொழில் துறையாக இருந்தாலும், வேளாண்மைத் துறையாக இருந்தாலும் - இருக்கும். எந்தத் துறையும் வளர்ச்சி பெறுவதற்கு, மின்சாரத் துறை வளர்ச்சியடைந்தாக வேண்டும் என்ற நிலையில் அதைச் சிறப்பாகச் செவ்வனே செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கிராமப் பகுதிகளிலே, ஊராட்சிகளிலே வீதி விளக்குகள் அமைக்கக்கூடிய சூழ்நிலையில், அரசின் மூலம் கடந்த காலத்திலே 78,000 வீதி விளக்குகளும், இந்த ஆண்டிலே 74,000 வீதி விளக்குகளும் கொடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சிக்கும், பேரூராட்சிக்கும் இத்தனை வீதி விளக்குகள் என்ற உத்தரவை அறிவித்து விடுகிறீர்கள். ஆனால், அந்தப் பகுதிகளிலே ஏற்கெனவே வீதி விளக்குகள் இருக்கக்கூடிய இடங்களிலேயே அதை அறிவிக்கின்ற சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். எதிர்காலத்திலே, ஊராட்சிகளுக்கு அல்லது பேரூராட்சிகளுக்கு எத்தனை வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு அனுமதி கொடுக்கின்றோமோ அதை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக எங்கெங்கே வீதி விளக்குகள் தேவையோ அங்கே அமைத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவினை மாண்புமிகு அமைச்சரவர்கள், தலைமைப் பொறியாளரிடத்திலே, கண்காணிப்புப் பொறியாளரிடத்திலே தெரிவித்து, அந்த ஏற்பாடுகளை எதிர்காலத்திலே செய்துகொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு மேலாக, இன்று பல்வேறு திட்டங்கள் மூலமாக—நபார்டு திட்டத்தின் மூலமாக, வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமாக—

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக ஏராளமான சாலைகளை எல்லாம் அமைத்து வருகின்றோம். இப்படி சாலைகள் அமைக்கக்கூடிய நிலையிலே, ஏற்கெனவே நடப்பட்ட மின் கம்பங்கள் சாலையின் நடுவிலே இருக்கக்கூடிய காட்சியை நாம் பார்க்கின்றோம். அங்கேயிருக்கின்ற மின்சாரத் துறை அலுவலர்களைக் கேட்டால் கம்பங்களை அகற்ற இதற்கென்று தனியாக எஸ்டிமேட் போட்டு, நெடுஞ்சாலைத் துறையிலே பணம் கட்ட வேண்டும். ஒன்றியத்திலே பணம் கட்ட வேண்டும். ஊராட்சி ஒன்றியத்திலே பணம் கட்ட வேண்டும் என்று கூறுகின்ற நிலையில், சாலைகள் போடப்பட்டும் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையை எல்லாம் நாம் பார்க்கிறோம். ஆகவே, எதிர்காலத்திலே நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும், ஒன்றியமாக இருந்தாலும் சாலை அமைப்பதற்கு முன்பாகவே, திட்டங்களை தீட்டி, இன்றுவரை சாலை அமைத்த இடங்களிலே, நெடுஞ்சாலையிலே இருக்கக்கூடிய கம்பங்களை அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவிடவேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் மாண்புமிகு அமைச்சரவர்களை அன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஜீவன்தாரா திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்களுக்கு, எஸ்.சி., எஸ்.டி. பிரிவு மக்களுக்கு, அவர்கள் வெட்டும் கிணறுகளுக்கு நீரேற்று இயந்திரங்களுக்கு மின் இணைப்பு உடனடியாகக் கொடுக்கப்படுகின்றது. வருடம் ஒன்றுக்கு 2000 மின் இணைப்புகள் கொடுக்கின்றோம். அதேநேரத்தில், அரசின் மூலமாக, ஒன்றியத்தின் மூலமாக 49 ஆயிரம் ரூபாய் செலவில், பின்தங்கிய வகுப்பிலே இருக்கக்கூடியவர்கள், மிகவும் பின்தங்கிய வகுப்பிலே இருக்கக்கூடியவர்கள் வெட்டுகின்ற கிணறுகளுக்குப் பொருத்தும் நீரேற்று இயந்திரங்களுக்கு மாத்திரம் ஏன் மின் இணைப்புக் கொடுக்கவில்லை? இதற்கு என்ன காரணம் என்று மின்சாரத் துறையிடம் கேட்டால், நிதி அதாரத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லையென்றும், இதற்கான செலவினத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற வகையில் உத்தரவு எதுவும் வரவில்லை என்றும், அதனால் கொடுக்க முடியவில்லை என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

ஆகவே, 49 ஆயிரம் ரூபாய் செலவில் கிணறு வெட்டுகின்ற ஏழை எளியவர்களுக்கு, அவர்கள் அத்தனை பேருக்கும் பூதான



இயக்கத்தின் மூலமாக இலவசமாக நிலம் பெற்றவர்கள், குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தில், நிலக்கோட்டைத் தாலுகாவில் இருக்கக்கூடிய கூட்டுப் பட்டாதாரர்களுக்கெல்லாம் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலை இருக்கிறது. மீண்டும் அந்த ஏழை எளியவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில், வேளாண்மைத் துறையில் இருக்கக்கூடிய விவசாயிகள் இரவு நேரங்களில் கண்டிப்பாக தண்ணீரை மடை கட்டுவதற்குத் தயாராக இல்லை. ஆகவே எதிர்காலத்தில் விவசாயிகள் பயன்பெற, பகல் நேரத்தில் 12 மணி நேரமும் மின்சாரத்தை கண்டிப்பாக, உறுதியாக கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலை நாடுகளில் எல்லாம், ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில், ஜெர்மனி போன்ற நாடுகளில், பிரிட்டன் போன்ற நாடுகளில் 6100 யூனிட், 5900 யூனிட், 5100 யூனிட் என்ற அளவிலே தனிப்பட்ட ஒரு நபர் உபயோகிக்கக்கூடிய சக்தியைப் பெற்று இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இங்கே நம்மைப் போன்றவர்கள் 220 யூனிட் மின்சாரத்தை மட்டுமே உபயோகிக்கக்கூடிய ஒரு கேவலமான நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, எதிர்காலத்தில் மின்சாரம்தான் நாட்டினுடைய வளர்ச்சிக்கு உகந்தது என்று கருதி, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவானாலும்கூட, விரைவாக செலவு செய்து மின்சாரப் பற்றாக்குறையை ஈடுகட்டக்கூடிய அளவிற்கு உங்களின் செயல்பாடுகளை எதிர்காலத்தில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில், மின்சாரம் சீராக இருக்க வேண்டும். எந்த நேரத்தில் மின்சாரம் தடைபடுகிறது; எந்த நேரத்தில் மின்சாரம் வரும் என்று தெரியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில்லாத சூழ்நிலையை எதிர்காலத்தில் மாற்றியமைத்தாக வேண்டும். நெய்வேலியில் மழையின் காரணமாக, நீர் வந்ததன் காரணமாக, வெள்ளம் வந்ததன் காரணமாக ஒரு வார காலம் தமிழகம் மின்சாரமே இல்லாமல் இருண்டு கிடந்த சூழ்நிலையைப் பார்த்தோம். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தமிழகத்தில் சூன்யமான இருண்ட சூழ்நிலை வராமல் இருக்க, எதிர்காலத்தில் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் தமிழகத்தில் அதிகமாக மழை பெய்த காரணத்தால் நெய்வேலியிலே மின்சார உற்பத்தி செய்யக்கூடிய இடத்தில் 3 அடி தண்ணீர் தேங்கிய காரணத்தால் நெய்வேலியில் மின் உற்பத்தி செய்யவில்லை என்று அந்த நிறுவனம் எங்களுக்குத் தெரிவித்தது. இருந்தாலும்கூட, உடனடியாக இருக்கக்கூடிய மின்சாரத்தை அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து, மூன்று மணி நேரத்திற்குள்ளாகவே சென்னை நகரத்திலே மின்சாரம் உடனடியாக வழங்கப்பட்டது. தமிழகத்திலும் அனைத்துப் பகுதிகளுக்கும் அன்று விடியற்காலைக்குள்ளாகவே மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து ஐந்து நாட்கள் தமிழகம் இருட்டில் இருந்தது என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** தொடர்ந்து ஐந்து நாட்கள் இருட்டாக இருந்தது என்று நான் கூற வரவில்லை. தடைப்பட்டு தடைப்பட்டு மின்சாரம் வருமா, வராதா என்று சரியாக மக்களுக்குத் தெரியாத சூழ்நிலை எதிர்காலத்தில் இருக்கக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில்தான் கூறினேனே ஒழிய, வேறு எந்த அடிப்படையிலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் பேச ஆரம்பித்து 5 நிமிடங்கள்தான் ஆகின்றன. தலைவர் அவர்களே, 10 நிமிடங்கள் பேசலாம் என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில், நிதி ஆதாரம் போதவில்லை என்ற காரணத்தால் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு Tarrif மின்சாரக் கட்டணத்தை அதிகப்படுத்திய காரணத்தால், தொழிற்சாலைகள் மூடக்கூடிய சூழ்நிலையில் உள்ளன. அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில், இன்னும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை தொடருமேயானால், அதன்மூலம் இன்னும் பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்படும். அதனால் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத சூழ்நிலை - மேலும் மேலும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் - வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை



உருவாகிவிடும். தொழில் துறையில் ஏற்படும் இந்த மந்தமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பரிவோடு, அமல்படுத்தியிருக்கின்ற அதிக மின்சாரக் கட்டணத்தை மாற்றி, தொழிற்சாலைகளுக்குப் பழைய கட்டணத்தையே செலுத்த உதவி செய்ய வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளுக்கு வங்கிக் கடன் சீராகக் கொடுப்பதில்லை. அதே நேரத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால், தொழிற்சாலைகள் மூடக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அதனால் ஒரு கொந்தளிப்பு ஏற்படக்கூடிய நிலை உருவாகும். அதைத் தடுக்கக்கூடிய வகையில் மின்சாரத் துறை, பழைய கட்டணத்தைச் செலுத்த ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

கடலூர், கூடங்குளம் அணு மின் திட்டம் ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். 1500 மெகா வாட், 2000 மெகா வாட் என்ற அளவில் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அதை விரைவாக செய்தாக வேண்டும். காலம் தாழ்த்தி செய்யக் கூடாது. கடந்த நிதிநிலை அறிக்கையில் உடனடியாக ஏற்பாடு செய்வதாகச் சொல்லி, 246 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காலம் தாழ்த்தாமல் அதை விரைவுபடுத்தி வேகமாக செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 17.7 விழுக்காடு என்ற அளவிற்கு மின்சார இழப்பு இருப்பதாக நான் கருதுகிறேன். 17 விழுக்காடு என்று உங்களுடைய குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். இந்தியாவில் சராசரியாக 21 விழுக்காடு இருந்தாலும்கூட, தமிழகத்திலே 17 விழுக்காடு என்ற அளவிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஒரு விழுக்காடு குறைத்தோமேயானால், நமக்கு 65 கோடி ரூபாய் மீதமாகும். 320 மில்லியன் யூனிட் மீதமாகக்கூடிய அந்தச் சூழ்நிலையில் நமக்கு 65 கோடி ரூபாய் மீதமாகும். 17 விழுக்காடு என்பதை 15 விழுக்காடாகக் கொண்டு வர வேண்டும். இதையெல்லாம் பல்வேறு நிலையிலே கொண்டு வர முடியும். பெரிய பெரிய தொழிற்சாலைகளிலே இருக்கக்கூடிய மீட்டர்களையெல்லாம் வருடம் ஒரு முறை டெஸ்ட் செய்து, ஒழுங்காக பரிசோதித்தோமேயானால் கண்டிப்பாக ஒரு விழுக்காடு குறையும் என்று அதிகாரிகளெல்லாம் முழுமையாக, திண்ணமாகக் கூறுகின்றார்கள்.

அதேபோல, கெப்பாசிட்டர்கள் எங்கெங்கெல்லாம் தேவையோ, காற்றாலை மூலமாக உற்பத்தி ஆகக்கூடிய இடங்களிலே மற்றும் அதிக

மின்அழுத்தம் உள்ள இடங்களிலே எல்லாம் கெப்பாசிட்டர்களை தேவையான அளவிற்கு வைத்தால் 2 விழுக்காடு குறைக்க முடியும் என்று கூறுகின்றார்கள். அதேபோல, எங்கெங்கெல்லாம் அழுத்தம் வேண்டுமோ அங்கெல்லாம் கெப்பாசிட்டர்களை வைக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது). எதிர்காலத்திலே எங்கெங்கெல்லாம் கெப்பாசிட்டர்களை வைக்க முடியுமோ அங்கெல்லாம் அதை வைக்க வேண்டும். மீட்டர்களை மறுபடியும் டெஸ்ட் செய்து மின் இழப்பை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைத்தால் அரசுக்கு அதிக வருமானமும் கிடைக்கும், மின் அழுத்தமும் சீராக ஒழுங்காகக் கிடைப்பதற்கு ஏற்ற வகையிலே இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னால் இயன்ற அளவிற்குச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் செய்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் 27 அடி கம்பங்கள், 30 அடி கம்பங்கள், அதற்குத் தேவையான உபகரணங்கள் எல்லாம் தேவையான நேரங்களிலே கிடைக்கவில்லையென்ற குறைபாட்டைச் சொல்கிறார்கள். வீடுகளுக்கு ஒரு மாதத்தில் மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால், அங்கே சென்று கேட்கின்றபோது, கம்பம் எல்லாம் போதவில்லை, கம்பம் கிடைக்கவில்லை, 27 அடி, 30 அடி கம்பங்கள் எல்லாம் எங்களிடம் இல்லை என்று சொல்கிறார்கள். அதேபோல, இரண்டாம் நம்பர் கம்பிகள், இப்படிப்பட்ட பல்வேறு உபகரணங்கள் எல்லாம் தேவையான அளவிற்கு, தேவையான நேரங்களில் கொடுப்பதற்கு முன்கூட்டியே ஆர்டர் போட்டு தேவையான வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும்.

7 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று பலமுறை கூறியிருக்கிறீர்கள். அந்த 7 ஆயிரம் மெகாவாட்டை கண்டிப்பாக 2000 ஆண்டுக்குள் உற்பத்தி செய்ய வேண்டும். கடந்த காலத்திலே சாத்தனூர் அணைக்கட்டிலேயிருந்து 7.5 மெகா வாட் புனல் மின் நிலையத்தின் மூலமாகக் கிடைக்கும் என்று கூறினீர்கள். ஆனால், இன்னும் கிடைக்காத சூழ்நிலையை நான் பார்க்கிறேன்.

பவானி சாகரிலிருந்து 8 மெகா வாட் வருவதாகக் கூறினீர்கள். அதுமாத்திரம் வந்திருக்கிறது. மீண்டும் 8 மெகா வாட், பவானி சாகரிலே உற்பத்தி செய்யக்கூடிய நிலை எதிர்காலத்திலே வருகின்றபோது,



வேகமாகச் செய்ய வேண்டும். எங்கெங்கெல்லாம் நீர் ஆதாரங்கள் இருக்கின்றதோ அதை முழுமையாகப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் உங்களுடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் 10 நிமிடங்கள். நீங்கள் 14 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். திரு. இ. புகழேந்தி, நீங்கள் பேசுங்கள்.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள்மீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்துகொண்டு கருத்தினைக் கூறுவதற்கான வாய்ப்பினை அளித்த அன்புத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத் தேவை என்பது தமிழகத்திலே மட்டுமல்ல உலக அளவிலே தொடர்ந்து வளர்ந்துகொண்டே வரக்கூடிய தேவையாகும். எப்பொழுதுமே மின்சாரத்திற்குப் பற்றாக்குறையும், தட்டுப்பாடும் இருக்கக்கூடிய அளவிற்கு விஞ்ஞான உலகில் போட்டி போடுகின்ற நவீனங்கள் உருவாகின்ற இந்த நேரத்திலே மின்சாரத்தின் தேவை என்பது தவிர்க்க முடியாது ஒன்று. தவிர்க்க முடியாத ஒன்று என்ற அடிப்படையிலும்கூட நம்முடைய அரசு அதைச் சரியாகச் சிந்தித்து தமிழக மக்களுக்குப் பெருமை தருகின்ற விதமாக இந்தத் துறையை நடத்தி, அதற்கான நிலையை வகுத்து இந்தியாவிலேயே பாராட்டினைப் பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக 1997-98 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை, குறிக்கோளை, நாம் அடைந்திருக்கிறோம் என்ற அந்தத் தகவலை இதிலே பார்க்கின்றபோது, கடந்த ஆண்டு நாம் எண்ணிய அந்த இலக்கினை, அந்த நோக்கத்தினை அடைந்திருக்கிறோம்

என்பதிலேயிருந்து இந்தத் துறை மிகத் தீவிரமாகத் தன்னுடைய பணிகளை ஆற்றியிருக்கிறது என்பதையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய சலியாத உழைப்பின் காரணமாக, எந்தக் கோப்பும் ஒரு நாளைக்கு மேல் தன்னிடம் இல்லை, இருக்காது என்கிற விதமாக இரவு பகலாகப் பாடுபட்டும் அலுவலகர்களும், ஊழியர்களும் சிறப்பாகப் பணியாற்றியும், இந்தத் துறை, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுக்குப் பெருமைச் சேர்க்கின்ற விதமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைச் சில உதாரணங்கள் மூலமாக என்னால் நிரூபிக்க முடியும்.

நண்பகல் 12-00

குறிப்பாக, கல்கத்தாவிலே நடைபெற்ற ஒரு நிகழ்வில், 18-2-1998ல் கோல் இண்டியாவினுடைய ஒரு உயர் அதிகாரி ஒன்றைத் தெரிவிக்கிறார். அதாவது "எல்லா மாநிலங்களும் எங்களிடம் நிலக்கரியை வாங்குகிறார்கள். ஆனால், எந்த மாநிலமும் இதுவரையிலே எங்களிடம் சரியான வழியில் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. நிலுவைகளை வைத்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான் எங்களிடம் சிறந்த வர்த்தக நிலையை வைத்துக் கொண்டு இருக்கிறது" என்ற ஒரு கருத்தை அன்று தெரிவித்தார். கோல் இண்டியாவினுடைய ஒரு உயர் அதிகாரி இப்படி ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார் என்றால் இந்தத் துறையினுடைய நிலைப்பாட்டிற்கு இதைவிட ஒரு பெரிய சான்று தேவையில்லை எனக் கருதுகிறேன். அது மட்டுமல்ல, கிட்டத்தட்ட 14 இலட்சத்திற்கு மேலான விவசாயிகளுக்கு மின் இணைப்பைக் கொடுத்து, அதற்கு இலவச சலுகையும் அளித்த அரசு இந்தியாவிலேயே நம்முடைய அரசுதான். இந்தியாவிற்கே வழிகாட்டியிருக்கின்ற, அண்ணாவின் வழிவந்த நம்முடைய அன்புத் தலைவர் கலைஞருடைய இந்த அரசு சிறப்பு மிக்க காரியங்களை நிறைவேற்றிக்கொண்டிருப்பதை இந்தத் துறையின் மூலமாக நிரூபிக்க முடியும். நீரின் மூலமாகப் பெறக்கூடிய மின்சாரத்தின் ஆதாரங்கள் அனைத்தையும் பயன்படுத்திட வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். நீரின் ஆதாரங்கள் மூலமாக 5 அல்லது 6 மெகா வாட் மின்சாரத்தைப் பெறக்கூடிய நிலையிருந்தால்கூட அதையும் இந்த அரசு விடாமல் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது என்று இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நீர் ஆதாரத்தின் மூலமாகத் தயாரிக்கப்படுகின்ற மின் உற்பத்தியை



முழுமையாகப் பெற்ற நிலையிலே இருந்து கொண்டு இருக்கிறோம் என்பதையும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

காற்றாலைகளின் மூலமாகப் பெறப்படும் மின்சாரத்தைப் பற்றி குறிப்பேட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே காற்றாலை மின் உற்பத்தியிலே இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் மேலும் ஒரு படி சென்று ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது ஆசியாவிலேயே முதலாவதாக 2000 மொகா வாட் அளவிற்குக் காற்றாலைகளின் மூலமாக மின் உற்பத்தி செய்கின்ற ஒரே மாநிலம் நம்முடைய கலைஞர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன்.

அதேபோல, இங்கே லைன் லாஸ் பற்றி எல்லாம் சொன்னார்கள். லைன் லாஸ் என்று சொல்லுகின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீவிர முயற்சியின் காரணமாக 17 சதவிகிதமாக இருந்ததை மேலும் ஒரு சதவிகிதம் குறைப்பதற்கான நிலையை நம்முடைய அரசு தீவிரப்படுத்தி அதிலே ஓரளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று சொல்லலாம். மேலும் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் லைன் லாஸ் எவ்வளவு கொடுமையானது என்பதை விளக்கினார்கள். ஆனால், டெல்லியிலே, இந்தியாவின் தலைநகரத்திலே லைன் லாஸ் என்பது 40 சதவிகிதம் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டிய கட்டாயத்திலும், அவசியத்திலும் இருக்கிறோம். ஆனால் தமிழகம் அந்த 17 சதவிகிதத்தையும் குறைக்கக்கூடிய நிலையிலே அதனுடைய துறையின் நிலைகள் அமைந்து கொண்டு இருக்கின்றன.

அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே திறமையான முறையிலே செயல்படுகின்ற நம்முடைய மின் துறையினுடைய செயல்பாடுகள் மற்றும் இலக்குகளை எட்டிப் பிடித்த நிலையினைக் குறித்து ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்க விரும்புகின்றேன். 1989-90ல் நம்முடைய மாபெரும் தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய தலைமையில் அரசு அமைத்து இந்த நாட்டைச் சரியான முறையில் ஜனநாயக வழியில் ஆண்டார்கள்.

பொதுவாக, பல்வேறு இடங்களில் நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டே இருக்கிறது. நிலத்தடி நீர் கீழே போகின்ற காரணத்தினால் அதை எடுப்பதற்கு விவசாயிகள் மேலும் மேலும் அதிகக் குதிரைத்

திறன் கொண்ட மோட்டார்களைப் பயன்படுத்திக் கொண்டே போகின்ற ஒரு செயல் நிகழ்கிறது. அப்படி அதிகக் குதிரைத் திறன் கொண்ட மோட்டார்களைப் பயன்படுத்துகின்ற காரணத்தால் மின்சாரத்தைப் பெறுகின்ற நிலையில் மாறுபாடுகள் கட்டாயம் ஏற்படும். இங்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் சில வேலைகள் குறித்து தனியாரிடத்திலும் உதவி நாட வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவுடைமைத் தத்துவத்திலே அக்கறையும் நம்பிக்கையும் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அரசு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நேரத்திலேதான் தனியாரையும் நாட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது என்ற ஒரு கருத்தையும்கூட நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

பிற்பகல் 12-05

மாவட்ட அளவிலே நடைபெறுகின்ற கூட்டங்களில் விவசாயிகளின் குறைகேட்பு நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்கிறபோது அவர்கள் சொன்னது வேறு ஒன்றுமல்ல. ஏற்கெனவே 1989-90லே தலைவர் சொன்னாரே, பொதுவாக நாங்கள் ஒரு தொகையைச் சொல்லிவிடுகிறோம். தானாகவே முன்வந்து நாங்கள் இந்த அளவிற்கு இதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்பவர்களுக்கு அபராதமோ, வேறு நிலையோ இருக்காது. அப்படி இருக்காத நிலையில் ஒரு குறிப்பிட்ட தொகையை நீங்கள் கட்டி விடலாம் என்ற ஒரு தகவலை அரசு சொல்லுமேயானால் நம்முடைய மின் துறைக்கு நிதயாதாரம் பெருகுவதற்கான வாய்ப்புகள் ஏராளமாகக் கிடைப்பதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன. விவசாயிகள் அதைத்தான் விரும்புகிறார்கள். அவ்விதமின்றி ஏராளமாக நடைபெறுகின்ற மாறுபாடான நிலைகளில் நாம் நம்முடைய அலுவலர்களை, ஊழியர்களைக் கொண்டே அவர்களைப் பிடிப்பது, அவர்கள் மூலமாக அபராதம் வசூலிப்பது போன்ற நிலையத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே கலைஞர் காட்டிய வழியைத்தான் இந்தியாவினுடைய தலைமை நிதியமைச்சராக இருந்த சிதம்பரம் அவர்கள்கூட வருவாய் நிலையைப் பெருக்குவதற்காக, வருமான வரித் துறையிலேகூட தாங்களாகவே கணக்குக் கொடுப்பவர்களுக்கு ஒரு நிலையை வகுத்தார்கள். அந்தத் திட்டத்திற்கு முதலிடமாக, மூலமாக அறிவுபூர்வமாக அது விளங்குவதற்குக் காரணமாக இருந்த நம்முடைய



தலைவர் கலைஞருடைய அந்த நிலையிலே அன்புகூர்ந்து நம்முடைய அரசு அதற்கான நிலைப்பாடுகளை மீண்டும் வகுக்குமேயானால் இன்னும் சிறப்புடையதாக அமையும்.

இன்னும் ஒன்று. மின் இணைப்பு பெயர் மாற்றம் பெற வாரிசு சான்றிதழ்கள் மட்டும் போதும். அப்பாவினுடைய பெயரிலே மின் இணைப்பு இருக்கிறது. சில இடங்களில் தாத்தாவின் பெயரிலே கூட இருக்கிறது. அவர்கள் பெயர் மாற்றம் பெறுவதற்காகப் போகின்றபோது இந்தச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான, மாற்றுவதற்கான நடைமுறைகள் மிகவும் இடர்ப்பாடகவும், சிக்கலாகவும் இருக்கிற காரணத்தால், அதைச் சற்று எளிமைப்படுத்தி, தாசில்தார் அளவிலே பெறுகின்ற வாரிசு சான்றுகளின் அடிப்படையில் அந்தப் பெயர் மாறுதல் பெறலாம் என்று அரசு அறிவிக்குமேயானால், இலட்சக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களினுடைய அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி, மேலும் மேலும் மகிழ்ச்சியை அவர்கள் வாழ்வில் தருகின்ற வகையில், இருட்டைப் போக்கி, ஒளியைத் தருகின்ற தலைவரின் அரசு மேலும் ஒரு மகிழ்வினைத் தருவதற்கான நிலையை உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அடுத்ததாக, நம்முடைய கடலூர் அனல் மின் நிலையம் குறித்து இங்கே தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றபோது சுமார் 660 மெகா வாட் அளவில் கடலூர் மாவட்டத்திலே இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்கள் முடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று நம்முடைய அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது ஒரு மின் நிலையம் அமைக்க வேண்டும் என்றால், ஒரு உற்பத்தி நிலையம் அமைய வேண்டும் என்றால், இரயிலிலே செல்கின்ற நிலை, சாலையிலே செல்கின்ற நிலை, கப்பலிலே செல்கின்ற நிலை என்ற 3 வழித்தடப் போக்குவரத்தும் சிறப்பாக இருக்கின்ற இடத்திலே அமையுமானால், நிலக்கரியைக் கொண்டு வருகின்றபோது எதன் மூலமாக வந்தாலும், அதிலே நாம் சிக்கனத்தையும் பார்க்க முடியும். அதிலே சிறப்பையும் ஏற்படுத்த முடியும் என்பது அனைவரும் அறிந்த கருத்து. அந்தக் கருத்திற்கு மொத்தமாக ஏற்ற இடம் கடலூர் மாநகரம். கடலூரைச் சுற்றியிருக்கின்ற இடம் என்ற காரணத்தால் கடலூருக்கு மேலும் உற்பத்தி நிலையங்களைத் தருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியிலே 500 மெகா வாட் அனல் மின் நிலையம் புதியதாக ஆரம்பிக்கப்படும் என்ற ஒரு நிலையும் இருக்கிறது. அதற்கான வேலைகளையும் துரிதமாக முடித்துத் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில் இன்னுமொன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தைக் கம்பிகளின் மூலமாக எடுத்துச் செல்கின்றபோது, அந்தக் கம்பிகளின் மூலமாகச் செல்கின்ற இடம் ஆள் அரவமற்ற இடமாகச் சில இடங்களில் புகுந்து செல்கின்றபோது அடிக்கடி திருட்டுகள் நடைபெறுகின்றன. ஓயர்கள் கட் செய்பவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் மின் இலாகாவிற்கு செலவுகள் அதிகம். ஆகவே, எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்குத் தேவை என்பதை அறிந்து, சலப வழியிலே மக்கள் நடமாடுகின்ற இடத்திலே போடலாம் என்பதைத் தேர்வு செய்து அதை நாம் அமைப்போமேயானால், மிக அதிகமாக நடைபெறுகின்ற அந்த காப்பர் ஓயர் திருட்டை நாம் தடை செய்ய முடியும். அது இலாகாவிற்குப் பெருமையைச் சேர்க்கும். அந்த வகையிலேதான் கடலூரிலே சொத்திக்குப்பம், ராசாப்பேட்டை என்ற மீனவர்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஒரு ஆற்றைக் கடந்து பல ஓயர்கள் போகின்றன. அதைப்போல மின் ஓயர்கள் போயிருக்குமேயானால் மிகச் சிக்கனமாக முடியக்கூடிய வேலையைக் கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டருக்கு மேல் சுற்றி வருவதால் இடையிலே பல முறை ஓயர் கட் செய்வது மட்டுமல்ல, அங்கே இருண்டு போகின்ற நிலையும் ஏற்படுகிறது. மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே இந்த நிலைகளை எல்லாம் பார்த்து, சிறப்பான முறையில், அதிலே நம்முடைய அமைச்சரவர்கள் மக்கள் உரிமைப் பட்டயம் என்ற ஒன்றை நமக்குப் அளித்திருக்கிறார்கள். அதிலே சொன்னார்கள், இது மனம் திறந்த மக்கள் அரசு. நாங்கள் எதையும் மறைப்பவர்கள் அல்ல, எதையும் ஒளிப்பவர்கள் அல்ல என்று. சென்ற ஆட்சியிலே 7 இடங்களிலே, 7 நிறுவனங்களிலே, வெளிநாட்டிலிருந்து நிலக்கரி வருவதாகச் சொல்லி, 5 இடங்களிலே வந்திருக்கிறது. நின்றுபோன ஊழலுக்கு உடந்தையாகாத இரண்டு இடங்களோடு நம்முடைய ஆற்றல் மிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசி, இந்த மின் துறை இலாகாவிற்கு மேலும் ரூ.400 கோடிக்கு மேல் வருவாயைப் பெற்றுத் தந்தார்கள். அன்று அவை ஒளிந்திருந்த காரணத்தால் மறைந்தன. ஆனால் நாங்கள் ஒளிப்பவர்கள் அல்ல, மறைப்பவர்கள் அல்ல என்ற காரணத்தால் மிகச் சிறந்த ஒரு நிலையை இந்தத் துறை பெற்றிருக்கிறது. இது மேலும் சிறப்பினைப் பெறுகின்ற விதமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த



ஆண்டுஅதற்கான இலக்கினை நிர்ணயித்திருக்கிறார்கள். அதனை முழுமையாக வரவேற்று என்னுடைய கருத்தினைக் கூறுவதற்கான வாய்ப்பைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு ஆகியவற்றை வரவேற்று, அவற்றிலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன். இன்றைய காலத்தில் மனிதன் வாழ்வதற்கு உணவு, உடை போன்றவை எவ்வளவு அவசியமோ அதைப் போலவே மனிதனின் வாழ்க்கைக்கு அவசிய, அன்றாடத் தேவைகளில் ஒன்றாக மின்சாரம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும் அதைப் பகிர்மானம் செய்வதிலும், மேலும், மேலும் கவனத்தையும், சிரத்தையையும் எடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். கால ஏற்றத்திற்கேற்ப, நாட்டின் முன்னேற்றத்திற் கேற்ப மின்சார உற்பத்தியைப் பெருக்குவதும், அதை எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை வகுப்பதையும், அது எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிடுவதையும் நாம் மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த காலங்களிலே, மின்சாரத் தேவையை, அதன் எதிர்காலத் தேவையைக் கணக்கிடாமல் போனதன் காரணமாகத்தான் இந்த ஆண்டு நாம் மிகப் பெரிய மின்சாரப் பற்றாக்குறையைக் கண்டோம். அதைத் தீர்ப்பதற்கு நாம் பல வகைகளைக் கையாண்டபோதிலும், இன்னும் மற்ற வழிகளையும், புதிய வழிகளையும், புதிய திட்டங்களையும் தொடங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டிலுள்ள நீர்வள ஆதாரங்கள் முழுமையாக மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டபோதிலும், குறிப்பாக, பெரிய திட்டம் தொடங்கக்கூடிய இராசிமணல், ஒகேனக்கல் திட்டம் நமது அரசிற்கும், கர்நாடக அரசிற்குமிடையே உள்ள பிரச்சினையால், இன்னும் கிடப்பிலேயே கிடக்கின்றது. நாம் அதைத் தொடங்கினால், அவர்கள் தொல்லை கொடுப்பார்களோ என்ற காரணத்தினால், நமது

மாநில அரசால் அதைச் செய்ய முடியவில்லை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அதையே மத்திய அரசு ஏற்று, அதை எடுத்துச்செய்தால் நமக்குரிய பங்கையும் பெற்று, அதன்மூலம் கிட்டத்தட்ட 600 மெகா வாட்டுக்கு மேலாக மின்சாரமும் உற்பத்தி செய்து, நம்முடைய பிரச்சினையைப் போக்குவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். ஏனென்றால் மற்ற மின்சாரத் திட்டங்களைவிட நீர் மூலம் கிடைக்கும் மின்சாரம் மிகவும் குறைந்த செலவில் கிடைக்கின்றது. அதுமட்டுமல்லாமல் அதன்மூலமாக மாசும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தை அரசு உடனடியாகக் கவனித்து, மத்திய அரசின் மூலமாகவாவது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும். உற்பத்தியைப் பெருக்குகின்ற அதேநேரத்திலே, ஏற்படுகின்ற நட்டத்தையும், திருட்டையும், விரயத்தையும் நாம் தடுத்து நிறுத்த வேண்டும். விரயம் என்று சொன்னால், குறிப்பாக விவசாயிகளுக்கு நாம் இன்றைக்கு இலவச மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையிலே அவர்கள் கம்ப்ரசர் மோட்டர்களைப் பயன்படுத்தி, நீரை இறைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கம்ப்ரசர் மோட்டரைப் பயன்படுத்துவதைவிட நீர்மூழ்கி மோட்டரைப் பயன்படுத்தினால் மிகவும் அதிகமான அளவிற்கு மின்சாரம் மிச்சப்படும் என்பது பல வல்லுநர்களின் கருத்து. ஆகவே, இலவச மின்சாரம் பெறுபவர்கள் நீர்மூழ்கி மோட்டரைப் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினால், அதன்மூலம் பல இலட்சக்கணக்கான யூனிட்டுகளை நாம் மிச்சப்படுத்த முடியும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அதுபோலவே, விவசாயிகள், நிலத்தடி நீர் குறைவாக இருக்கின்ற இடங்களிலே, தொடர்ந்து மோட்டர் போட முடியாத நிலையிலே ஒரு கிணற்றிற்கு இன்னொரு இடத்திலிருந்து போர் போட்டு, அந்தக் கிணற்று நீரைத் தேக்கிவைத்து, மீண்டும் பாய்ச்சுகிறார்கள். அதைக் கிணற்றிலேயே தேக்கி வைப்பதால், 100 அடி ஆழமுள்ள கிணற்றிலே அதைத்தேக்கி வைப்பதால் தண்ணீர் பூமியிலே மீண்டும் மீண்டும் சேர்ந்து, அதுவும் விரயமாகிக் கொண்டிருக்கின்றது. இதுபோன்ற இடங்களிலே மின்சார இலாகாவினர் சென்று இதைத் தடுத்து, நீங்கள் தரைமேல் தொட்டி கட்டித்தான் நீரைத் தேக்கி வைத்து அதைப் பாய்ச்ச வேண்டும், அப்போதுதான் அரசுக்கு மின்சாரம் மிச்சப்படும், உங்களுக்கும் பயனாக இருக்கும். அந்தத் தொட்டியிலே நீங்கள் மீன்கூட வளர்த்துக்கொள்ளலாம் என்ற ஒரு நிலையை எடுக்க வேண்டும். ஏனென்றால், மீன் உற்பத்தி வியாபாரமா அல்லது



விவசாயமா என்ற ஒரு நிலையிலே அதற்கும் வரி வந்துவிடுமோ, கட்டணம் செலுத்தவேண்டுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கும் விதிவிலக்கு செய்து அந்த வருமானத்தை வைத்தாவது இப்படிக் கிணற்றிலே நீரைத் தேக்கி வைப்பதைத் தடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலவச மின்சாரம் இருக்கின்ற இடங்களிலே வயல்வெளிகளிலே விளக்கைப்போட்டால், பகலிலே யாரும் அதை அணைக்க மாட்டோம் என்கிறார்கள். கேட்டால், அப்போதுதான் மின்சாரம் வருவது தெரியும், அப்போதுதான் மோட்டாரைப் போட முடியும் என்று சொல்கின்றார்கள். அதையெல்லாம் அனுமதிக்கக்கூடாது. இதுபோன்ற பல இடங்களில் விவசாயத்திற்கு மின்சாரம் பெறுபவர்கள், திருடி லேத் நடத்துகின்றார்கள். பவர்லூம் நடத்துகின்றார்கள். இதையெல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரை எத்தனை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன, அவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள் என்பதை முழுமையாக வெளியிட வேண்டும். ஏனென்றால், நடவடிக்கை எடுக்கிறோம், எடுக்கிறோம் என்று பல அதிகாரிகள் கூறுகின்றார்கள். யார் மீது நடவடிக்கை எடுத்தீர்கள், எத்தனை இணைப்புகள் துண்டிக்கப்பட்டன என்ற விவரம் இன்றுவரை கிடைக்கவில்லை. ஆகவே, இதையெல்லாம் மிகவும் உன்னிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்து லைன் லாஸ். லைன் லாஸ் தமிழ்நாட்டிலே 16.9% இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அகில இந்திய அளவிலே 21%. தமிழகத்திலே மட்டும் குறைவு என்ற ஒரு சந்தோஷமான செய்தி வந்து கொண்டிருக்கிறது. அதேநேரத்திலே தனியார் நிறுவனங்களில் லைன் லாஸ் 40%. இதை அந்த இலாகா அதிகாரிகள் மறைப்பதாக ஒரு குற்றச்சாட்டு நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதிலே உண்மையான நிலை என்ன? லைன் லாஸ் எதனால் ஏற்படுகிறது? அதை மேலும் குறைப்பதற்கு வழி என்ன என்பதைச் சிந்தித்து நோக்க வேண்டும். அந்தத் தனியார் துறையில் உள்ளவர்கள் 40% என்று சொல்லும்போது அரசு, ஜெனரேஷனை குறைத்துக் காண்பிக்கின்றது. அந்த இலாகாவில் உள்ளவர்கள் குறைத்துக் காண்பிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகூட இருந்து கொண்டிருக்கிறது

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறையினர் வருகின்ற காரணத்தினாலே லைன் லாஸ் அதிகமாகிறது என்ற கருத்து தவறானது. இந்தியாவிலே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இன்றையதினம் 16.9% லைன் லாஸ் இருக்கிறது. எதிர்காலத்திலே அதையும் குறைப்பதற்கு மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நன்றி. அதுபோல விவசாயிகளுக்கு இலவசாக மின்சாரம் வழங்குவதனாலே அந்த இலாகாவிற்கு கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே இழப்பு ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கு அரசுதான் மானியத்தையும் அந்த செலவையும் ஏற்க வேண்டும். ஆனால் அந்த நிலைக்கு மாறாக வருஷத்திற்குச் சுமார் 209 கோடி ரூபாய் மட்டும் கொடுத்துவிட்டு, அந்த 209 கோடி ரூபாயை இலாகா ஈடுகட்டுவதற்காக கட்டண உயர்வு என்ற முறையிலே மீண்டும் மக்கள் தலையிலே சுமத்துகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை இந்த அரசு நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவருக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக மற்றொருவருக்கு கட்டணத்தை உயர்த்துவது என்பது முறையாகாது. ஆகவே விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டிய மின்சாரத்திற்கு அரசு முழுமையான தொகையை அந்த இலாகாவிற்கு வழங்க வேண்டும். அப்போதுதான் அந்த இலாகா முழுமையாகவும், செம்மையாகவும் நஷ்டம் இல்லாமலும் நடைபெறும். ஆகவே அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல தொழிற்சாலைகளுக்கு ஒரு விலைப்பட்டியல், வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு ஒரு விலைப்பட்டியல், கடைகளுக்கு ஒரு விலைப் பட்டியல் என்று வைத்திருக்கிறோம். இப்போது பெட்ரோல் இருக்கிறது, டீசல் இருக்கிறது, மண்ணெண்ணெய் இருக்கிறது. தொழிற்சாலைக்கும் அதே விலைக்குத்தான் கொடுக்கிறோம். தனி நபர் நுகர்வோருக்கும் அதே விலைக்குத்தான் கொடுக்கிறோம். இப்படி மாற்றிக் கொடுப்பது கிடையாது. அப்பொழுது மின்சாரத்திற்கு மட்டும் ஏன், ஒரே செலவிலே உற்பத்தி பண்ணப்படுகின்ற மின்சாரம் வீட்டிற்கு ஒரு ரேட், மற்றதற்கு இன்னொரு ரேட் என்று ஏன் இருக்கிறது. தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் பாக்கெட்டிலிருந்தா எடுத்துக் கொடுக்கிறார்கள். அங்கு உற்பத்திக்கு பண்ணுகின்ற பொருள்களின் மேல்தான் வைக்கிறார்கள். அதையும் மக்கள்தானே மறைமுகமாக



செலுத்துகிறார்கள். இப்படி ஏன் இரட்டை வேடம்? அதைத் தவிர்க்க வேண்டும். உண்மையான நிலை என்ன? இவ்வளவுதான் உற்பத்தி; இவ்வளவு தான் விற்பனை விலை......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டிலே மட்டும்தான் இந்தக் கொள்கை பின்பற்றப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். இந்தியாவிலே எந்த மாநிலத்தை எடுத்தாலும் வீடுகளுக்குத் தனி டாரிஃப், கமர்ஷியலுக்குத் தனி டாரிஃப், இன்டஸ்ட்ரீஸுக்குத் தனி டாரிஃப் என்றுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. இதைத் தவிர்க்க முடியாது.

**திரு.ஜி. நிஜாமுதீன்:** மன்னிக்க வேண்டும். தமிழ்நாட்டில் மட்டும் நடப்பதாக நான் குறிப்பிடவில்லை. இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் நடக்கின்றது. உண்மைதான். ஆனால் எத்தனையோ விஷயங்களில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தில் நீங்கள் ஏன் முன்னோடியாகத் திகழக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த விஷயத்தில் நீங்கள்......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, அப்படி அனைவருக்கும் ஒரேவிதமான மின் கட்டணம் வசூலிப்பது என்று முடிவு செய்தால் ஏழைகளாக இருக்கக் கூடியவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடியவர்கள் கிட்டத்தட்ட மாதந்தோறும் 25 யூனிட் மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடியவர்களுக்கு நாம் 2 ரூபாய் 29 காசு அடக்கக் கட்டணம் வசூல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால் இன்றையதினம் அவர்களிடமிருந்து 80 காசுதான் வசூல் செய்கிறோம். எனவே ஏழைகளுக்கு ஒரு சலுகை காட்ட வேண்டும் என்பது கலைஞர் அரசு மட்டுமல்ல, இதற்கு முந்தைய காமராஜர் ஆட்சி காலத்திலிருந்து இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதை தொடர்ந்து இந்த அரசும் பின்பற்றுகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறுவது உண்மை என்று ஏற்றுக்கொண்டாலும்கூட, தொழிற்சாலைகளுக்கு வைக்கின்ற அதிகப்படியான கட்டணத்தையும் மக்கள்தான் செலுத்துகிறார்கள். ஒரு அரிசி ஆலை என்று எடுத்துக்கொண்டால் அரிசி ஆலைக்கு விதிக்கப்படுகின்ற கட்டணம் அரிசி ஆலை அதிபர்கள் தங்கள் வீட்டு

சொத்திலிருந்து எடுத்துக் கொடுப்பது இல்லை. அந்த அரிசியினுடைய விலையிலேதான் நிர்ணயிக்கிறார்கள். அப்பொழுது அரிசி வாங்குகின்ற அந்த ஏழைமக்கள்தான் அதற்கான பங்கையும் மறைமுகமாக அரசுச்குச் செலுத்தி வருகிறார்கள். ஆகவே மறைமுகமாகவும், நேர்முகமாகவும் பெறுவதை விடுத்து, ஒருமுகமாகப் பெறுவது சிறப்பு என்று அதை மீண்டும் செயல்படுத்த வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் வீட்டுக்குப் புதிய இணைப்பு கொடுக்கப்படும்போது குறிப்பிட்ட 60 நாளிலே கொடுக்க வேண்டும்; 30 நாளிலே கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் மனு கொடுத்தால், போஸ்ட் இல்லை, மீட்டர் பாக்ஸ் இல்லை என்கிறார்க்ள். ரொம்ப அவசரமாக வேண்டும் என்றால் நீங்கள் ஒரு மீட்டர் பாக்ஸ் வாங்கிக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். அதை வாங்கிக் கொடுத்து அந்தக் கட்டணத்தில் கழித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அதைக் கழிக்கமாட்டோம் என்கிறார்கள். அந்த ஊரில் அந்தக் கடையிலே விற்கிறது, அதை வாங்கிக் கொடுங்கள் என்கிறார்கள். இது எல்லா ஊர்களிலும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற நிலையைப் போக்கிட வேண்டும். நுகர்வோர் கேட்கும்போது அந்தப் பொருளைக் கொடுப்பதற்கு, குறிப்பிட்ட காலத்திலே கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

பகிர்மானத்தைப் பொறுத்தவரையில் நல்ல முறையில் ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா இடங்களிலேயும் துணை மின் நிலையங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது போதாது. மீண்டும் ஒழுங்குபடுத்தினால் high voltage, low voltage என்ற பிரச்சினையே வராது. இந்தப் பிரச்சினையினால் பல வீடுகளிலே பல்புகள் fuse ஆவதும், மின்சார சாதனங்கள் கெடுவதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே பகிர்மானத்தை மேலும் ஒழுங்கு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Common Test, Challenge Test. சில வீடுகளிலே 2, 3 பல்புகள் போட்டிருக்கிறார்கள். மின்சாரம் அதிகமாக ஓடுவதனால் கட்டணம் அதிகமாக வருகிறது. கேட்டால் மீட்டர் சரியாகத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். Common ஆக Test பண்ணக்கூடிய



அளவுக்கு நம்மிடம் வசதி இல்லை. Challenge Test-க்கு 130 ரூபாய் பணம் கட்டினாலும்கூட, அதே அதிகாரியிடம்தான், ஏற்கெனவே யார் டெஸ்ட் பண்ணினார்களோ அவரிகளிடத்திலேதான் டெஸ்ட் செய்ய வேண்டியதிருக்கிறது. எனவே, Common Test-க்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மை என்ன என்று புரியும். ஏனென்றால் ஆடிட் அப்ஜெக்ஷன் வருகிறது என்கிற காரணத்தினால் சில வீடுகளிலே உண்மையிலே மின்சாரம் கூடுதலாக ஓடினாலும்கூட அந்த அதிகாரிகள் அதைக் கண்டுகொள்ள மறுக்கிறார்கள். ஆகவே, பொது மக்களுக்கு - இப்போது Transparency என்கிறோம். Transparency என்று சொல்லும்போது தங்களுடைய மீட்டரை டெஸ்ட் பண்ணுவதைத் தெரிந்துகொள்வதற்குரிய உரிமையும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாகூரிலே ஒரு மீட்டரிலே ரிப்பேர் என்று சொன்னால், திருவாரூரிலே சென்று டெஸ்ட் செய்துகொண்டு வருகிறேன், அதை நீ வந்து பார்க்க முடியாது, அலுவலகத்தில் டெஸ்ட் பண்ணப்படுகின்றது அல்லது அதற்குரிய பொறியாளரை வைத்து டெஸ்ட் பண்ணப்படுகின்றது என்றெல்லாம் சொல்லக்கூடாது. அதைத் தெரிந்துகொள்வதற்கான உரிமையை வழங்குவதற்கான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, power cut. ஏதோ தவிர்க்க முடியாத power cut-களை அறிவிக்காமல் செய்கிறார்கள். அவ்வாறு நடப்பது இயற்கை. அதைத் தவறென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், சில நேரங்களிலே. சில ரிப்பேர்கள் பண்ணும்போதுகூட, அறிவிக்காமல் செய்யப்படுகின்றது. சென்னை போன்ற நகரங்களிலே எப்படியென்று தெரியவில்லை. மற்ற நகரங்களிலும், மற்ற மாவட்டங்களிலும், நாளைக்கு வேலை செய்கிறார்கள் என்றால் அதை இன்றைக்கே தெரிவிக்கலாம். ஆனால், எவ்வளவு நாளைக்கு முன்னால் பிளான் பண்ணியும், இந்த transformer-ஐ நாங்கள் மாற்றப்போகிறோம் என்று 10 நாளைக்கு முன்னால் பிளான் பண்ணியும் அவர்கள் எந்தவித முன்னறிவிப்பும் கொடுப்பதில்லை. இதுபோன்ற, சின்னச் சின்ன கவனக் குறைவினால் மிகுந்த கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவற்றையும் கவனத்தில் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு குறித்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்மைப் போன்ற வளரும் நாடுகளுக்கு, விவசாயத்திற்கும், தொழில் துறைக்கும் மின்சாரம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இன்றையதினம் இந்த மின்சாரத்தைப் பற்றி நினைக்கும்போது, அதன் கட்டணத்தை நாம் அவசியம் நினைவு கூர்ந்தாக வேண்டும். அந்த மின் கட்டணத்தை நினைத்தாலே ஷாக் அடிக்கக்கூடிய அளவிற்கு இன்றையதினம் தமிழகத்திலே மின் கட்டண உயர்வு பொது மக்களை மிகவும் பாதிக்கக்கூடிய அளவிலே இருக்கின்றது.

குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகம் முழுவதும் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கநிலை காரணமாக, தொழிற்சாலைகள் எல்லாம் நலிவடைந்து மூடக்கூடிய சூழ்நிலையிலே இருந்து வருகின்றன. அதற்கு மேலும் நாம் அவர்களுடைய குரல்வளையை நெரிக்கும் விதமாக இந்த மின் கட்டண உயர்வு அறிவித்தது, இந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் மிகவும் கடுமையாகப் பாதிக்கின்றது. குறிப்பாக எங்கள் சேலம் மாவட்டத்திலே ஜவ்வரிசி (sago) உற்பத்தி மற்றும் நூற்பாலைகள் போன்ற பல்வேறு சிறு தொழில்கள் இந்த மின் கட்டண உயர்வால் கடுமையாகப் பாதித்து, மூடக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், ஹெச்.டி தொழிற்சாலைகளும்கூட, குறிப்பாக ஸ்மல் இன்டஸ்ட்ரீஸ் எல்லாம் இன்றையதினம் அண்டை மாநிலமான கேரளாவுக்குச் செல்லக்கூடிய அளவிலே நமது மின் கட்டண உயர்வு கடுமையாகப் பாதிக்கின்றது. ஆகவே, அரசு மின்சார வாரியத்தினுடைய நிர்வாகத்தைச் சீர்திருத்தி, நஷ்டத்தைக் குறைத்து, பொது மக்கள் மீது அந்தச் சுமையைத் திணிக்காமல், அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எஸ்.ஐ. தொழிற்சாலைகள் தங்களுடைய சங்கங்கள் மூலமாக ஆண்டுதோறும் இந்த மின் கட்டண உயர்வைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகிறார்கள். அவர்கள் எந்தப் போராட்டங்களிலும் ஈடுபடுவதில்லை. ஆண்டுதோறும்



கோரிக்கைகள்தான் வைக்கின்றார்கள். இந்த அரசு அவர்களுடைய — கேட்டதைக் கொடுக்கும் இந்த அரசு — கோரிக்கைகளையும் பரிசீலித்து மின் கட்டண உயர்வில் அவர்களுக்கு சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்திலே இந்த மின் கட்டண உயர்வை அடியோடு ரத்து செய்ய வேண்டும், வாபஸ் பெற வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக மின்வெட்டு. விவர அறிக்கையிலே ஏப்ரல் முதல் ஜூலை வரை தமிழகத்திலே மின்சார வெட்டு இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழகத்தின் பல்வேறு பகதிகளிலும் இன்னும்கூட நேரம் குறிப்பிடப்படாமல் மின்சாரத் தடங்கல் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. குறிப்பாக எங்கள் சேலம் மாவட்டத்திலே, சேலம் நகர்ப் பகுதியிலேயேகூட தொடர்ந்து பல மணி நேரம் காரணம் இல்லாமல் மின்சாரத் தடங்கல் ஏற்படுகின்றது. காரணம் கேட்டால் அதிகாரிகளுக்கு எந்தப் பதிலும் சொல்லத் தெரியவில்லை. அந்த அளவிற்கு மின் தடங்கல் ஏற்பட்டிருக்கின்றது. நேற்றையதினம்கூட, இங்கே சென்னையிலே அரசினர் தோட்டத்திலே இரவு 1 மணியிலிருந்து அதிகாலைவரை மின்சாரம் இல்லாமல் இருந்தது. ஆகவே, அரசு அதற்கான காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, உதிரி பாகங்கள் வாங்குவதிலே சென்ற அரசு 100 ரூபாய் பொருளை 200 ரூபாய் கொடுத்து வாங்கி நஷ்டத்தை ஏற்படுத்தியது. ஆனால், இந்த அரசு மிகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக அத்தியாவசியமான உதிரி பாகங்களை வாங்குவதற்குக்கூட தயக்கம் காட்டுகினற ஒரு சூழ்நிலை இன்றையதினம் இருந்து வருகின்றது.

பிற்பகல் 12-25

சுமார் 100 ரூபாய்க்குப் பொருள் வாங்குவதற்குப் பதிலாக ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக, மேட்டூர் அனல் மின் திட்டத்திலே பேரிங் போன்ற மிகவும் அத்தியாவசியமான பொருட்கள் இல்லாமல்கூட அங்கே மின் உற்பத்தி பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, அரசு இதிலே கவனம் செலுத்தி breakdown-ஐக் குறைத்து, உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி நாம் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

லைன் லாஸ் 17 சதவீதம் என்பது மிகவும் அதிகம். அதைக் குறைக்கலாம். பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. பல இடங்களிலே மின்சாரம் வீணாகின்றது. அரசுக்கும் இதுபற்றி நன்றாகத் தெரியும். அதனைக் கண்டுபிடித்து லைன் லாஸைக் குறைக்க வேண்டும். மின் மாற்றிகளிலே இப்போது தனியார்களிடம் கெபாசிட்டர்களை வைக்கச் சொல்லி வற்புறுத்துகின்றோம். ஆனால், வாரியத்தின் மூலமாக ஒவ்வொரு மின் மாற்றிகளின் அருகிலேயும் ஒரு கெபாசிட்டர் வைத்து, மின் விநியோகம் செய்தால் இன்னும் நாம் 2 முதல் 3 சதவீதம் வரை மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும். ஆகவே, அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மின் இணைப்பை 30 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால், எங்களது மாவட்டத்திலே பல பகுதிகளிலே சுமார் 8 மாதங்கள் ஆகியும்கூட இன்னமும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. காரணம் கேட்டால் உபகரணங்கள் இல்லையென்று சொல்கிறார்கள். நாம் மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தைப் பெறும்போதே **development charges** என்ற ஒரு கட்டணத்தை வசூல் செய்கின்றோம். அந்தக் கட்டணத்தை வைத்தே இதற்கான உபகரணங்களை நாம் வாங்க முடியும். ஆனால், அந்த நிலை தற்போது இல்லை. ஆகவே, அரசு இதிலே கவனம் செலுத்தி அந்த உபகரணங்களை வாங்கி அவர்களுக்கு மின் இணைப்பைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின் உற்பத்தி. நம்முடைய மொத்த உற்பத்தி சுமார் 6,916 மெகாவாட்டாக இருந்தாலும்கூட, அந்த உப்த்தித் திறனை நாம் முழுமையாக எட்ட முடியவில்லை. புனல் மின் திட்டங்களிலே தற்போது நல்ல நிலையிலே நீர் இருப்பதால் அங்கு மின்சார உற்பத்தி நன்றாக இருக்கின்றது. ஆனால், அனல் மின் நிலையங்களிலே நடப்பு ஆண்டு 15 மில்லியன் டன் நிலக்கரி தேவைப்படுகின்றது. இந்தியாவிலேயே ஓரிசா, மேற்கு வங்காளம், பீகார் போன்ற மாநிலங்களில் கிடைக்கும் நிலக்கரியிலே 40 முதல் 45 சதவீதம் சாம்பல் சத்துள்ள நிலக்கரியை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், நம்முடைய அனல் மின் திட்டங்களினுடைய இயந்திரங்கள் அதனால் பழுது அடையக்கூடிய நிலை இருக்கின்றது. அந்த இயந்திரங்களில் தகுந்த மாறுதல்களை செய்து இந்தியாவிலேயே கிடைக்கக்கூடிய நிலக்கரியைப் பயன்படுத்தக்கூடிய



அளவிலே நாம் அதற்கான வழிவகைகளை பொறியியல் வல்லுநர்களைக் கொண்டு ஆராய வேண்டும். அப்படி இல்லாவிட்டால், தரமுயர்ந்த நிலக்கரியை வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்து அதனை இந்தியாவில் கிடைக்கக்கூடிய நிலக்கரியுடன் ஈடுகட்டக்கூடிய, சமன் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கான வழிவகைகளை ஆராய இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கரி போக்குவரத்துக்கு நாம் அதிகமான தொகையைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். 800 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் என்றால் 1,200 கோடி ரூபாய் வாகன வாடகையாகச் செலுத்திக் கொண்டு வருகிறோம். நமது தமிழகத்தில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தமிழ் காமராஜ், தமிழ் அண்ணா, தமிழ் பெரியார் என்ற மூன்று கப்பல்கள் மூலமாக நாம் நிலக்கரியைக் கொண்டு வருகிறோம். அது லாபகரமாக இயங்குகின்றதா, அப்படியென்றால் ஏன் இன்னும் அதிகக் கப்பல்களை வாங்கி போக்குவரத்தைச் சீர் செய்யக்கூடாது? நமக்குக் கட்டணமும் மிச்சமாகும். எனவே, அரசாங்கத்தின் மூலமாக அந்தக் கப்பல் போக்குவரத்தை அதிகப்படுத்தி நாம் அந்த நஷ்டத்தைக் குறைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

காற்றாலைகளின் மூலமாக நமக்கு இரண்டு ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தும்கூட, தற்போது 692 மெகாவாட் மட்டும்தான் உற்பத்தி செய்கின்றோம். ஏனென்று சொன்னால், அந்தக் காற்றாலைகளின் மூலமாக பெறப்படும் மின்சாரத்தை நமது மின் கட்டுமானப் பரிவில் மாற்றுவதற்குண்டான ரிசீவர்கள் போன்ற கருவிகள் இல்லாததுதான் காரணம் என்று சொல்கிறார்கள். அரசு அதை உண்மையா என்ற கண்டறிய வேண்டும். அப்படியென்றால் அந்தக் குறையைப் போக்கி இன்னும் தனியார்கள் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கு அரசு அதிகமான ஆதரவும் ஊக்கமும் அளித்து அவர்களை மின் உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

எல்.டி. கன்ஸ்யூமர் என்று சொன்னால் அதிகபட்சமாக 150 ஹார்ஸ் பவர் வைத்துக்கொள்ளலாம் என்று விதி இருக்கின்றது. நவீனமயமாக்கப்படும் திட்டத்திலே ஒரு இயந்திரத்தை

எடுத்துக்கொண்டால்கூட 30 ஹார்ஸ் பவர், 40 ஹார்ஸ் பவர் என்று தேவைப்படுகிறது. ஆகவே, எல்.டி. கன்ஸ்யூமருக்கு 150 ஹார்ஸ் பவர் என்பதை 250 ஹார்ஸ் பவராக உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பல சிறிய தொழிற்சாலைகள் அந்தக் கோரிக்கையை வைத்துள்ளன. ஆகவே, அரசு இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின் பயனீட்டு அட்டைகளில் நாம் ஒரே முறையை கடந்த பல ஆண்டுகாலமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றோம். ஆனால், தற்போது சிறு தொழிற்சாலைகளுக்கு 1,500 யூனிட் வரை ஒரு கட்டணம், அதற்கு மேலேயுள்ள யூனிட்டுகளுக்கு ஒரு கட்டணம் என்று வசூலித்துக் கொண்டிருக்கிறோம். அந்த விவரங்கள் அந்த கார்டுகளிலே இடம் பெறவில்லை. அதற்கு மேல் சர்வீஸ் சார்ஜஸ் வசூலிக்கின்றோம். இதுபோன்ற விவரங்களை எல்லாம் தெளிவாகக் குறிப்பிடும்படி அந்தக் கார்டுகளை மாற்றியமைத்து, பயனீட்டாளர்களுக்கு நன்கு புரியக்கூடிய வகையிலே அவற்றை மாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், கந்தம்பட்டியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்காக வருவாய்த் துறை ஒப்புதல் அளித்து நில ஆர்ஜித வேலைகள் எல்லாம் நடைபெற்றுவிட்டன. ஆனால், இன்னும் துணை மின் நிலையத்தைத் தொடங்குவதற்கான முயற்சிகள் நடப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, நடப்பு ஆண்டிலேயே அந்தத் துணை மின் நிலையத்தைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

ஓமலூர் தொகுதியிலே, ஓமலூர் மேற்கு மின் பகிர்மான அலுவலகம் அந்த எல்லையை விட்டு ஓமலூர் நகரிலே அமைந்திருக்கிறது. ஆகவே, ஓமலூர் மேற்குப் பகுதியிலே மத்தியிலே உள்ள பூசாரிப்பட்டி என்ற கிராமத்திலே இந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

மதுரை, சேலம் போன்ற மாநகராட்சிகளிலே மின் இலாகா இரண்டு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகிறது. தெரு விளக்கு பராமரிப்பு மாநகராட்சி ஊழியர்களால் நடத்தப்படுகிறது. மற்ற லைட், பல்புகள்



போன்ற எரக்ஷன் வேலைகளை மின் இலாகா செய்து வருகிறது. அதனால் அங்கே கோ-ஆர்டினேஷன் இல்லாமல், மாநகராட்சிக்கும் வாரிய ஊழியர்களுக்கும் ஒரு கூட்டு நடவடிக்கை இல்லை. ஆகவே, அரசு அதிலே கவனம் செலுத்தி அதைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு நாம் இலவச மின்சாரம் வழங்க உத்தரவிட்டபொழுது அந்நேரத்தில் நிலுவையிலேயிருந்த கடைசி மாதப் பில்லைக் கட்டாத காரணத்தினால் பல்வேறு இடங்களிலே விவசாய மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் துண்டிப்பை ரத்து செய்து, அவர்களுக்கு மீண்டும் மின்னிணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரிய மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய சூழ்நிலையிலே சம்சாரம் இல்லாமல் ஒரு மனிதன் வாழ்ந்து விடலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அப்படியிருக்கக்கூடிய நிலையிலே, நம்முடைய தமிழக அரசானது மின் உற்பத்தித் திட்டத்தைப் பெருக்குவதற்காகப் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டிருந்தாலும்கூட கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அரசு சொல்லியும்கூட அந்தத் திட்டங்கள் விரைவிலே நிறைவேற்றப்படாமல் மெத்தனமாக இருப்பதையெல்லாம் கண்டு வருகிறோம். ஆகவே, முயற்சியோடு சிறப்பாகச் செயலாற்றி வரக்கூடிய நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்னும் சிறப்புக் கவனம் செலுத்தி இந்தத் திட்டங்களையெல்லாம் வேகமாக முடுக்கிவிட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, இன்றைய மத்திய அரசாங்கத்தினுடைய மின் துறை அமைச்சராக இருக்கக்கூடியவர் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஆகவே, மின் துறையைப் பொறுத்தவரையிலே நம்முடைய சுறுசுறுப்பான, வேகமாகச் செயல்படக்கூடிய அமைச்சரவர்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கக்கூடிய மாண்புமிகு மத்திய

மின் துறை அமைச்சரவர்களை இன்னும் பெரிதும் பயன்படுத்திக்கொண்டு திட்டத்தை முழுமையாக, வேகமாக நிறைவேற்ற அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே இன்னொன்றும்கூட. இந்தக் குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு மின் திட்டம் என்று சொல்லுகின்றபொழுது, கிராமப்புறத்திலே சாதாரண மக்களெல்லாம் சொல்கிறார்கள், எம்.ஜி.ஆர். காலத்திலே கொண்டு வந்த திட்டம் என்று இன்னும் பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய நிலையிலே மனு கொடுத்தவுடனே வேகமாகக் கிடைக்க முடியாத நிலையிருக்கிறது என்று குறைபட்டுக்கொள்ளக்கூடிய நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, சாதாரண ஏழை மக்கள் பெறக்கூடிய குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு மின் திட்டம் என்ற அந்தத் திட்டத்தை இன்னும் வேகமாக முடுக்கிவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால், கிராமங்கள் முன்னேற வேண்டும், விவசாயம் முன்னேற வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் விவசாயிகள் கிணற்றை வெட்டிவிட்டு மின்னிணைப்பு பெற வேண்டுமென்று இங்கே மனு கொடுக்கின்றபொழுது பத்தாண்டு காலம், எட்டாண்டு காலம் காத்திருந்தாலும்கூட மின்னிணைப்பு பெற முடியாத அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலேகூட மின் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. ஆனால் அங்கே விண்ணப்பித்தவுடனே விவசாயத்திற்கு முன்னுரிமை அடிப்படையிலே கொடுத்து விடுகிறார்கள். ஆகவே....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எந்த மாநிலத்திலேயும் விவசாயத்திற்கு விண்ணப்பம் கொடுத்தவுடனேயே மின்சார இணைப்பு கொடுத்து விடுவது இல்லை. சீனியாரிட்டி அடிப்படையிலேதான் கொடுக்கப்படுகிறது. இப்போதைக்கும் தமிழ்நாட்டிலே இன்னமும் 4 இலட்சம் பேர் மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பித்து, 10 ஆண்டு காலமாகக் காத்திருக்கிறார்கள். அதிலே யாரும் தலையிடுவது இல்லை. சீனியாரிட்டி அடிப்படையிலே ஒவ்வொரு ஆண்டும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான்கூட கர்நாடக அரசிலே விசாரித்தேன். விண்ணப்பித்த 3, 4 மாதங்களுக்குள்ளே கொடுத்துவிடுகிறார்கள். விசாரித்துதான் சொல்கிறேன். இங்கே 40,000 பேர் காத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே விவசாயத்திற்கு முன்னுரிமை வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே விவசாய உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையிலே, முன்னுரிமை அடிப்படையிலே இன்னும் இந்த சீனியாரிட்டியை – சீனியாரிட்டியைக்கூட எடுத்துவிட்டு விவசாயிகளுக்கு உடனடியாக மின்னிணைப்பு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தெரு விளக்குகள். தெரு விளக்குகள் என்று சொல்லுகின்றபொழுது என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் கருணை உள்ளத்தோடு அதிகாரிகளிடத்திலே் சொன்னார்கள். அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, வேகமாக மின்னிணைப்பை வழங்க வேண்டுமென்று சொல்லியும்கூட இன்றைய வரையிலே அந்த வேலைகள் நடந்தபாடில்லை.

பிற்பகல் 12-35

நான் சட்டமன்ற உறுப்பினரானவுடனே, முதற்கூட்டத் தொடரிலே பேசுகின்றபோது, மின்சார வாடையே இல்லாத கிராமங்கள் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றன என்று சொல்லியும்கூட, இதுவரையிலும் அந்தக் கிராமங்களில் தெரு விளக்குகள்கூட அமைக்கப்படவில்லை. அதைச் சொல்வதற்குக் காரணம் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளுக்கு நிவாரணம் உடனடியாக வழங்கப்படுகிறது அல்லது வறட்சியால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளுக்கு வறட்சி நிவாரணம் உடனடியாக வழங்கப்படுகிறது. ஆனால் இப்படி மின்சாரமே இல்லாத நிறைய கிராமங்களக்கு, தெரு விளக்குகூட இல்லாத கிராமங்களக்கு மின் இணைப்பு தரப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, அப்படிப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி, அங்கே தெரு விளக்குகள், வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தெரு விளக்கு மின் இணைப்பு ஏற்கெனவே பெற்ற கிராமங்களுக்கு மீண்டும் தெரு விளக்கு மின் இணைப்பு அனுமதிக்கப்படுகிறது. தெரு விளக்கு மின் இணைப்பு

இதுவரை தராத கிராமங்களுக்கு, குறைவான தெரு விளக்கு மின் இணைப்பு தந்திருக்கின்ற கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கி மின் இணைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குகிறோம். விவசாயிகள் அதிகமாகக் கரும்பை விளைவிக்கின்றார்கள். அங்கேயுள்ள கரும்பாலைகள் அதிகமாக விளைகின்ற கரும்பை பதிவு செய்கின்றபோது, ஆலையினுடைய திறனை காட்டி ஒரு குறிப்பிட்ட அளவை மட்டும் பதிவு செய்துவிட்டு மற்றவற்றைத் திருப்பிவிடுகிறார்கள். ஆலையினுடைய திறனைவிட அதிகமாக இருக்கிறது என்று கூறி பதிவு செய்ய முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, விவசாயிகள் அந்தக் கரும்பை வெட்டி, தானாகவே வெல்லம் காய்ச்சக் கூடிய நிலைமை இருக்கிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கக்கூடிய இந்த நேரத்திலே அவர்கள் தானாகவே வெல்லம் காய்ச்சுவதற்குத் தேவையான மின்சாரத்தையும் இலவசமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை ஏற்கெனவே திருவண்ணாமலை மாவட்டத்தின் திருவேங்கடம் அவர்களிடத்திலேயிருந்து முதல்வர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் சர்க்கரை மில்களுக்கு கரும்பு கொடுத்தது போக, மிச்சத்தை வெல்லம் காய்ச்சத் தேவையான மின்சாரத்தை இலவசமாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனிமேல் தமிழ்நாட்டிலே, விவசாயிகள் தங்களுடைய நிலைத்திலே விளையக்கூடிய கரும்பை வெல்லம் காய்ச்ச பயன்படுத்துவார்களேயானால், அவர்கள் அதற்குண்டான மின்சாரக் கட்டணம் கட்ட வேண்டிய அவசியமில்லை என்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் அரசு நிதி வழங்கப்படுகிறது. அந்த நிதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் மின் இணைப்பு முன்னோடித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. ஆனால் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும்



பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மின் இணைப்பு அத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதில்லை. ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் கிணறு வெட்டுகிற அத்தகைய விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் போலவே விசைத்தறி வைத்திருக்கக் கூடியவர்கள், குடிசைத் தொழிலாக, ஒன்று அல்லது இரண்டு விசைத் தறிகளை வைத்துக்கொண்டு, பிழைப்பாக இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒன்று அல்லது இரண்டு விசைத் தறிகள் வைத்திருக்கக் கூடியவர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தை இலவசமாகத் தருவதை விரிவுபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஒரு சிறந்த திட்டம் தீட்டப்பட்டு, நீண்ட காலமாக, பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. காரணம் சொல்லப்போனால் இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினை என்கிறார்கள். இருந்தாலும்கூட மத்திய அரசின் உதவியோடு இதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே கர்நாடகத்தை விட்டுவிட்டு தமிழகத்திலேகூட இதை நிறைவேற்றலாம். காவிரியின் ஒரு பக்கத்தில், தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் அந்த நீர் வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர்த் தேக்கத்தை வைத்துக்கொண்டே, நம்முடைய பகுதியிலே சாதாரண தேக்க அணை அல்லது சின்ன அணையை உருவாக்கி, இருக்கக்கூடிய அந்த நீர் வீழ்ச்சியிலிருந்தே மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதிலே மனம் வைத்து, இந்த நீர் மின் திட்டத்தினை உருவாக்கித் தர வேண்டுமென்று தொகுதியின் சார்பிலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இதற்கு முன்னாலே கடந்த 4, 5 ஆண்டு காலமாக மினி மாவு மில் வைத்து இருக்கக் கூடியவர்களுக்கு மின் கட்டணம் இரத்து என்ற ஒரு நிலை அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த மினி மாவு மில் வைத்திருப்பவர்கள் மின் கட்டணமே கட்டாமல் இருந்தார்கள். கடந்த 2

மாதங்களுக்கு முன்பு அந்த நிலுவைத் தொகையை எல்லாம் கட்ட வேண்டுமென்று சொல்லி, இப்போது அரியராக, சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கிராமங்களில் வாழக்கூடியவர்கள் 5 ஆயிரம், 6 ஆயிரம் என்று கட்டக்கூடிய நிலை வந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் அதிகாரிகளிடத்தில் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, நிலுவையில் இருக்கக்கூடிய மின் கட்டணத் தொகையை இரத்துச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரியத்திலே நீண்ட காலமாக கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்; மேட்டூர் அனல் மின் நிலையத்திலே நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறார்கள். மற்ற எல்லா மின் நிலையங்களிலும் இருக்கக்கூடிய அத்தனை கான்ட்ராக்ட் தொழிலாளர்களையும் வாரியத் தொழிலாளர்களாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் வாரியப் பொறியாளர்கள் சங்கத்தின் சார்பிலே நீண்ட கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தினால் அந்தப் பொறியாளர்கள் சங்கத்தினுடைய கோரிக்கையை ஏற்று முடிந்த அளவிற்கு அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று மட்டும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களிலே நிறைய பேர் என்னிடத்திலே சொன்னார்கள்; வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய கிணறுகளுக்கு 2 பம்ப் செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு, அது இன்னும் நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதை முன்னோடித் திட்டத்திலே வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை



அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய தானைத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இன்றையதினம் நாட்டிலே விவசாயிகளுக்கு ஒரு விடிவுகாலம் இருக்கிறது என்று சொன்னால், அது கழகத் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான்., இலவசமாக மின்சாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒரு வீட்டிலே ஒருவருக்கு அரசாங்கத்திலே வேலை கொடுத்திருந்தால், அந்த குடும்பம் எப்படி நல்லபடியாக இருக்குமோ, அதேபோன்று இன்றைக்கு இலவச மின்சார இணைப்பு தரப்படுகிறது என்று சொன்னால், அந்தக் குடும்பத்தினுடைய விளக்கை ஏற்றி வைத்துவிட்டார் முதலமைச்சர் கலைஞர் என்றுதான் அர்த்தம். அந்த வகையிலே இலவச மின்சாரம் வழங்கி நம்முடைய ஆட்சி மிகச் சிறப்பாக செயல்படுகிறது; நல்ல அமைச்சர் நமக்குக் கிடைத்து இருக்கிறார் என்பதிலே நாமெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம். கிராமங்கள் எல்லாம் மின்சாரம் பெற வேண்டுமென்று கருதிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்த காலத்திலேதான் அத்தனை கிராமங்களும் மின்சாரம் பெறவேண்டும்; மின்சாரம் பெறாத கிராமங்களே இருக்கக்கூடாது என்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர். அவர் ஆட்சிக் காலத்திலேதான் இலவச மின்சாரம் தர வேண்டுமென்று சொல்லி, இன்றைக்குப் பல இலட்சக்கணக்கான விவசாயிகள் பிழைக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை நாம் வரவேற்காமல் இருக்கமுடியாது. ஆகவே, நம்முடைய நாட்டிலே இன்றைக்கு விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் எத்தனையோ ஊர்களுக்கு, தலைவர் அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னால், உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டு, உள்ளாட்சிகளில் இருக்கிற அத்தனைக் கிராமங்களிலும் பாழ்பட்டுப் போன விளக்குகள் எல்லாம் எரிகின்றன; பம்ப் செட்டுகள் எல்லாம் இயங்குகின்றன. அதுமட்டுமல்லாமல் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நடவடிக்கை காரணமாக கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிகள் உருவாக்கப்பட்டு அவைகள் எல்லாம் செயல்படுகிற காரணத்தால் மின்சாரத்தினுடைய உபயோகம் இப்போது நாட்டிலே அதிகமாகியிருக்கிறது. அதனால்தான் மின்சாரப் பற்றாக்குறை வருகிறதே தவிர வேறு ஒரு காரணமும் இல்லை. ஏனென்று

சொன்னால், இன்றைக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்துகின்ற தன்மை கழக ஆட்சி வந்த பின்னாலே, அது எங்கும் மிளிர்கிறது; பஞ்சாயத்துகளில் எல்லாம் விளக்குகள் எரிகின்றன; மேல்நிலைத் தொட்டிகள் இயங்குகின்றன; எங்கும் எல்லாம் செயல்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால்தான் மின்சாரத்தினுடைய உபயோகம் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, மின்சாரத்தை அந்த அளவுக்கு நாம் கொடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே தவிர, இப்போது மின்சாரப் பற்றாக்குறை வந்துவிட்டது; அரசு தவறிவிட்டது என்பதல்ல. இதற்கு முன்னால் இருந்த ஆட்சிக் காலத்திலே விளக்குகள் எரியவில்லை; பம்ப் செட்டுகள் ஓடவில்லை; மேல்நிலைத் தொட்டிகள் எல்லாம் இயங்கவில்லை; மின்சாரத்திற்கு அவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டு இருந்தது. ஆனால், இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்களும் அலுவலர்களும் தன்மையாகச் செயல்படுகிறார்கள்: அதிலே எந்தக் குறைபாடும் இல்லை. இன்றைக்கு மின்சார இணைப்புகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால், 1969-லே கழக ஆட்சி இருந்த காலத்திலேதான் மின்சாரக் கம்பிகள் எல்லாம் போடப்பட்டன. ஆனால் அதற்குப் பின்னால் 30 ஆண்டு காலமாக மின்சாரக் கம்பிகளை மாற்றவில்லை. அதற்கு முன்பாக 18 ஆண்டு காலம் ஓர் ஆட்சியை நடத்தியவர்கள் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட மின்சாரக் கம்பிகளை மாற்றாத காரணத்தால், பழுதடைந்த காரணத்தால் மின்சார இழப்பு ஏற்படுகிறது என்பதை நம்முடைய அரசு உணர்ந்து செயல்படுத்தினால் மின்சார இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, அன்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட மின்சாரக் கம்பிகளை மாற்றி அமைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும்.

பிற்பகல் 12-45

அதுமட்டுமல்ல, ஒரு நாட்டில் மின்சார உற்பத்தி அதிகமாக இருந்தால்தான் அந்த நாடு செம்மையாக இருக்கமுடியும். ஆகையால்தான் ரஷ்யா விடுதலை பெற்ற பின்னால் முதன்முதலில் லெனின் அவர்கள் மின்சார உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் தீட்டினார். மின்சார உற்பத்தி பெருகும்போது, ஒரு நாட்டின் உற்பத்தி பெருகுகிறது, தொழிற்சாலைகள் பெருகுகின்றன, தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது, விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதற்கெல்லாம் காரணம் மின்சாரம் என்பதை நம்முடைய அரசு உணர்ந்திருக்கிறது.



ஆகையால்தான் பல்வேறு இடங்களில் இன்றைக்கு மின்சாரத்தினுடைய அருமை கருதி, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீர் மின்சாரம் என்பது நீர்நிலைகள் எப்பொழுது ஏற்படுகின்றதோ அந்தக் காலத்தில் மட்டும் செயல்படுத்துகின்ற திட்டம். ஆக, கோடைக் காலத்தில் அந்த மின்சாரத்தைத் தயாரிக்கின்ற சூழ்நிலை உருவாகாமல் போகின்றபோது, அதற்கு மாற்றுக் கருத்தாக எப்படி மின்சாரத்தை உருவாக்க வேண்டும், எரிவாயு முறையில் எப்படி உற்பத்தி செய்வது என்பதை இன்றைக்கு கண்டு, களப்பால் எரிவாயு மின்சார நிலையத்தை உருவாக்குகிற தன்மையை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் வரவேற்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

அதேபோன்று காற்றாலை ஏற்படுகின்ற சூழ்நிலையில் ஆசியாவிலேயே முதன்முதலில் தமிழகத்தில்தான் அது செம்மையாக செயல்படுத்தப்படுகிறது. கோடைக் காலத்தில்தான் மின்சார உற்பத்தி செய்யமுடியும். காரணம், கோடையில் மட்டும்தான் காற்று அதிகம் வீசுகின்ற சூழ்நிலை வரும்போது மின்சார உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு காற்றாலை மின்சார உற்பத்தி செய்கிறோம் என்பதை நம்மால் வரவேற்காமல் இருக்கமுடியாது.

அடுத்து ஜீவன்தாரா திட்டத்தில் ஏழை எளியவர்களுக்கு கிணறுகளை வெட்டி மின்சாரம் வழங்குவதில் தாமதத்தைக் குறைத்து விரைவாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கித் தர வேண்டும். காரணம், ஆதிதிராவிட ஏழை எளிய மக்கள் ஏதோ குறைவான நிலங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கிணறுகளை வெட்டுவதற்கு செலவு செய்துவிட்டு பின்னர் சரியான முறையில் மின்சாரத்தைப் பெறமுடியாத சூழ்நிலை இருக்கும்பொழுது அவர்கள் விவசாயம் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் கஷ்டப்படுவதைத் தவிர்ப்பதற்கு நம்முடைய அரசு ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் ஆர்வம் காட்ட வேண்டும். அதேபோன்று குடிசைகளுக்கும் ஆதிதிராவிட காலனிகளுக்கும் மின்சாரம் கொடுப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்படும் நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல, அதற்கு ஓர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோட்டப் பொறியாளருக்கு இலக்கு 40 என்று சொன்னால், ஒரு ஒன்றியத்திலே 100 வீடுகளுக்கு

மேல் கட்டுகிற சூழ்நிலை வருகிறபோது எப்படி குடிசைகளுக்குக் கொடுக்க முடியும். அவர்கள், விளக்கு இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு விளக்கு அவசியம் தரவேண்டுமென்ற நிலையில் குடிசைகளுக்கும், காலனிகளுக்கும் மின்சாரம் கொடுப்பதில் நம்முடைய அரசு கொஞ்சம் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயில்களுக்கு மின் கட்டணம் வசூல் செய்வதில் கமர்ஷியல் கட்டண விகித முறையை நடைமுறைப்படுத்தி வருகிறோம். கோயில்களுக்கு கமர்ஷியல் கட்டண விகிதம் போடக்கூடாது. அவர்கள்-கோயில் நிர்வாகத்தில் அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு சிரமப்படுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக கோயில்களுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்திற்கு கமர்ஷியல் கட்டண விகிதத்தில் வசூல் செய்வதில்லை. ஆனால் அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் ஏதாவது கடைகளோ அல்லது விற்பனைக் கூடமோ வைத்திருப்பார்களேயானால் அப்பொழுதுதான் கமர்ஷியல் கட்டண விகிதத்தில் வசூல் செய்யப்படுகிறதே தவிர, அனைத்துக் கோயில்களுக்கும் கமர்ஷியல் கட்டண விகிதத்தில் வசூல் செய்வதில்லை.

பிற்பகல் 12-50

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சிறப்பான நடைமுறை இருந்தால் அதை நான் வரவேற்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் கும்பகோணத்தில் கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒன்று இயங்கி வருகிறது. அந்தச் சங்கத்திலே போன ஆண்டு மட்டும் 1 கோடியே 48 இலட்சம் ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறார்கள். அந்தச் சங்கத்தை வாரியமே எடுத்து நடத்தவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இலாபகரமாக இயங்குகிற சங்கத்தை வாரியம் எடுத்து நடத்தவேண்டிய அவசியம் இல்லை. காரணம் அது இலாபகரமாகச் செயல்படுகிறது என்பதை உறுதி செய்கிற வகையில், மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் இயங்கவேண்டும் என்பதையும், அரசு உத்தரவை இரத்துச் செய்யவேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், எல்லாக் கிராமங்களிலும் விவசாயம்தான் செய்கிறார்கள். அந்த மாவட்டம் விவசாயக் கிராமங்களை அடக்கிய பகுதியாக இருக்கிறது. ஒரு தொழிற்சாலைகூட இல்லை. விவசாயத்தையே நம்பியிருக்கிற விவசாயிகள் இருக்கிற காரணத்தால், ரூ.10,000 கட்டி விவசாயிகள் மின்சார இணைப்பு பெறக்கூடிய சூழ்நிலை தஞ்சையிலே இல்லை. இதுகுறித்து, அமைச்சரிடம் நான் கேள்வி ஒன்று கேட்டபோது, தஞ்சையிலே நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று சொன்னார். ஆனால், அதிகாரிகளைக் கேட்கிறபோது தஞ்சை ஜில்லாவுக்கு அந்தத் திட்டம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, தஞ்சை ஜில்லாவில் அதை நடைமுறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ரூபாய் பத்தாயிரத்தைக் கட்டி அதற்காக ஒரு நாளை நிர்ணயித்து, இந்தத் தேதியிலிருந்து அவர் பணத்தைக் கட்டியிருக்கிறார் என்றால் அவருக்கு இலவசமாக மின்சாரம் வழங்கலாம் என்ற ஒரு நிலையை உருவாக்கவேண்டுமென்ற ஒரு கட்டத்தை நாம் செயல்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நல்ல நிலையை நம்முடைய அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது. அரசாங்கம் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர் அவர்களும் உருவாக்கி, செம்மையாக இதிலே செயல்பட்டு மின்சாரத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இதை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் முழுக்கவே பொற்கொல்லர்கள், அது பெரிய பெரிய ஜுவல்லரியிலிருந்து சின்னச்சின்ன ஜுவல் செய்வதற்காக இருந்தாலும் சரி, அவர்கள் வீட்டில் வைத்துத்தான் வேலை செய்கிறார்கள். வேறு வழியில்லாத நிலையில், கூலிக்காக அவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் வீட்டில் வைத்து நகைத் தொழில் செய்கிறபோது, வியாபாரம் என்ற காரணத்தைக் காட்டி கடைகளுக்கு வாங்கக்கூடிய மின் கட்டணத்தை அவர்களிடமிருந்து இப்போது வசூலிக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இரணியல் பகுதியில் அதிகமான

பொற்கொல்லர்கள் கூலி வேலை செய்து தினம் 50 ரூபாய், 100 ரூபாய் பெறுகிறார்கள். அவர்களிடம் வீட்டுக்குரிய மின் கட்டணத்தை மட்டும் வசூலிக்க வேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்சாரப் பற்றாக்குறையானது இப்போது தீர்ந்தபாடில்லை. மின் அழுத்தக் குறைவு இருக்கிறது. செண்பகராமன்புதூரில் ஒரு துணை மின் நிலையம் ஆரம்பித்து வேலை இப்போது முடிந்துவிடும், இப்போது முடிந்துவிடும் என்று வருடக் கணக்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியை வேகப்படுத்தி விரைவில் குமரி மாவட்டத்தில் மின்சாரத் தட்டுப்பாடு இல்லால் மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் தங்களுடைய சம்பளப் பணத்திலிருந்து நிதியை எடுத்துக் கல்லூரிகள் - அதாவது மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி என்று கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அதுபோல மின்சார வாரியத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள், கல்லூரி ஒன்று தொடங்கத் தயாராக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை அரசாங்கம் கருத்தில் கொண்டு அவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் ஒரு கல்லூரியை ஆரம்பித்துவிட்டு அதிலே படிக்கிற மாணவர்களுடைய பிரச்சினை கேள்விக்குறியாகவே இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு அவர்கள் சுப்ரீம் கோர்ட்டை அணுகி இப்போதுதான் பத்து நாட்களுக்கு முன்பு ஆணை பெற்று, இந்த ஆண்டு மாணவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். எனவே, அரசாங்கமே மருத்துவக் கல்லூரிகள் நடத்திக்கொண்டிருக்கின்ற நேரத்தில், தனித்தனியாக ஒவ்வொரு இலாகாவும் மருத்துவக் கல்லூரி நடத்த வேண்டுமென்ற அவசியம் இல்லை. இதனால் தேவையில்லாத விளைவுகள் ஏற்பட்டு அந்தத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



**திரு. சி. வேலாயுதன்:** அதாவது, மின்சார வாரிய ஊழியர்கள் மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டுமென்ற ஆர்வத்தில் இருக்கிறார்கள். எனவே, அந்த முந்தைய அனுபவத்தை வைத்துக்கொண்டு, என்னென்ன பிரச்சினை ஏற்பட்டிருக்கிறதோ, அதைக் களைந்து, எந்த இடத்தில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க முடியுமோ அங்கே அவர்களுடைய அனுபவத்தைப் பயன்படுத்தி, அவர்களுடைய ஆர்வத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கல்வியறிவு அதிகமாக உள்ள மாவட்டம். அங்கே அரசுக் கல்லூரி ஒன்றுகூடக் கிடையாது. இந்தக் குறையைப் போக்குகிற வகையில், அரசாங்கம் நிதி தருவதற்குச் சிரமமாக இருக்கிற நிலையில் அவர்களாகவே முன்வரும்போது அந்தக் கல்லூரியைத் தொடங்க முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலித்து அவர்களோடு கலந்து பேசி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கல்லூரியை ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், நகர்ப்புறங்களுக்கு வெளியே இடத்தைத் தேர்வு செய்யும் சூழ்நிலை இருக்கிறது. எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஜனத்தொகை அதிகமாக, நெருக்கடி அதிகமாக இருந்தபோதிலும்கூட அரசுக்குச் சொந்தான இடம், தேசிய நெடுஞ்சாலைக்கு 100 அடிக்குப் பக்கத்திலேயே புலியூர்குறிச்சியில் இருக்கிறது. அங்கே அரசுக்குச் சொந்தமான இடம் 100 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரியையோ அல்லது வேறு கல்லூரியையோ இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப அமைத்து அங்கே அரசுக் கல்லூரி இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து பேசி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து, 1960 ஆம் ஆண்டு எங்கள் ஊருக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. எங்கள் ஊரில் அப்போதுதான் முதன்முதலாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. அப்போது போடப்பட்ட மின் கம்பங்கள் நல்ல நிலையில், எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இருக்கின்றன. ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட மின் கம்பங்கள் மாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. எனவே,

அரசாங்கத்திற்கு ஏற்படும் நஷ்டத்தைப் போக்கும் வகையில், 1960 ஆம் ஆண்டு எப்படி அந்த மின் கம்பங்களைச் செய்தார்கள், எங்கு செய்தார்கள் என்பதையெல்லாம் கண்டறிந்து அதுபோன்ற மின் கம்பங்களைச் செய்து வழங்குகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அது நஷ்டத்தைப் போக்குவதற்கும், அடிக்கடி மாற்றுகின்ற நிலையிலிருந்து மீள்வதற்கும், அவ்வாறு மாற்றுவதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்ப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, மின் கட்டணம் கட்டுவதற்காக பயனாளிகள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், புங்கரை என்ற ஊரைச் சேர்ந்தவர்கள் இன்னொரு பஞ்சாயத்துக்கு, அதாவது 5 கிலோ மீட்டர் தூரம் சென்று -- போக்குவரத்து வசதி இல்லாமல், இரண்டு பேருந்துகளில் ஏறிச் சென்று — சாமியார் மடம் என்ற ஊருக்குச் சென்று மின் கட்டணம் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, குறைந்தபட்சமாக பஞ்சாயத்திற்கு ஓர் இடம் என்ற வகையிலாவது பயனாளிகள் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏற்ற வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசாங்கத்திடம் மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்யும்போது மீட்டர் இல்லை என்று சொல்லி பல மாதங்கள் காத்திருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், வெளியிலே மீட்டர் வாங்கிக் கொடுத்தால் உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது. வெளியிலே மின் மீட்டர் கிடைப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, அரசாங்கமே அவற்றை வாங்கி பாமர மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின் வாரியம் நஷ்டத்தில் இயங்குவதாக பொதுவாகப் பேசப்படுகிறது. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒரு பிரிவான அகநிலைத் தணிக்கைக் கிளையின் சார்பாக ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில், வாரிய மைய அலுவலகங்கள் ஒட்டுமொத்தமாக வாங்கக்கூடிய மின் பொருட்களைத் தணிக்கை செய்வதில்லை என்றும்,



ஒப்பந்தக்காரர்களுக்கு மொத்தமாக பணப் பட்டுவாடா செய்வது மற்றும் அண்டை மாநிலங்கள், மத்திய அரசு ஆகியவற்றிடமிருந்து மின்சாரம் பெறும்போது அல்லது வாங்கும்போது கையாளப்படும் கொடுக்கல் வாங்கல் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதில்லை என்றும், நிதி நிறுவனங்களிடமிருந்து பணம் பெறும்போது கையாளப்படும் கணக்குகள் — இதுபோன்று உள்ள கணக்குகள் கிட்டத்தட்ட 6 வகை கணக்குகள் சொல்லப்படுகின்றன - 1993 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தணிக்கை செய்யப்படுவதில்லை என்றும் அந்த அகநிலை தணிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இவை எல்லாம் முறைப்படி தணிக்கை செய்யப்பட்டால் மின் வாரியத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பைத் தவிர்த்து இலாபகரமாக இதை இயக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு, தணிக்கை செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சில இடங்களில் மின் கட்டணம் செலுத்துவதற்குண்டான அலுவலகங்களை அமைக்க இடங்களை தேர்வு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். சங்காங்கடையைப் பொறுத்தவரையில் மின் கட்டணம் வசூல் செய்யும் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். அங்குள்ளவர்கள் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்காக வெகு தூரம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது — அப்பகுதி மக்கள் அதற்குண்டான ஒரு கட்டடத்தைச் சுட்டிக்காட்டி ஒரு வருடம் ஆனதற்குப் பிறகும் இன்னும் அரசாங்கம் அலுவலகம் தொடங்குவதற்கு அனுமதி வழங்கவில்லை. எனவே, அதற்கான அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மின் இணைப்பு கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் மீட்டர் இல்லை என்பதும், மின் கம்பங்கள் இல்லை என்பதுமாகும். அவை இரண்டும் எளிதில் கிடைத்து மின் இணைப்புகளை வெகு விரைவில் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செண்பகராமன்புதூர் துணை மின் நிலையத்தை வெகு விரைவில் இயங்கச் செய்தால் குமரி மாவட்டத்திற்கு மின்சாரம் செழிப்பாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மின்வெட்டுகூட, அறிவிக்கப்படாத மின்வெட்டுகூட, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆங்காங்கே இருக்கிறது. மின் அழுத்தக் குறைவு

இருக்கிறது. இவற்றையெல்லாம் போக்கிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

'வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்;
வாழிய பாரத மணித்திருநாடு;
வந்தே மாதரம்; வந்தே மாதரம்.'

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர். க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது புதிய தமிழகத்தினுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றியைக்கூறி நான் சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த சில மாதங்களாக, தமிழகத்தில் மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்று யாரும் சொல்ல முடியாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருப்பது, தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியிலே அக்கறை கொண்டிருக்கக்கூடியவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. 1917-லே ரஷ்யாவிலே புரட்சி ஏற்பட்டு, அதன் பிறகு அங்கே லெனின் அவர்கள் முதலாவதாகக் கவனம் செலுத்தியது அந்த நாட்டைத் தொழில் மயம் ஆக்குவதற்கு முன்பாக, மின்மயம்தான் ஆக்கினார்கள். மின்மயம் ஆக்கப்பட்டபிறகு, மின்சாரம் தடையில்லாமல் கிடைத்த பிறகுதான், அங்கே தொழில் வளம் செழித்தோங்கியது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, தமிழ்நாட்டிலே தொழில் வளம் பெருகவேண்டும்; விவசாயம் பெருகவேண்டும் என்று எண்ணுவோர் மின்சாரம் தடையின்றிக் கிடைப்பதற்குண்டான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

கடந்த சட்டமன்றத் தொடரிலே மின் தட்டுப்பாடு வருவதற்கும், அடிக்கொரு தடவை மின்தடை ஏற்படுவதற்கும் உண்டான பிரச்சினைகளெல்லாம் எழுப்பப்பட்டன. இன்று வரையிலும், என்ன காரணத்தினால் திடீரென்று — இவ்வளவு மழை பெய்திருந்தும்கூட — மின்சாரம் இப்படி அடிக்கொருதடவை தடைபட்டுவிடுகிறது என்பது விளக்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விஷயம்.



இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற புத்தகத்தில், தேசிய அளவில் மின் இழப்பு 21 சதவிகிதம்; தமிழ்நாட்டில் 17 சதவிகிதமாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 17 சதவிகிதம் மின் இழப்பு என்பது மிக மிக அதிகம். 17 சதவிகிதம் மின் இழப்பை வைத்துக்கொண்டு நிச்சயமாக மின்சார வாரியம் இலாபகரமாக இயங்கவே முடியாது. எவ்வளவு உற்பத்தி செய்தாலும், 17 சதவிகிதம் மின் இழப்பாகப் போகின்றபோது, அந்தக் துறை எப்படி இலாபகரமாக இயங்கமுடியும்? இது வெறும் சாதாரண மின் இழப்பா அல்லது மின் திருட்டா என்பதைக் கண்டுபிடித்தே ஆகவேண்டும். அப்பொழுதுதான் மின் வாரியம் முறையாக இயங்க முடியும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்தில் பொறியியல் வல்லுநர்கள் எல்லாம்கூட ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். என்னிடத்திலேயும் பேசினார்கள். மின் இழப்பு எப்படியெல்லாம் ஏற்படுகிறது என்பது பற்றி அதிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. விவசாயத்திலே கம்ப்ரசர்களைப் பயன்படுத்துவதால் அதிகமாக மின் சேதம் ஏற்படுகிறது என்றும், அதேபோல, பம்ப் செட்களில் இரண்டு முறை பம்ப் செய்யப்படுவதால் மின் சேதம் அதிகமாக ஏற்படுகிறது என்றும் லோடு சென்ட்ர் நகர்ப்புறங்களிலிருந்து வெகு தொலைவில் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் மின் சேதம் ஏற்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதேபோல், காற்றாலைகளில் கெபாசிட்டர்களைப் பொருத்துவது. அதிகமாக எல்லா இடங்களிலும் கெபாசிட்டர்களைப் பொருத்துவதன் மூலமாக மின் இழப்பை வெகுவாகக் குறைக்கமுடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. எனவே, மின்சாரத் துறை சீர்படுத்துவதற்கு, மின் இழப்பைத் தடுப்பதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒரு சதவிகிதம் குறைத்திருப்பதற்கு அல்லது தேசிய அளவிலே 21 சதவிகிதம் இருக்கிறது, தமிழ்நாட்டிலே 17 சதவிகிதம்தான் என்று நாம் பெருமைப்பட்டு விடக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-05*

தமிழ்நாடு அரசின் சார்பாக, குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு என்று அறிவிக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு,

ஏறக்குறைய மூன்றாவது ஆண்டு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் இலட்சக்கணக்கான குடிசைகளுக்கு ஒற்றை விளக்குகள் வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகாலம், 15 ஆண்டு காலத்திற்கு முன்பு தொடங்கப்பட்ட தொகுப்பு வீடுகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏழையெளிய மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம் இன்னும் இருண்டு கிடக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு, அவற்றிற்கு விளக்கு இல்லாமல் வைத்திருப்பது எந்தவிதத்திலும் சரியானதல்ல. ஒரு பகுதிக்கு இத்தனை இலக்கு என்று நிச்சயமாக நிர்ணயிக்கக்கூடாது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், ஒரு மாத காலம், இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்குள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனைக் குடிசைகளுக்கும், தொகுப்பு வீடுகளுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற உத்தரவு வர வேண்டும். அந்த உத்தரவும் அமலாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இலவச மின்சாரம்கூட பெரிய பெரிய பண்ணையாளர்களுக்குத்தான் அதிகமாகப் பயன்படுவதாகத் தெரிகிறது. பண்ணைத் தோட்டங்களை பல பெயர்களிலும், பினாமி பெயர்களிலும் வைத்துக்கொண்டு, 300 ஏக்கர், 400 ஏக்கர், 1000 ஏக்கர் நிலங்களை வைத்துக்கொள்ளக் கூடியவர்களுக்கும் இந்த மின்சாரம்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எந்தப் பண்ணையாளரும், 1000 ஏக்கர், 500 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு விவசாயம் செய்யவில்லை. ஏற்கெனவே 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் என்று நாம் சட்டம் கொண்டு வந்திருக்கிற காரணத்தாலே, அதற்கு உட்பட்டுத்தான் விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்தப் பண்ணையாளருக்கும் 1000 ஏக்கர் நிலமும் இல்லை, அதற்கு மின்சாரமும் நாம் வழங்கவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கணக்கிலே வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். எந்த நிலமும் பண்ணையார்களிடத்திலே இருந்து பிரித்துக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தம் என்பதை அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



எல்லா நிலங்களும் இன்னும் அவரவர்களிடத்திலே இருக்கின்றன. இன்னும் பிரித்துக் கொடுக்கப்படவே இல்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அப்படி அரசாங்கத்திற்குத் தெரியாமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருக்கக்கூடிய பண்ணையாளர்களின் பட்டியல் ஏதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே இருக்குமானால், அதைக் கொடுத்தால் அரசுக்கு உதவியாக இருக்கும். நிச்சயமாக யாராக இருந்தாலும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதிலே பழைய பண்ணையாளர்களும் அடங்குவார்கள், புதிய பண்ணையாளர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் யார் என்று பட்டியல் கேட்டார்கள். இருந்தால் பட்டியல் கொடுங்கள். இதிலே என்ன பழையது; புதியது?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பட்டியல் கொடுக்கப்படும். அடுத்து, வீடுகளிலே மின் கட்டணம் செலுத்துவது சம்பந்தமாக. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் இப்போது வீடுகளிலே மின் கட்டணம் செலுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அதில் ஒரு குறை இருக்கிறது. அதை மாதத்திற்கு ஒரு முறை என்று மாற்றவேண்டும். ஏனென்றால் இப்போது சீலிங் என்பதை 300 யூனிட் என்று வைத்துக்கொண்டால், அந்த 300 யூனிட் என்பதை 2 மாதங்களுக்கு சேர்த்து கணக்கெடுப்புச் செய்வது பயனீட்டாளர்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில் இல்லை, ஆகவே, மாதத்திற்கு ஒரு முறை என்று கணக்கிட்டுக் கொடுத்தால்தான் சாதாரணமாக பயன்படுத்தக்கூடிய வீடுகளுக்கும், குடும்பங்களுக்கும் பயனளிக்கும் என்று நான் இந்த நேரத்திலே இதை வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியத்திலே பணிபுரியக்கூடிய **assessor** என்று அழைக்கப்படக் கூடியவர்கள் பல ஆண்டுகாலாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, தமிழ்நாட்டில் வட மாவட்டங்களில் அதிக நேரம் மின்சாரம் கிடைக்கிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் பகுதிகளில், கிராமப் புறங்களிலே

மின்சாரம் என்பதே வருவது கிடையாது. அங்கே ஏற்கெனவே தொழிற்சாலைகள் இல்லை. தொழிற்சாலைகள் இல்லாத பகுதிகளில் மின்சாரமும் முழுமையாக இல்லாமல் போய்விட்டால் அங்கே தொழில்கள் தொடங்கவேண்டுமென்ற எண்ணமே இல்லாமல் போய்விடும்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஏதோ தென் மாவட்டங்களுக்கு மின்சாரமே கொடுக்கப்படாத ஒரு சூழ்நிலை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். தூத்துக்குடியிலேதான் சுமார் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. அங்கே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தைத் தென் மாவட்டங்களுக்குத்தான் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தொழிற்சாலைகள் இல்லை என்று சொன்னார். தூத்துக்குடியிலே 'ஸ்பிக்' பெரிய தொழிற்சாலை இருக்கிறது. பல தொழிற்சாலைகள் தென் மாவட்டங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்திலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தொழிலதிபர்களை அழைத்து, தென் மாவட்டங்களிலே தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், மின் இணைப்பு அனைவருக்கும் தாமதம் இன்றிக் கொடுக்க இலாகா தயாராக இருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புதியம்புத்தூர் என்ற கிராமத்தில் கார்மெண்ட் தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அங்கே ஏழையெளியவர்கள் சொந்தமாகத் தொழில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அங்கே மின்சாரம் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஓட்டப்பிடாரம், கழுகுமலை, கோவில்பட்டி போன்ற பகுதிகளிலே மின்சாரம் அடிக்கடி தடைபட்டு வருகிறது. குறிப்பாக, கிராமப் புறங்களிலே மின்சாரம் இல்லை என்பது பெருங்குறையாக இருக்கிறது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, தமிழகத்தினுடைய இன்றைய நிலையில், ஒரு மாறுதல் ஏற்பட்டு எதிர்காலத்திலே மின் தடையே இல்லை என்ற நிலை உருவாகிட, மின்சார வாரியம் நிர்வாக முறைகளை



மாற்றியமைக்கவேண்டும். அந்நடவடிக்கைகள் இருந்தால்தான் மின் இழப்புகளைத் தடுக்க முடியும்; விநியோகத்தைச் சீரமைக்க முடியும். தமிழக அரசு அதற்கு அதிகமான முதலீடு செய்து மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். அந்நிய கம்பெனிகளை முழுவதுமாக நம்பியிருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** எல்லாம் வல்ல என்னுடைய இதயநாயகன் முருகனையும், எங்களுடைய அன்புச் சகோதரர் மூப்பனார் அவர்களையும் வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய அறிக்கையின்மீது என்னைப் பேசப் பணித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தமிழ் மாநில காங்கிரசின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் முற்படுகிறேன். பொதுவாகவே, சம்சாரம், மின்சாரம் இரண்டையும் சரியாக வைக்காவிட்டால் சம்சாரத்தினால் உளவியலும், மினசாரத்தினால் உலகியலும் பாதிக்கப்படும். எனவே, இரண்டுமே அதிகமாக நெருங்கினாலும் தொல்லை. அதிகமாக தொட்டாலும் உயிருக்கே ஆபத்து வரக்கூடிய பிரச்சினை இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சம்சாரத்தைத் தொட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படாது. (சிரிப்பு)

**திரு. ப. மோகன் கந்தசாமி:** சம்சாரத்தைத் தொட்டால் உளவியல் நன்றாக இருக்கும். ஆனால் மின்சாரத்தைத் தொடாவிட்டால் உலகியல் கெட்டுவிடும் என்பதற்காகச் சொன்னேன்.

இந்த மானியத்திலே பல்வேறு கருத்துக்களை, நம்முடைய சக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஏராளமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் மீண்டும் அரைத்த மாவையே அரைத்து, சுட்ட தோசையையே சுடாமல் என்னுடைய தொகுதியிலுள்ள ஒருசில மின்சாரப் பிரச்சினைகளை மட்டும் சொல்லி அமரலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள பொங்கலூர் பகுதியில் ஏராளமான காற்றாலைகள் இருக்கின்றன. அந்தக்

காற்றாலைகள் மூலமாக மின்சாரம் இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. அதிகமான காற்று வீசுகிற காலங்களிலே, அந்த மின்சாரத்தைச் சேமித்து வைப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, சுல்தான்பேட்டை, இடையபாளையம், இலவஞ்சிவிடுது பாளையம் போன்ற இடங்களில் உள்ள அந்த மின் நிலையங்களில கிடைக்கின்ற மின்சாரத்தைச் சேமித்து வைப்பதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு, இதே மன்றத்திலே பேசும்போது நான் சொன்னேன். என்னுடைய தொகுதியிலே மின்சாரத்தைச் சரியான முறையிலே சேமித்து வைப்பதற்கு டிரான்ஸ்ஃபார்மர்கள் போதாது என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகுந்த கனிவோடும் பணிவோடும் நிறைய இடங்களிலே எங்களுக்கு டிரான்ஸ்ஃபார்மர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே, அதிகமான நெசவாளர்கள் இருக்கின்ற ஒருசில இடங்களிலே, நெசவுத் தொழில் செய்வதற்கான மின்சாரம் எப்போதுமே தேவைப்படுகின்றது. அந்தமாதிரியான இடங்களிலே இன்னும்கூட டிரான்ஸ்ஃபார்மர்கள் மாற்றாமல் இருக்கிறார்கள். அதை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

குறிப்பாக விவசாயம் பொய்த்துப் போகின்ற சூழ்நிலையிலே ஏராளமான விவசாயிகள் கோழிப் பண்ணை வைத்து தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கோழிப் பண்ணை களில் அவர்கள் சாதாரண பல்புகளைத்தான் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு commercial கட்டண விகிதம் வசூலிக்கிறார்கள். நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சரிடம் இதுபற்றிக் கேட்டேன். இப்போது அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் அதற்கு commercial கட்டண விகிதமும் இல்லாமல், வீட்டிலே உபயோகிக்கக்கூடிய மின்சாரத்திற்கு வசூலிக்கப்படும் கட்டண விகிதமும் இல்லாமல் நடுவிலே ஏதாவது ஒரு மின் கட்டண விகிதத்தை வைத்து அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலத்தில் இதுபோன்ற நிலை இருப்பதாகக் கூறுகிறார்கள். சென்ற முறை நான் கேட்கும்போது அமைச்சர் அவர்கள் வேறு இடங்களில் இருந்தால் பரிசீலிக்கலாம் என்று



சொல்லியிருக்கிறார்கள். கர்நாடகத்திலே கோழிப் பண்ணைக்கு குறைந்தபட்ச மின் கட்டண விகிதம்தான் போட்டிருக்கிறார்கள். வீட்டிற்கு விதிக்கப்படுகிற கட்டண விகிதத்தைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாக விதித்திருக்கிறார்கள். எனவே, இந்த முறையாவது அவசியம் அதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏராளமான தொகுப்பு வீடுகளை நாம் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக ஏழையெளிய மக்கள் நம்முடைய அரசைப் பாராட்டுகிறார்கள். ஆனால் அதேநேரத்தில் அவர்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் தாமதம் உள்ளது. நம்முடைய அரசு வந்ததற்குப் பின்னால் ஏராளமான மின் விளக்குகள் எல்லா இடங்களிலேயும் போடப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சென்றால் தெரு விளக்குகள் இல்லை, இல்லை என்று புகார் வரும். இப்போது ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு தெரு விளக்குகளை வாங்கி கிராமங்களில் பொருத்துவதற்குத் தயாராக வைத்திருக்கிறார்கள். ஆனால், அதைப் பொருத்துவதற்கு line-men தான் இல்லை. ஏற்கெனவே இருந்த அத்தனை பேரும் வயதானவர்கள். மின் கம்பத்திலே ஏற முடியாதவாகள். அவர்கள் அதைக் காரணம் காட்டி காலதாமதம் செய்கிறார்கள். ஏராளமான line-men தேவையாக இருப்பதாக ஒவ்வொரு முறையும் சொல்கிறார்கள். முன்பு விளக்குகள் போதாத காலமிருந்தது. இப்போது தெரு விளக்குகளை வாங்கி வைத்துக் கொண்டு அதைப் பொருத்துவதற்கு முடியாமல் பல கிராமங்களில் இன்றைக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, உடனடியாக அதற்குரிய ஆணையிட்டு line-men அதிகமாக நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தது. இலவச மின்சாரம் கொடுத்ததைப் போல ஏராளமான சின்னச் சின்ன கிராமங்களிலே இருக்கிற கோவில்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும். பல சிறிய கோவில்களில் மின் விளக்கு இல்லை. அந்தச் சிறிய கோவில்களுக்காவது இலவசமாக மின் விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று மீண்டும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிறிய கோவில்களுக்கு கொடுத்தால் போதும். பெரிய நகரிலுள்ள கோவில்களுக்கு வேண்டாம். இப்போது சிறிய சிறிய குக்கிராமங்களில் கூடக் கோவில்கள் இல்லாமல் இல்லை. கோவில் இல்லாத ஊரிலே

குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கேற்ப எல்லா ஊர்களிலும் கோவில்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே மின் விளக்குகள் இல்லை. எனவே, தயவு செய்து சிறிய கோவில்களுக்கு இலவசமாக மின் விளக்கு வசதி செய்து தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீதி விளக்குகள் அமைப்பதற்காக முன்பு 3340 ரூபாய் வசூலித்தார்கள். ஆனால், தற்போது அந்த விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென்றால் அதைவிட அதிக ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லி புதிதாக ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து அந்த விளக்குகளை அமைப்பதற்கு பழையபடி 3340 ரூபாய் கொடுத்தாலே போதும் என்று ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் எல்லாம் முன்னுரிமை அடிப்படையிலே மின்சார இணைப்பு வேண்டி 10 வருடமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 10 வருடம் ஆகியும்கூட சில விவசாயிகளுக்கு அந்த இணைப்பு கிடைக்காமல் அவர்கள் தடுமாறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, தயவு செய்து 10 வருடமானால் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குண்டம் பகுதியிலே மானூர்பாளையம் என்ற கிராமத்தில் 45 பேர்கள் தங்கள் வீட்டிற்கு மின்சாரம் வேண்டும் என்று கேட்டு பணம் கட்டி நீண்ட நாட்கள் ஆகிறது. மீட்டரை நீங்கள்தான் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று துறையினர் சொன்னார்கள். மீட்டரை அவர்கள் வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை டெஸ்ட் செய்வதற்கு 650 ரூபாய் கேட்கிறார்கள். கிராமத்திலே இருக்கிற ஏழையெளிய மக்கள் மீட்டரை வாங்கி வைத்துக்கொண்டு அதை டெஸ்ட் செய்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இரட்டைச் செலவாகிறது. எனவே, உடனடியாக அந்த மீட்டர்களைப் பொருத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு குடிசைகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பல இடங்களிலே நாங்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது இன்னும்கூட குடிசைகளுக்கு மின்சார இணைப்பில்லாத ஒரு குறையைக் காண முடிகிறது. அந்தக் குறையையும் தீர்த்து வைத்து, குடிசைகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்து, நம்முடைய அரசுக்கு இருக்கும் நல்ல பெயரை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-20

இங்கே சில மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது, கோவில்களுக்குப் போடப்படுகிற கட்டண விகிதம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அதைச் சாதாரண கட்டணமாக மாற்றிக் கொடுத்து இந்த அரசு நல்ல பெயர் வாங்க வேண்டும்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மிகவும் சிக்கலான துறை. (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய அமைச்சரவர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரத் துறை சிக்கலான துறை என்பது எல்லோருக்கும் புரிகிறது. சிறு தொழில்களுக்கு மின்சாரம் கிடைக்காத சூழ்நிலையில் ஏராளமான நண்பர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த இலாகாவைச் சீர்படுத்தும் வகையில், உடனடியாக நிவர்த்தி வேலைகளையெல்லாம் செய்துதர வேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

***திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தினுடைய 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை விவர அறிக்கையினை வரவேற்று, இதன் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில், இன்று பல்வேறு கஷ்ட நஷ்டங்கள் இந்தத் துறைக்கு இருந்தாலும், சிறப்பான முறையில் செயல்படுகிறது என்று சொன்னால், அதற்கு, நாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மின் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழகம் விவசாயிகள் நிறைந்த மாநிலம். விவசாயிகள்மீது கருணைகொண்டு, இலவசமாக மின்சாரம் வழங்கி, உணவு உற்பத்தியைப் பெருக்கி, மக்களுடைய பசியைப் போக்க வேண்டுமென்று முதன்முதலாக நினைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்ல, அதிக

எண்ணிக்கையில் விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கின்ற மாநிலமும் தமிழகம்தான். ஒரு காலகட்டத்தில் கலைஞர் ஆட்சியில் இல்லாத நேரத்தில், அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் அதை எடுத்துவிட வேண்டுமென்று துணிந்த நேரத்திலே அதற்காகப் போராடி, தான் ஆட்சியிலே இல்லையென்றாலும்கூட விவசாயிகள் நலனுக்காகப் போராடி, அதைத் திரும்பப் பெற்று இலவச மின்சாரத்தை விவசாயிகள் தொடர்ந்து அனுபவிப்பதற்குக் காரண கர்த்தாவாக டாக்டர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள். அதற்காக, விவசாயிகள் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, கரும்பு ஆலைக்கு இந்த வாரியத்திலே இருக்கின்ற அதிகாரிகள் தீடிரெனக் கட்டணத்தை நிர்ணயித்து, அதை வசூலிக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். ஆனால், நம்முடைய உறுப்பினர்கள், முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்தவுடன், தாயுள்ளத்தோடு அதை இரத்துச் செய்து, விவசாயிகளை அபாய கட்டத்திலிருந்து காப்பாற்றினார்கள் என்று சொன்னார்கள். இப்படி, விவசாயத்திற்கு முன்னுரிமை தந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வரவர்களை நாம் பாராட்டவும் போற்றவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாநிலத்திற்கு எராளமான மின்சாரம் தேவைப்படுகிறது. விவசாயத் துறையானாலும் தொழில் துறையானாலும் மின்சாரம் இல்லாமல் வாழ்க்கையை நடத்த முடியாத சூழ்நிலையில் சமுதாயம் இருந்து கொண்டிருக்கிறது. மின்சார உற்பத்திக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் முன்னோடியாக தமிழகத்திலே விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். எண்ணூரிலே இரண்டு அனல் மின் நிலையத்திற்கான திட்டங்கள்; அதுபோல தூத்துக்குடியிலே. இந்த 2-1/2 ஆண்டு காலத்தில் நம்முடைய முதல்வர் அவர்களும், மின் துறை அமைச்சர் அவர்களும் ஏராளமான மின் உற்பத்தித் திட்டங்களைக் கொண்டு வருவதற்கு துரித நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்திலே ஒரு நேரத்திலே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னவுடனேயே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், அண்டை மாநிலமான மகாராஷ்டிரா, வட மாநிலமான பஞ்சாப் மற்றும் கிழக்கு



மண்டலங்களிலிருந்து தேவையான மின்சாரத்தைப் பெற்று, பெரிய அபாயகரமான சூழ்நிலையிலிருந்து தமிழக மக்களையும் தொழிலையும் விவசாயத்தையும் காப்பாற்றியதற்காக விவசாய மக்கள், தொழில் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

தனி நபர்கள் பல இடங்களிலே மின் உற்பத்தியைச் செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு எடுத்து வருகிறது. அவற்றை எல்லாம் விரைவாக நிறைவேற்றுவோமேயானால், நிச்சயமாகத் தமிழகத்திலே மின் பற்றாக்குறை இல்லையென்ற அளவில், நம்முடைய மாநிலம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக விளங்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். இங்கேகூட நான் அறிக்கையிலே பார்த்தேன். திருவண்ணாமலை மாவட்டத்தில், சாத்தனூர் புனல் மின் திட்டம் நிறுவப்பட்டு வருகிறது என்றும், 95 சதவீதம் பணிகள் நிறைவு பெற்றிருப்பதாகவும் நம்முடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். விரைவாக அதைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அதுபோல, தெரு விளக்குகள் குறித்துக் கூற விரும்புகிறேன். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இணைந்து ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த வேண்டும். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் தலைவர்கள், நகராட்சிகளில், ஊராட்சிகளில், பேரூராட்சிகளில் அதிகமான அளவில் தெரு விளக்குகள் அமைக்க வேண்டியிருக்கிறது என்றும், அதனால் அதிகப்படியான கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும், அதன் காரணமாக கட்டண விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்றும், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை வைக்கிறார்கள். அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். ஜீவன்தாரா கிணறு என்கிற திட்டத்தின்கீழ், ஏழையெளிய மக்களுக்கு கிராமத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு,

மலைவாழ் மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு இலவசமாக கிணறு எடுக்க தொகை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் கிணறும் எடுக்கப்பட்டு விடுகிறது. ஆனால், ஆதிதிராவிட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு மட்டுமே மின் இணைப்பில் முன்னுரிமை தரப்படுகிறது. எனவே, நம்முடைய அரசு நிதி எவ்வளவு செலவானாலும் அதை ஏற்று, பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய மக்களுக்கும் ஜீவன்தாரா கிணறு அமைக்கும் திட்டத்தில், முன்னுரிமை கொடுத்து பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு உண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு, நம்முடைய மாநிலத்தில் 40,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்தில் மட்டும் இந்தத் திட்டத்தின்கீழ், 1800 விவசாயிகள் மட்டுமே மின் இணைப்பைப் பெற்று இருக்கிறார்கள். இங்கே உறுப்பினர்கள் சொல்லியதுபோல, 10 ஆண்டுகளுக்கு மேலாக, 11, 12 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருந்தபின்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்த காரணத்தால்தான், இறைவை பாசனத்தின் மூலம் இன்றையதினம் உணவு உற்பத்தியில் அது முன்னோடியாக விளங்குகிறது. இப்போது கணக்கெடுத்துப் பார்த்தால், அந்த மாவட்டத்தில் 45,000 விவசாயிகள் மின் இணைப்பு கோரியிருக்கிறார்கள். சீனியாரிட்டி அடிப்படையில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அந்த விவசாயிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் கிணறுகள் அதிகமாக இருக்கின்றன, தண்ணீரும் கிணற்றில் இருக்கிறது. மின்சாரம் இருந்தால் இன்னும் அதிகமான அளவு உணவு உற்பத்தி செய்ய முடியும். அப்படி உணவை அதிகமான அளவில் உற்பத்தி செய்யும்போது, நம்முடைய மாநில அரசு அடிக்கடி மத்திய அரசை அரிசி ஒதுக்கீட்டிற்காக கோரும் நிலையினைப் போக்கலாம். ஒரு காலத்திலே, இன்றைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வட மாநிலங்களுக்குக் கூட, கேட்ட மாநிலங்களுக்கு எல்லாம் அரிசி தந்து கொண்டிருந்தார்கள். அந்த நிலையை நம்முடைய மாநிலம் எட்ட வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்கு, குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் இருக்கிற 45,000 விவசாயிகளுக்கு முன்னுரிமை தந்து மின் இணைப்புத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம், 8 கோட்டங்களைக் கொண்ட ஒரு மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து இன்னொரு புதிய கோட்டமாகப் பிரித்து செயல்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அதை விரைவாக செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால், பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் போன்ற ஏராளமான பதவிகள் காலியாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்திற்குள் உரையை முடியுங்கள்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** சில பதவிகள் மாறுதல் காரணமாக காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தக் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் 11 இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு முன்னுரிமை தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுகொள்கிறேன். அதுபோல என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில், வில்வாரணியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதை விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

இறுதியாக எங்களுடைய மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் போதிய வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீர்வளம் இருக்கிறது. மலையிலே அவர்கள் விவசாயத்தையோ மற்ற தொழில்களையோ செய்ய வேண்டுமென்று சொன்னால் ஆலங்காயத்திலேயிருந்துதான் அவர்களுக்கு இப்போது மின்சாரம் கிடைக்கிறது. அதனாலே ஜமுனாமருதூர்-ஜவ்வாது மலையிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்து, அந்த மலைவாழ் மக்கள் விவசாயம் செய்து தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு ஜமுனாமருதூரிலேயும் ஒரு

துணை மின் நிலையம் அமைத்து, அந்த மலைவாழ் மக்கள் விவசாயம் செய்து தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு ஜமுனாமருதூரிலேயும் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அமைச்சரையும் அரசையும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஆ) பேரவை நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலில் பின்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது:

27-11-1998 வெள்ளிக்கிழமை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதாக இருந்த 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) (ஆய்வுக் குழு திருத்தியமைத்தவாறு) 28-11-1998 சனிக்கிழமை அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அரசினர் சட்டமுன்வடிவுகள் 27-11-1998 அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-11-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

43. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கூக்கல் கிராமத்தைச் சேர்ந்த குண்டுபட்டியில் 26-2-1998 அன்று காவல் துறையினர் அத்துமீறி நடந்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் பற்றிய நீதிபதி திரு. அ. முருகேசன், ஒரு நபர் விசாரணை ஆணையம் அளித்த அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ்)



44. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வளர்ச்சி மையம், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொழிலியல் காம்ப்ளக்ஸ் ஆகியவற்றை தொழிலியல் நகரியப் பகுதிகளாக அறிவிப்பது மற்றும் விதிகளை வகுப்பது குறித்து தொழில் துறையின் 23-6-1998 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1997) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

45. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்பு விதிகளை வகுப்பது குறித்து தொழில் துறையின் 23-6-1998 ஆம் நாளிட்ட 281 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1997) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

46. மொத்த வியாபாரிகள், வணிகச் சங்கங்களின் சார்பாளர்களை கோயம்பேடு அங்காடிக் குழுவிற்கு உறுப்பினர்களாக நியமனம் செய்தது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22-6-1998 ஆம் நாளிட்ட 228 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1996) 67(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

47. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) கீழ் 1992-93 ஆம் வரி விதிப்பு ஆண்டுக்கு வேளாண்மை வரித் தொகையை முன்கூட்டியே செலுத்துவதற்குரிய கடைசி நாள் 1992, பிப்ரவரித் திங்கள் இறுதி நாள் என்றிருந்ததை 1992, ஜூன் திங்கள் இறுதி நாள் என்று, தனி நேர்வாகக் கருதி நீட்டிப்பது குறித்து வருவாய்த் துறையின் 29-4-1992 ஆம் நாளிட்ட 505 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1991) 15(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[1998 நவம்பர் 24

48. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

49. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

16. 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1995) கீழ் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்ஃபுக்கள் (நில அளவை ஆணையர் அறிக்கை) விதிகள் வகுப்பது குறித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறையின் 6-4-1998 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

17. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை (தொகுப்பு I மற்றும் II)

18. தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் நடைபெறும் வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய அமைக்கப்பட்ட நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

19. 1998-99 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

20. 1998-99 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்)

21. 1998-99 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)



1998 நவம்பர் 24]

## இணைப்பு

(577 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

1. சட்டப் பேரவையில் 14-05-1998 அன்று வைக்கப்பட்ட தமிழ்நாடு மின்வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையையும் 1997-98 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டினையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தால், 1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-ஆம் பிரிவின்படி, தமிழ்நாடு மின்வாரிய ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை விவர அறிக்கைகள் அரசுக்கு பணிந்தனுப்பப்பட்டன.

2. தமிழ்நாட்டில் மின் உற்பத்தி, செலுத்துகை மற்றும் மின் விநியோகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு சிக்கனமாகவும், சிறப்பாகவும் செயல்பட தமிழ்நாடு மின்சார வாரியம் உறுதி பூண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் மிக அவசியமான இடுபொருள். இந்த அரசு மின் உற்பத்தியைப் போதுமான அளவுக்கு அதிகப்படுத்தி மாநிலத்தில் மின்வெட்டு இல்லாதவண்ணம் கொண்டுவருவதற்கு மிக உறுதுணையாக உள்ளது. நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. எனவே, குறுகிய காலத்தில் நிறுவி பயன் அளிக்கும் எரிவாயு, நாப்தா மற்றும் டீசல் போன்ற எரிபொருளைப் பயன்படுத்தி அமையும் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

3. இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் அரசுக் கொள்கை திட்டங்களை ஆழ்ந்து விவாதிக்கவும், மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டங்களைப் பற்றிப் பரிசீலிக்கவும் நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று நம்புகிறேன். துவக்கமாக, இந்த மாநிலத்தின் மின்சார நிலை பற்றிய கண்ணோட்டத்தை அளிக்க விரும்புகிறேன்.

### மின் வழங்கல் நிலைமை

4. கடந்த 1997-98 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை தமிழ்நாட்டில் நன்றாக இருந்தது. நிலத்தடி நீர் ஆதாரம் போதுமானதாக இருந்தது. இது விவசாயப் பணிகளுக்கு ஒரு உத்வேகம் கொடுத்தது.

அதனால் மின் மோட்டார்கள் விவசாயப் பணிகளுக்கு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. மின் உபயோகம் பிப்ரவரி 1998-லிருந்து கோடைக்காலம் வரை தினசரி 100 மி.யூனிட் என்ற அளவில் இருந்தது. இந்த அதிகமான மின் நுகர்வு புனல் ஆதாரங்களின் அளவை வெகுவாகக் குறைத்தது. எனவே, ஜூன் மாதத்தில் பருவமழை வரை புனல் ஆதாரங்களைச் சேமிப்பதற்காக மின் சுமைகளையும் மின் உபயோகத்தையும் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டியிருந்தது. எனவே, 12-3-1998-லிருந்து விவசாய மோட்டார்களுக்கு மின்சாரம் வழங்குவது தினசரி 14 மணியிலிருந்து 10 மணியாகக் குறைக்கப்பட்டது. புறநகர்ப் பகுதிகளில் தினமும் ஒன்றரை மணி நேரம் மின்சாரம் நிறுத்தப்பட்டது. தொழிலகங்கள் தங்களுடைய சொந்த மின் உற்பத்தியில் தொழிற்சாலைகளை இயக்குமாறு கோரப்பட்டன.

5. தமிழ்நாடு அரசின் கோரிக்கையின்படி நாளொன்றுக்கு 6 மி. யூனிட்டுகள் வீதம் மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் கிழக்கு மண்டலத்திலிருந்து மின்சாரம் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. மைய அரசும், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து நாளொன்றுக்கு கூடுதலாக 2 மி.யூனிட்டுகள் மின்சாரம் வழங்கியது. ஆயினும், தொழில்நுட்பக் காரணங்களினால் மேற்கண்ட அளவுகளில் தினசரி 1.12 மி.யூ. மட்டுமே பெற முடிந்தது. அதனால் 20-4-1998 முதல் 150 கே.வி.ஏ.-க்கும் அதிகமான மின்சுமை கொண்ட உயரழுத்த மின் இணைப்புகளுக்கு மின் சுமையில் 30% மின் வெட்டு அமல்படுத்தப்பட்டது.

6. 12-6-1998 முதல் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் தமிழ்நாடு மின்சார வாரியம் கூடுதலாக 170 மெகாவாட் (நாளொன்றுக்கு 4 மி.யூ.) மின்சாரம் உற்பத்தி செய்ய முடிந்தது. எனவே, விவசாய பம்புசெட்டுகளுக்கு ஏற்படுத்தியிருந்த கட்டுப்பாடும் புறநகர்களில் அமல்படுத்தப்பட்ட மின் நிறுத்தமும் 20-6-1998 முதல் விலக்கிக்கொள்ளப்பட்டன. தென்மேற்குப் பருவமழை ஜூலை 1998-ல் நீரேற்று நிலையங்களுக்கு நல்ல நீர் வரவை அளித்தது. புனல் மின் நிலையங்களில் நீர் ஆதாரம் அதிகரித்து வந்ததுடன் மின் சுமையும் விநியோகமும் குறைந்தன. எனவே, 10-7-1998 முதல் உயரழுத்த மின் இணைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த 30% மின் வெட்டு விலக்கிக் கொள்ளப்பட்டது. கடந்த 1997-98 ஆம் ஆண்டில் மின் உபயோகம் 4.17% உயர்ந்திருந்தது. இதே ஆண்டில் 34,065 மி.யூனிட் அளவிற்கு மின் உற்பத்தியிருந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் இது 32,700மி.யூ. ஆக இருந்தது.





7. மேட்டூர் நீங்கலாக மற்ற புனல் நிலையங்களின் நீர் ஆதாரம் 31-10-1998 ஆம் நாளன்று முழு அளவாகிய 2393 மி.யூனிட்டுக்கு பதிலாக 1741 மி.யூ. மட்டுமேயிருந்தது. மேட்டூரின் நீர் ஆதாரம் 87 மி. யூனிட்டாக இருந்தது. சென்ற ஆண்டு இதே நாளான 31-10-1997 அன்று மேட்டூர் நீங்கலாக மற்ற புனல் நிலையங்களின் நீர் ஆதாரம் 1614 மி.யூ. ஆகவும் மேட்டூரின் நீர் ஆதாரம் 91 மி.யூ. ஆகவும் இருந்தது. தென் மேற்குப் பருவக்காற்று தமிழ்நாட்டிற்கு சாதகமாக இருந்ததால் நீலகிரி மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு நீர்த்தேக்கங்களில் அதிகமான நீர் வரத்து இருந்தது.

## அனல் மின் நிலையங்களின் செயல்பாடு

8. கடந்த 1996, 1997ஆம் ஆண்டுகளில் அனல் மின் நிலையங்களின் செயல்பாடு திருப்தியாகவே இருந்தது. அவற்றின் எரிபொருள் உபயோகம், துணைக் கருவி உபயோகம் மற்றும் உற்பத்தித் திறன் உயர்வு ஆகியவை, அவற்றைக் கீழ்க்கண்ட பரிசுகளுக்குத் தகுதியானவையாக ஆக்கியிருக்கின்றன.

| வ எண் | மின் நிலையங்கள் | வருடம் | பரிசு |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி அனல் மின் நிலையம் | 1996 & 1997 | உபரி பாகங்களின் மின் நுகர்வுக்காகவும், குறைவான எண்ணெய் நுகர்வில் அதிக மின் உற்பத்திக்கான பரிசு |
| | | 1996-97 | அதிகமான மின் திறன் உற்பத்திக்கான பரிசு |
| | | 1997-98 | அதிகமான மின் திறன் உற்பத்திக்கான பரிசு |
| 2. | மேட்டூர் அனல் மின் நிலையம் | 1996 & 1997 | உபரி பாகங்களின் குறைவான மின் நுகர்வுக்காகவும், குறைவான எரி எண்ணெய் நுகர்வில் அதிக மின் உற்பத்திக்கான பரிசு |
| 3. | எண்ணூர் அனல் மின் நிலையம் | 1996 & 1997 | குறைவான எரி எண்ணெய் நுகர்வில் அதிக மின் உற்பத்திக்கான பரிசு |
| 4. | வட சென்னை அனல் மின் நிலையம் | 1997 | குறைவான எரி எண்ணெய் நுகர்வில் அதிக மின் உற்பத்திக்கான பரிசு |
| | | 1996-97 | அதிக மின் திறன் உற்பத்திக்கான பரிசு |

[1998 நவம்பர் 24

அனைத்து மின் நிலையங்களும் எதிர்காலத்தில் தங்கப் பதக்கங்கள் பெறுவது என்ற நோக்கில் தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

**மின் கட்டமைப்பின் உச்சத் தேவை மற்றும் நிறுவு திறன்**

9. இந்த மின் கட்டமைப்பு கடந்த 1997-98-ல் 4946 மெ.வா. என்ற உச்சத் தேவையை அடைந்தது. இது 1996-97-ல் 4888 மெ.வா. ஆக இருந்தது.

10. கீழ்ப்பவானி வலதுகரை கால்வாய் புனல் மின் திட்டம். (2 x 4 மெ.வா.) கடந்த பிப்ரவரி 1998-ல் தொடங்கி வைக்கப்பட்டது. இதையும் சேர்த்து தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்பில் உள்ள மொத்த உற்பத்தித் திறன் 6916 மெ.வா. ஆகும். (இதில் 1956 மெ.வா. திறன் 30 புனல் மின் நிலையங்களிலும், 2970 மெ.வா. 4 அனல் மின் நிலையங்களிலும், 130 மெ.வா. எரிவாயு மின் நிலையங்களிலும், 19 மெ.வா. காற்றாலை மின் நிலையங்களிலும், 1841 மெ.வா. மத்திய மின் நிலையங்களிலிருந்தும் நமது பங்காகவும் கிடைக்கிறது)

**மின்தேவை கணிப்பு**

11. மத்திய மின்சார ஆணையத்தின் 15-வது மின்சார ஆய்வின்படி தமிழ்நாட்டின் மின் சுமை, மின் உபயோகம் ஆகியவை 9, 10 வது ஐந்தாண்டுத் திட்டங்களின்போது கீழ்க்கண்டவாறு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

| காலம் | அதிகபட்ச மின்சுமை தேவை | மின் உபயோகம் |
|---|---|---|
| 9-வது திட்ட முடிவில் | 6943 மெ.வா. | 42481 மி.யூ. |
| 10-வது திட்ட முடிவில் | 8979 மெ.வா. | 54917 மி.யூ. |

எப்பொழுதும் எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்காமல் மின்சுமையையும், மின் உபயோகத்தையும் வழங்குவதே நமது முயற்சியாக இருக்கும். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற, இனி நடைபெற உள்ள மின் திட்டங்களைப் பற்றி இனி நான் கூற விரும்புகிறேன்.



1998 நவம்பர் 24]

**அனல் மற்றும் எரிவாயு திட்டங்கள் (செயலாக்கத்திலுள்ளவை)**

**வடசென்னை அனல் மின் நிலையம், நிலை-1 (630 மெ.வா.)**

12. ஒவ்வொன்றும் 210 மெ.வா. திறனுள்ள மூன்று நிலையங்களும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இவற்றிற்குத் தேவையான நிலக்கரி சென்னை துறைமுகத்திலிருந்து இருப்புப் பாதை மூலம் கொண்டு வரப்படுகிறது. இந்த நிலக்கரி வேகன்களிலிருந்து இறக்கி தொடர் நகர்த்தியில் ஏற்றும் பணி தற்போது ஆட்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதை நேரடியாக வேகன்களிலிருந்து தொடர் நகர்த்திக்கு தானாகவே மாற்றும், நிலக்கரி கையாளும் திட்டம் ஒன்று முடிக்கப்பட்டு இயக்கி வைக்கப்பட உள்ளது.

13. எண்ணூரில் நிலக்கரியை கையாளுவதற்காக ஒரு சிறு துணைத் துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. இங்கேயும் கப்பல்களிலிருந்து நேரிடையாக தொடர் நகர்த்தியில் தானாகவே மாற்றும் நிலக்கரி கையாளும் திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணி சுமார் 270 கோடி ரூபாய் செலவில் இன்னும் மூன்று வருடங்களில் முடிக்கப்படும்.

**கோவில்களப்பால் எரிவாயு சுழலி மின் திட்டம் (90 மெ.வா.)**

14. தமிழ்நாடு அரசு நாகை மாவட்டத்தில் கோவில்களப்பால் என்னும் இடத்தில் இயற்கை எரிவாயுவை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று தொடங்க அனுமதி வழங்கியிருக்கிறது. நாளொன்றுக்கு மத்திய அரசு இத்திட்டத்திற்கு, இதற்கு முன்பு வழங்கிய 1.5 இலட்சம் கனமீட்டர் எரிவாயுவுடன் கூடுதலாக 3 இலட்சம் கனமீட்டர் எரிவாயுவினை வழங்கியிருக்கிறது. எனவே, இந்த மின் நிலையத்தில் 90 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும். அதற்கு 4.5 இலட்சம் கனமீட்டர் இயற்கைவாயு பயன்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மதிப்பு சுமார் 360 கோடி ரூபாயாகும். இத்திட்டம் 2000-01 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ளது.

**பெருங்குளம் எரிவாயு சுழலி மின் திட்டம் (60 மெ.வா.)**

15. தமிழ்நாடு அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருங்குளம் என்ற இடத்தில் இயற்கை எரிவாயுவை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய அனுமதி அளித்துள்ளது. இந்த மின் நிலையம் 60 மெகா வாட் திறன் கொண்டதாக இருக்கும். 2000-01 ஆம் ஆண்டில் இந்த நிலையம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

***நரிமணம் எரிவாயு சுழலி மின் திட்டம் (2 X 5 மெ.வா. + 1 X 5 மெ.வா.)***

*16. நரிமணத்தில் 5 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு இயந்திரங்கள் உள்ளன. மற்றும் ஒரு 5 மெ.வா. திறன் கொண்ட இயந்திரம் நிறுவப்படவுள்ளது. இதற்காக சுமார் ரூ.24.86 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2000மாவது ஆண்டில் தொடங்கப்பட இருக்கின்றது.*

**திட்டமிடப்பட்டுள்ள அனல் மற்றும் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டங்கள்**

***பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் வீணாகும் வெப்பத்தைப் பயன்படுத்தும் மின் உற்பத்திப் பிரிவு-1 மற்றும் 2. (2 X 30 மெ.வா. திறன்).***

*17. தற்போது பேசின் பாலம் மின் உற்பத்தி நிலையத்தில் ஒவ்வொன்றும் 30 மெ.வா. திறன் கொண்ட நான்கு எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து வெளியாகும் எரிவாயுவிலிருந்து வீணாகும் வெப்பத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய ஒவ்வொன்றும் 30 மெ.வா. திறன் கொண்ட இரண்டு புதிய மின் உற்பத்திப் பிரிவுகள் நிறுவப்படவுள்ளன. இந்த இரண்டு கூடுதல் மின் உற்பத்திப் பிரிவுகளும் ரூ.180 கோடி செலவில் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இயக்கி வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

***18. சென்னை, தூத்துக்குடி அனல் மின் திட்டங்கள்***

*நிலக்கரியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் ஒவ்வொன்றும் 500 மெ.வா. திறன் கொண்ட இரண்டு மின் உற்பத்திப் பிரிவுகளை சென்னையிலும், 500 மெ.வா. திறன் கொண்ட ஒரு மின் உற்பத்திப் பிரிவை தூத்துக்குடியிலும் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ள்து. இந்தத் திட்டங்களை நிறுவிட, தகுதி அறிக்கை, விவரமான திட்ட அறிக்கை, சுற்றுப்புறச் சூழலின் தாக்கம் பற்றிய அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் பயனை பத்தாவது திட்ட காலத்தில் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.*





**நிறைவேற்றப்பட்டு வரும் புனல் மின் திட்டங்கள்**

***சாத்தனூர்—நீர்த்தேக்க புனல் மின் திட்டம் (1 X 7.5 மெ.வா.) (திருவண்ணாமலை மாவட்டம்)***

*19. அணையிலிருந்து நீர்ப்பாசனத்திற்காக வெளியாகும் நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் 7.5 மெ.வா. திறன் கொண்ட ஒரு புனல் மின் நிலையம் சாத்தனூர் அணைப் பகுதியில் நிறுவப்பட்டு வருகிறது. 95 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன. இந்த நிதி ஆண்டில் இந்த புனல் மின் நிலையம் இயக்கி வைக்கப்படும்.*

***பைகாரா இறுதி நிலை புனல் மின் திட்டம் (3 X 50 மெ.வா.) (நீலகிரி மாவட்டம்)***

*20. இத்திட்டமானது கிளென்மார்கன் முன் நீர்த்தேக்கம் மற்றும் மரவக்கண்டி நீர்த்தேக்கங்களின் நீர்க் கம்ப வேறுபாட்டை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உச்ச கட்ட மின் தேவை காலத்தில் மின் உற்பத்தி செய்ய பயன்படும் திட்டமாகும்.*

*21. 175 மீட்டர் ஆழத்தில் சுரங்கப் பணிகள் நடைபெற்ற பொழுது அங்கிருந்த பாறையின் இளகிய தன்மையால் சரிவு ஏற்பட்டது. இதனால் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட பாதையில் பணிகள் தொடர முடியால் 1997 ஆம் ஆண்டிலிருந்து தாமதம் ஏற்பட்டுள்ளது. புவியியல் நிபுணர்கள் ஆலோசனையின்படி மாற்று வழியில் புவி ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. இத்திட்டத்தின் பிரிவு-1, 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும், பிரிவு-2, 2001 ஆம் ஆண்டு மே மாதத்திலும், பிரிவு-3, 2001 ஆண்டு நவம்பர் மாதத்திலும் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் (1 X 20 மெ.வா.) (நீலகிரி மாவட்டம்)***

*22. தற்போது போர்த்திமற்று மற்றும் பார்சன் பள்ளத்தாக்கு நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் இரு வெவ்வெறு சுரங்கங்கள் மூலம் எமரால்டு நீர்த்தேக்கத்திற்கு திருப்பி விடப்படுகின்றது. பார்சன் பள்ளத்தாக்கு மற்றும் எமரால்டு நீர்த்தேக்கங்களின் முழு நீர்த்தேக்க மட்டங்களுக்கு இடையிலான 224 மீட்டர் நீர்மட்ட வேறுபாட்டை பயன்படுத்தி எமரால்டு நீர்த்தேக்க முகப்பில் 1 X 30 மெ.வா. நிறுவு திறன் கொண்ட ஒரு தனி*

மின் நிலையத்தினை நிறுவி அதில் மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இம்மின் நிலையம் பார்சன் பள்ளத்தாக்கு மின் நிலையம் (குந்தா மின் நிலையம்-6) என அழைக்கப்படும். அடிப்படை கட்டமைப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 90 விழுக்காடு அளவுக்கு சீரியல் பணிகள் முடிவு பெற்றுள்ளன. இயந்திரங்கள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையம் 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறு மற்றும் மிகச்சிறு புனல் மின் திட்டங்கள்**

23. கீழ்க்கண்ட சிறு மற்றும் மிகச்சிறு புனல் மின் திட்ட பணிகள் ஒப்பந்த முறையில் நிர்ணிக்கப்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | முக்குருத்தி | 2 x 350 | கி.வா. |
| 2. | ஆழியார் | 2 x 1250 | கி.வா. |
| 3. | பெருஞ்சானி | 2 x 650 | கி.வா. |
| 4. | திருமூர்த்தி | 3 x 650 | கி.வா. |

இந்த ஆண்டிலேயே இந்த மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அமராவதி புனல் மின் திட்டம் (2 x 2 மெ.வா.)**

24. நீர்ப்பாசனத்திற்காக அமராவதி நீர்த்தேக்கத்திலிருந்து திறந்து விடப்படும் நீரைக் கொண்டு மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டின் இறுதியில் இத்திட்டம் இயக்கத்திற்கு வரும்.

**திட்டமிடப்பட்டுள்ள புனல் மின் திட்டங்கள்**

**மோயார் இறுதிநிலை புனல் மின் திட்டம் (1 x 50 மெ.வா.) (உச்சகட்ட மின் தேவை காலத்தில் மின் உற்பத்தி செய்யும் நிலையம்)**

25. இந்த மின் நிலையம் அமைவதால் இப்பகுதியில் யானைகள் நடமாட்டத்திற்கு பாதகம் ஏற்படும் என சுற்றுப்புறச் சூழல் துறை அறிவுறுத்தியதால் இத்திட்டம் மின் வாரியத்தால் கைவிடப்பட்டது.





**தமிழ்நாடு மின் வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்:**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | திறன் |
|---|---|---|
| 1. | பவானி கட்டளை தடுப்பணை-1 | 30 மெ.வா. |
| 2. | பவானி கட்டளை தடுப்பணை-2 | 30 மெ.வா. |
| 3. | தாமிரபரணி | 40 மெ.வா. |
| 4. | நெல்லித்துறை | 50 மெ.வா. |
| 5. | கெல்லிமலை பு.மி.தி. | 20 மெ.வா. |
| 6. | சண்முகா நதி பு.மி.தி. | 30 மெ.வா. |
| 7. | பாபநாசம் கூடுதல் மின் திட்ட பிரிவு | 15 மெ.வா. |
| 8. | கோமுகா நதி புனல் மின் திட்டம் | 20 மெ.வா. |

26. கீழ்க்கண்ட சிறு புனல் மின் திட்டங்கள் தனியார் துறையின் மூலம் நிறுவிட வாரியம் திட்டமிட்டுள்ளது:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | திறன் |
|---|---|---|
| 1. | மஞ்சளாறு | 6 மெ.வா. |
| 2. | மருதநதி | 5 மெ.வா. |
| 3. | பவானி தடுப்பணை-1 | 6 மெ.வா. |
| 4. | பவானி தடுப்பணை-2 | 6 மெ.வா. |
| 5. | கொடவானாறு | 10 மெ.வா. |
| 6. | திருமூர்த்தி சம உயரக் கால்வாய் | 1.3 மெ.வா. |

27. சுற்றுப்புறச் சூழல் துறையாலும், வனத் துறையாலும் அனுமதிக்கப்படாத புனல் திட்டங்கள் கைவிடப்படும்.

**காற்றிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்தல்**

28. மின் சக்தி உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் பெருமளவு காற்று ஆதாரம் உள்ளது. மின் சக்தி உற்பத்தி செய்வதற்காக கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஆரல்வாய்மொழிக் கால்வாய், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் செங்கோட்டை

கணவாய், திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பாலக்காட்டுக் கணவாய் ஆகிய இடங்களில் மின் உற்பத்தி செய்வதற்குப் பெருமளவு காற்று ஆதாரம் உள்ளது. தமிழ்நாட்டில் காற்றை ஆதாரமாகக் கொண்டு சுமார் 2000 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்ய இயலுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

29. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டில்தான் காற்று வளத்தைக் கொண்டு மின் உற்பத்தி செய்வது மிக அதிகமாக உள்ளது என்றும் காற்று வளத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக தமிழ் நாடு தொடர்ந்து மத்திய அரசிடமிருந்து பாராட்டுப் பத்திரத்தைப் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

30. காற்று ஆதாரத்தின் மூலம் மின் உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுகின்றனர். 30-9-98 நிலவரப்படி தனியார் காற்றாலைகளின் மொத்த எண்ணிக்கை 2538 ஆகும். இதன் மொத்த உற்பத்தித் திறன் அளவு 691.92 மெ.வா. ஆகும். தனியார் தொழில் முனைவோருக்கு உதவிட வாரியத்தில் ஆலோசனைப் பிரிவு ஒன்றும் செயல்படுகிறது. தமிழ்நாடு மின் வாரியம் இன்றைய நிலவரப்படி 19.355 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் காற்றாலைகளை நிறுவியுள்ளது.

31. தனியார் தொழிற்சாலைகள் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்புக்கு வழங்கிடவும் அவ்வாறு வழங்கிய மின்சாரத்தைத் தொடர்ச்சியாக மூன்று மின் கட்டண விதிப்பு மாதங்களில் தமிழ் நாட்டிலுள்ள இவர்களின் சொந்த அல்லது சார்ந்த தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் மின் சக்திக்கு சரி செய்து கொள்ள முடியும். தமிழ்நாடு மின்வாரிய மின் கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கு கட்டணமாக 2% வசூலிக்கப்படுகிறது. மேலும் மின் வாரியம் காற்றாலையினால் உற்பத்தியாகும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள யூனிட் ஒன்றுக்கு ரூ.2.25 வீதம் 1-12-1995 முதல் கணக்கிட்டு வழங்கி வருகிறது. இந்தக் கட்டணம் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5% வீதம் உயர்த்தி வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தங்கள் தேவைக்குப் போக எஞ்சியுள்ள உபரி மின்சாரத்தை வாரியம் பெற்று சேமித்துக் கொள்ள கட்டணமாக 2% வசூலிக்கப்படுகிறது.





**இணைமின் உற்பத்தி**

32. சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்வதற்கும் அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. தற்பொழுது 10 சர்க்கரை ஆலைகளில் 141.20 மெ.வா. நிறுவு திறனில் இவ்விணை மின் உற்பத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் 1999 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் மூன்று சர்க்கரை ஆலைகளின் மூலமாக 19 மெ.வா. கூடுதல் மின் உற்பத்தித் திறன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

33. இணைமின் உற்பத்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதில் தனியார் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு இணைமின் உற்பத்தி செய்யும் சர்க்கரை ஆலைகள் மின் கட்டமைப்புக்கு அனுப்பும் உபரி மின் சத்தியின் கொள்முதல் விலை 1-4-95லிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.2.25 ஆகவும் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் யுனிட் ஒன்றுக்கு ரூ.2.25 என்ற அடிப்படை விலைக்கு அதிகமாக 5% உயர்வுடனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இணை மின் உற்பத்தி செய்யும் ஆலைகளிலிருந்து மின் கட்டமைப்பில் மின்சாரத்தை வழங்கிடவும் 25 கி.மீ. தொலைவிற்குள் உள்ள சார்பு நிறுவனங்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்லவும் கட்டணமாக 2% நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள எந்த இடத்திற்கும் இவ்வகை மின்சாரத்தை எடுத்துச் சென்று பயன்படுத்திக் கொள்ள 10% கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தன்பயன் மின் ஆக்கம்**

34. தமிழ்நாடு அரசு எரிசக்தித் துறை ஆணை எண் 48, 22-4-1998 இல் தன்பயன் மின் ஆக்கம் பற்றிய கொள்கைகளை முறைப்படுத்தியுள்ளது. மின்சாரத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் தனி நபராகவோ பல நபர்களைக் கொண்ட குழுவாகவோ சேர்ந்து தன்பயன் மின் ஆக்கத் திட்டங்களை நிறுவிட முடியும். இவ்வகை மின்சாரத்தை மின் உற்பத்தி செய்யும் நிறுவனமோ அதனைச் சார்ந்த நிறுவனங்களோ உபயோகித்துக் கொள்ள முடியும். உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் பெற்றுக்கொள்ளும். இந்த ஆணை மூன்றாவது நபருக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதை அனுமதிக்கவில்லை. 1998 ஆம் ஆண்டிலிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.2.25 ஆகவும் 2007-2008 ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் யூனிட் ஒன்று ரூ.2.25 என்ற அடிப்படை விலைக்கு அதிகமாக 5% உயர்வுடனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மின் உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள தங்களுடைய அல்லது தங்களைச் சார்ந்த நிறுவனங்களுக்கு மின்வாரிய கட்டமைப்பைப் பயன்படுத்தி மின்சாரத்தைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இதற்காக யூனிட் அடிப்படையில் 15% கட்டணமாக மின்வாரியம் பெற்றுக் கொள்கிறது. மேலும், இவ்வகை மின்சாரத்தை மின்வாரியத்திற்கு வழங்கி, ஓராண்டுக்குள் தேவைப்படும் பொழுது அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வசதி மின்வெட்டு அமலில் இருக்கும் பொழுது பெரிதும் பயன்படுகிறது. இதற்காக யூனிட் அடிப்படையில் கட்டணம் 2% விதிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் உயர் மின் அழுத்த பயனீட்டாளர்கள் 150 மெ.வா. நிறுவு திறனுக்கு தன்பயன் மின் ஆக்கத் திட்டங்களை இயக்கிவைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**குப்பைக் கூளங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையம்**

35. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பழைய சீவரம் கிராமத்தில் தனியார் துறையில் குப்பைக் கூளங்களைப் பயன்படுத்தி 12 மெ.வா. மின் சக்தி உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவ திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக 6 மெ.வா. திறனுள்ள நிலையம் 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் இரண்டாவது கட்டமாக 6 மெ.வா. திறனுள்ள மின் நிலையம் 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இது போன்ற குப்பைக் கூளங்களை உபயோகப்படுத்தும் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

**நகராட்சி கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி**

36. சென்னையைச் சேர்ந்த பெருங்குடியிலும் கொடுங்கையூரிலும் நகராட்சியிலிருந்து கிடைக்கும் திடக் கழிவுகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 15 தனியார்களிடமிருந்து பெறப்பட்ட வரைதிட்டங்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் ஆய்வில் உள்ளது. இந்த திட்டம் பற்றிய முடிவு 1999 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சூரிய சக்தியிலிருந்து மின் சக்தி தயாரிக்கும் திட்டம்**

37. தமிழ்நாட்டில் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. 15 கி.வா. திறனுள்ள சூரிய வெப்ப



மின்கலப் பெட்டிகள் கயத்தாறில் தமிழ்நாடு மின் சக்தி வளர்ச்சி நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளன. மேலும் மூன்று சூரிய வெப்ப மின்கலப் பெட்டிகள் தனியார் துறையினால் நிறுவப்பட்டு இயக்கத்திலுள்ளன. இவற்றில் ஒன்று 100 கி.வா. திறனில் கேத்தனூரிலும், மற்ற இரண்டு தலா 25 கி.வா. திறனில் ஒன்று செங்காளிபாளையத்திலும் மற்றொன்று சித்த நாயக்கன்பாளையத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம்மூன்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ளன.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நீலாம்பூர் கிராமத்தில் 50 கி.வா. திறனுள்ள ஒரு சூரிய வெப்ப மின் கலப் பெட்டியும் சென்னை/ கேளம்பாக்கத்தில் 50 கி.வா. திறனில் ஒரு சூரிய வெப்ப மின் கலப் பெட்டியும் 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தனியாரால் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணை மின் உற்பத்திக்கு வழங்கப்படுவது போலவே 1-1-1995 லிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.2.25 ஆகவும் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் யூனிட் ஒன்றுக்கு ரூ.2.25 என்ற அடிப்படை விலைக்கு அதிகமாக 5% உயர்வுடனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டணம் மரபு சாரா எரிசக்தி முறையின் மூலமாக மின் உற்பத்தி செய்யும் அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் பொருந்தும்.

**தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கேற்பு**

38. முதல் கட்டமாக 49 மெ.வா. நிறுவு திறனில் சென்னை பேசின் பாலத்தில் தனியார் நிறுவனமான ஜி.எம்.ஆர்.வாசவி மின் உற்பத்தி கழகம் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை நிறுவியுள்ளது என்றும், இது தற்போது சோதனை ஓட்டத்திலுள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொன்றும் 49 மெ.வா. திறனுள்ள நான்கு பிரிவுகளும் இந்த ஆண்டிலேயே இயக்கப் பெற்று பயனளிக்கத் தொடங்கும்.

39. மத்திய அரசு அறிவித்துள்ள தாராளமயாக்கப்பட்ட கொள்கையின்படி மின் சக்தித் துறையில் தனியார் பங்கேற்பை அனுமதித்து ஒப்பந்த நடைமுறை (MOU) மூலம் தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காக மொத்தம் 7586 மெ.வா. மின் உற்பத்திச் செய்யக்கூடிய 14 மின் உற்பத்தித் திட்டங்களைத் தனியார் தொழில் முனைவோரிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது.

இவற்றில் 10வது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது:

| எண் | இடம் | நிறுவனத்தின் பெயர் | திறன் (மெ.வா.) | எரி பொருள் | இயக்கி வைக்க எதிர் பார்க்கப்படும் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | பேசின் பாலம் டீசல் மின் உற்பத்தித் திட்டம் | ஜி.எம்.ஆர்.வாசவி மின் சக்திக் கழகம் | 196 | டீசல் | 1998-99 |
| 2. | சமயநல்லூர் டீசல் மின் உற்பத்தித் திட்டம் | பாலாஜி மின் சக்திக் கழகம் | 106 | டீசல் | 2000-01 |
| 3. | சாமல்பட்டி டீசல் மின் உற்பத்தித் திட்டம் | சாமல்பட்டி மின் சக்திக் கழகம் | 106 | டீசல் | 2000-01 |
| 4. | பெரியார் வைகை வைரவனாறு தடுப்பணை-1 | சிலிகால் மெட்டர லர்ஜிக் லிட். கோயம்புத்தூர் | 6 | நீர் | 2001-02 |
| 5. | பேச்சிப்பாறை நீர்த்தேக்க புனல் மின் உற்பத்தித் திட்டம் (தன் பயன் மின் ஆக்கம்) | நார்ட்டன் எலெக்ட்ரிகல் பிரைவேட் லிட். | 1 | நீர் | 2001-02 |
| 6. | பிள்ளைபெருமாள் நல்லூர் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | பி.பி.என். மின் உற்பத்தி | 330 | எரிவாயு | 2001-02 |
| 7. | நெய்வேலி ஜீரோ யூனிட் | எஸ்.டி.சி.எம். எஸ்.எலெக்ட்ரிக் நிறுவனம் | 250 | பழுப்பு நிலக்கரி | 2001-02 |



| எண் | இடம் | நிறுவனத்தின் பெயர் | திறன் (மெ.வா.) | எரி பொருள் | இயக்கி வைக்க எதிர் பார்க்கப்படும் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 8. | வடசென்னை அனல் மின் திட்ட விரிவாக்கம்-2 | வீடியோகான் மின் சக்தி | 1050 | நிலக்கரி | 2002-03 |
| 9. | வடசென்னை அனல் மின் திட்ட விரிவாக்கம்-3 | ட்ரை-சக்தி மின் பி. லிட். | 525 | நிலக்கரி | 2002-03 |
| 10. | தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம்-4 | எஸ்.இ.பி.சி. பிரைவேட் லிட். | 525 | நிலக்கரி | 2003-04 |
| 11. | கடலூர் அனல் மின் திட்ட நிலை-2 | கடலூர் மின் சக்தி நிறுவனம் | 660 | நிலக்கரி | 2005-06 |
| 12. | ஸ்ரீமுஷ்ணம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் | டிகாப்கோ | 250 | பழுப்பு நிலக்கரி | 2006-07 |

**ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி உற்பத்தி மின் திட்டம் (1500 மெ.வா.)**

ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 500 மெ.வா. மின் உற்பத்தித் திட்டத்தை அமல்படுத்த தனியார் துறையைத் தேர்வு செய்யும் பொறுப்பை தமிழக அரசு, தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்தது. இக்கழகம் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி 1500 மெ.வா. மின் உற்பத்தி செய்ய

முனைவோரைத் தேர்வு செய்துள்ளது. இம்மின் உற்பத்தி நிலையம், 2005-06ல் முதற் கட்டமாக 500 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னை சுத்திகரிப்பு நிறுவனம் - 350 மெ.வா.**

சென்னை சுத்திகரிப்பு நிறுவனம், சுத்திகரிப்பு எச்சங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் 350 மெ.வா. திறனில் ஒரு மின் உற்பத்தி நிலையம் 2003-04 ஆம் ஆண்டில் அமைக்கும் செயற்குறிப்பைத் தீட்டியுள்ளது.

**எண்ணூரில் திரவ இயற்கை எரிவாயு மின் திட்டம் - 2000 மெ.வா.**

திரவ இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு 2000 மெ.வா. திறனில் எண்ணூரில் ஒரு மின் உற்பத்தித் திட்டம் நிறுவும் செயற்குறிப்பு உள்ளது. இம்மின் உற்பத்தி நிலையம் 2005-06 ஆம் ஆண்டில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் போட்டி அடிப்படை மூலமாக இத்திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்தைத் தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**குறுகிய கால நடவடிக்கைகள்**

40. கிடைக்கின்ற மின் சக்தியைவிட மின் தேவை எப்போதுமே அதிகரித்து வந்துள்ளதால் தமிழ்நாட்டில் மின் தேவை ஆண்டொன்றுக்கு 400 மெ.வா. என்கிற அளவிற்கு வளர்ந்து வருகிறது. பெரும்பாலான மின் திட்டங்கள் 2001 ஆம் ஆண்டிலிருந்துதான் செயல்படத் தொடங்கும். உடனடி மின் தேவையை எதிர்கொள்ள திரவ இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட குறுகிய காலத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

41. திரவ இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 40-180 மெ.வா. திறனில் குறுகிய கால மின் திட்டங்களை தமிழ்நாட்டில் தொழிற்பேட்டை வளாகங்கள் உள்ள 20 வெவ்வேறு இடங்களில் நிறுவிட தேர்வு செய்யும் பொறுப்பை அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், அனைத்து 20 இடங்களிலும் மொத்தம் 2772 மெ.வா. திறனுக்கு நிறுவ ஒப்பந்த ஏற்பு கடிதம்





அளித்துள்ளது. எனினும், கீழே கொடுத்துள்ள விவரங்களின்படி 4 திட்டங்களுக்கு மட்டுமே திரவ எரிபொருளை எரிசக்தி அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது:

| எண் | இடம் | நிறுவனத்தின் பெயர் | திறன் (மெ.வா.) | எரி பொருள் | இயக்கி வைக்க எதிர் பார்க்கப்படும் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி 2 X 103 | சுஜானா ஸ்டீல்ஸ் | 206 | நாப்தா | 2000-01 |
| 2. | மனவாசி (எண்ணூருக்கு மாற்றப்பட்டுள்ளது) | அபேன் லாயிட் சைல்ஸ் ஆப்ஷோர் லிமிடெட் | 103 | நாப்தா | 2000-01 |
| 3. | சமயபுரம் (பாகனூருக்கு மாற்றப்பட்டுள்ளது) | பிரிஸ்டின் இன்ப்ராஸ்டரக்சர் டெவலப்மெண்ட் கம்பெனி | 103 | நாப்தா | 2000-01 |
| 4. | ஓதூர் | டி.எல்.எப்.பவர் கம்பெனி | 53 | டீசல் | 2000-01 |
| | | மொத்தம் | 465 | | |

மேலும் கும்மிடிப்பூண்டியில் 162 மெ.வா. திறன் கொண்ட திட்டம் மற்றும் செங்கல்பட்டில் 106 மெ.வா. திறன் கொண்ட திட்டம் ஆகிய இரண்டு குறுகிய காலத் திட்டங்களுக்கு இந்திய அரசிடமிருந்து திரவ எரிபொருள் ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் மின் திட்டங்கள் மூலம் 9 வது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 1728 மெ.வா. திறனும், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4520 மெ.வா. திறனும் கூடுதலாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மத்திய அரசு மின் உற்பத்தித் திட்டங்கள்

42. பெரும் முயற்சி எடுத்ததன் பலனாகவும் மத்திய அரசின் பரிந்துரையின் பேரிலும் தேசிய அனல் மின் உற்பத்திக் கழகம் காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூரில் 1000 மெ.வா. நிறுவு திறனில் ஓர் அனல் மின் உற்பத்தித் திட்டத்தை அமல்படுத்த இணங்கியுள்ளது. இத்திட்டத்தை அமல்படுத்த செய்யூர் வட்டத்தில் சுமார் 2800 ஏக்கர் பரப்பளவுக்கு உப்பு புறம்போக்கு நிலம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ் நாடு அரசு பாலாறு ஆற்றுப் படுகையிலிருந்து தினசரி 2 மி.காலன் தண்ணீர் அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2006-07 ஆம் ஆண்டில் நிறைவடையும்.

### கடலூர் மின் திட்டம் இரண்டாம் நிலை

43. மாதிரித் திட்டமாக சில இடங்களில் மாபெரும் மின் திட்டங்களை நிறுவும் யோசனை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அம்மாதிரித் திட்டத்திற்கான ஓர் இடம் கடலூர் மாவட்டத்தில் உள்ளது. தமிழக அரசானது 1500 மெ.வா. திறன் கொண்ட அனல் மின் திட்டத்திற்கு இடத்தைத் தேர்வு செய்துள்ளது. இடத்தைத் தேர்வு செய்யும் மத்திய அரசின் குழு ஒன்று அம்மாபெரும் திட்டத்திற்கான இடத்தையும் பார்வையிட்டுள்ளது.

### கூடங்குளம் அணுமின் திட்டம்

44. கூடங்குளத்தில் 2 x 1000 மெ.வா. திறன் கொண்ட அணுமின் திட்டத்தை நிறுவுவதற்கான விரிவான திட்ட நகல் ஒன்றைத் தயாரிப்பதற்கான இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை அணுமின் கழகமானது ரஷ்யக் கூட்டமைப்புடன் கையெழுத்திட்டுள்ளது. மின் நிலையம் மற்றும் குடியிருப்புக்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

### இராமகுண்டம் மிகை அனல் மின் திட்டம் கூடுதல் யூனிட்

தேசிய அனல் மின் கழகம் 2001-02 ஆம் வருடத்தில் 500 மெ.வா. திறன் கொண்ட கூடுதல் யூனிட் ஒன்றினை ஏற்படுத்த முடிவு செய்து உள்ளது. இதிலிருந்து நமது மாநிலத்தின் பங்காக 125 மெ.வா. கிடைக்கும்.

### கைகா அணு மின் திட்டம்

அணுமின் கழகமானது கர்நாடக மாநிலத்தில் உள்ள கைகா என்னுமிடத்தில் 2 x 220 மெ.வா. திறன் கொண்ட அணுமின் நிலையம்





ஒன்றினை நிறுவிக் கொண்டுள்ளது. அதன் முதல் பிரிவு 1999 ஆம் ஆண்டு அக்டோபரில் இயக்கிவைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### டால்ச்சர் மின் திட்டம் இரண்டாம் நிலை

தேசிய அனல் மின் கழகமானது 2000 மெ.வா. திறன் கொண்ட இரண்டாவது நிலையம் ஒன்றினை டால்ச்சரில் நிறுவ முடிவு செய்துள்ளது. இந்நிலையத்தினை 2003-04 ஆம் வருடத்தில் இயக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பங்காக 540 மெ.வா. இந்த நிலையத்திலிருந்து கிடைக்கும்.

### நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதும் அதற்கான செலவும்

45. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு, தூத்துக்குடி, எண்ணூர், வடசென்னை மற்றும் மேட்டூர் ஆகிய இடங்களிலுள்ள அதன் நான்கு அனல் மின் நிலையங்களையும் இயக்கத்தில் வைக்க 1998-99 ஆம் ஆண்டிற்கு 15 மில்லியன் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இந்த நான்கு நிலையங்களுக்கும் தேவைப்படுகிற நிலக்கரியை மேற்கு வங்காளம், பீஹார் மற்றும் ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலுள்ள ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட், பாரத் கோக்கிங் கோல் ஃபீல்டு மற்றும் மகாநதி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வரவேண்டியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கு 138.04 இலட்சம் டன் நிலக்கரி, நிலக்கரி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டது.

46. தமிழ்நாடு மின் வாரிய அனல் மின் நிலையங்களுக்கு உள்நாட்டு நிலக்கரி கிடைப்பதில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுசெய்ய 0.5 மில்லியன் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின் வாரியம் இறக்குமதி செய்துகொள்ள தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விலை மற்றும் நிலக்கரி கையிருப்பு ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு மறுபரிசீலனை செய்தபின் இறக்குமதி செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக செலவினங்களின் அடிப்படையில் மறு ஆய்வு செய்து மேலும் இறக்குமதி செய்வது பற்றி முடிவு எடுக்கப்படும்.

47. மேலும், கோல் இந்தியா நிறுவனத்தின் நிலக்கரிச் சுரங்களிலிருந்து பெறப்படும் நிலக்கரியின் தரம் மிக குறைவாக உள்ளது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்துக்கென வடிவமைக்கப்பட்ட நிலக்கரித் தேவை 14 முதல் 23 சதவீதம் வரையிலான சாம்பல் கொண்ட கிலோவுக்கு 4940 முதல் 6200 வரையிலான கிலோ கலோரியாகும். மேட்டூர் அனல் மின் நிலையத்தின் தேவை, 29 முதல் 38 சதவீதம் வரையிலான சாம்பல் கொண்ட கிலோவுக்கு 3985-4260 கிலோ கலோரியாகும். எண்ணூர் அனல் மின் நிலையத்தின் தேவை 30 முதல் 32 சதவீதம் வரை சாம்பல் கொண்ட கிலோவுக்கு 4300-4800 கிலோ கலோரியாகும். வட சென்னை அனல் மின் நிலையத்தின் தேவை 40 சதவீதம் சாம்பல் உள்ள, கிலோவிற்கு 3855 கிலோ கலோரியாகும். தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்கப்பட்ட பெரும்பாலான நிலக்கரி 40 முதல் 45 சதவீதம் வரை சாம்பல் கொண்ட கிலோவுக்கு, 3000 முதல் 3500 வரை கிலோ கலோரி தரும் தரமுடையதாகவே இருந்துள்ளது. அதிக சாம்பல் உட்பொருளுடன் கூடிய தரம்குறைந்த நிலக்கரியை வழங்கியதால் அதிக அளவு தூய்மைக்கேடு ஏற்படுவதோடு மட்டுமல்லாது, இதனால் சார்புச் சாதனங்களில் அதாவது கொதி கலன் குழாய்கள், அரைவை ஆலைகள், உள்முகக் காற்றாடிகள், குழாய்கள் போன்ற சாதனங்களுக்குத் தேவையில்லாமல் சேதம் ஏற்படுகிறது.

இறுதியில் இது இச்சாதனங்களின் ஆயுளைக் கணிசமான அளவிற்குக் குறைக்கவே வழிகோலும். நிலக்கரி தரம் குறைந்து இருந்ததால்தான் மின் நிலையங்களின் சார்புச் சாதனங்களுக்கு அதிக அளவு மின்சாரம் பயன்படுத்தப்பட்டது. மேலும் பெருமளவில் சேருகின்ற சாம்பலை அப்புறப்படுத்துவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது.

48. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கு, இரயில் மற்றும் கடல் வழியே, நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி எடுத்து வரப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனல் மின் நிலையங்களுக்கு நீண்ட தொலைவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து உள்நாட்டு நிலக்கரி எடுத்துச் செல்லப்படுவதால் அதை எடுத்துச் செல்வதற்கான செலவு நிலக்கரியின் அடிப்படை விலையைவிட அதிகமாக இருக்கிறது. 1997-98 இல் வரப்பெற்ற நிலக்கரியின் விலை ரூ.885 கோடியாகும். ஆனால் போக்குவரத்து மற்றும் கையாளுதல் செலவு வகையில் வாரியம் ரூ.1325 கோடி செலவிட்டது.



49. மின் அழுத்த ஒப்பிட்டு அளவை மேம்படுத்தி, தரமான மின் வழங்கலை உறுதிப்படுத்தும் நோக்கத்தை எய்தும் பொருட்டு இந்த அரசு 60 புதிய துணை மின் நிலையங்களையும் 540 சர்க்கியூட் கிலோ மீட்டர் தொலைவிற்கு மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பித் தொடர் இணைப்பு வசதியையும் ஏற்படுத்தி உள்ளது. மேலும் 84 எம்.வி.ஏ.ஆர். திறன் கொண்ட இணை மின் தேக்கிகள் 1997-98-ல் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. மேற்சொன்னவை தவிர, கூடுதல் மின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 87 துணை மின் நிலையங்களிலுள்ள மின் அழுத்த மாற்றிகளின் திறனில் கூடுதலாக 1050.35 எம்.வி.ஏ.ஆர். திறன் உயர்த்தப்பட்டுள்ளது.

50. இதுபோல, இவ்வரசானது 1998-99 ஆம் ஆண்டில் 60 துணை மின் நிலையங்கள் 900 கி.மீ. அதிக உயரழுத்த மின் பாதைகள் மற்றும் 1344 எம்.வி.ஏ.ஆர். திறனுள்ள இணை மின் தேக்கிகளை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

51. சென்னைப் பெருநகரப் பகுதியில் மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்வுக் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் சிறப்புத் திட்டம் ஒன்று, அதாவது "சென்னை மின் அனுப்புகைப் பகிர்வுக் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் உரிய தனித் திட்டம்" ரூ.225 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ரூ.150 கோடி அளவிற்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி அளித்து வருகிறது. 230 கி.வோ. மின் அழுத்தம் தாங்கும் எக்ஸ்.எல்.பி.இ. வகையைச் சார்ந்த புதை வடங்களும், 230 கி.வோ. திறன் கொண்ட வாயுக் காப்பு துணை மின் நிலையம் ஒன்றை மயிலாப்பூரில் நிறுவுதல், மேலாண்மைக் கட்டுப்பாடு மற்றும் தகவல் சேகரிப்பு வசதியுடன் கூடிய நவீனப் பகிர்மானக் கட்டுப்பாட்டு மையம் ஒன்றை நிறுவுதல் ஆகியவை இத்திட்டத்தின் சிறப்புகளில் சிலவாகும். மயிலாப்பூரில் நிறுவப்பட்டு வரும் வாயுக் காப்புத் துணை மின் நிலையம், இவ்வகையில் தமிழ்நாட்டில் அனுமதிக்கப் பெறும் முதல் துணை மின் நிலையமாகும். வாயுக் காப்பு துணை மின் நிலையம் 1-10-1998-ல் இயக்கி வைக்கப்பட்டது. கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தகவல் விவரத் தொகுப்பு (ஸ்கேடா) சாதனத்தை வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணி 2000-01 இல் முடிவடையும்.

### மின் பகிர்மானம்

52. 1997-98 ஆம் ஆண்டிற்கான பல்வேறு வகை புதிய மின் இணைப்புகளுக்குக் குறிக்கப்பட்ட இலக்கு அநேகமாக அடையப்பட்டது என்பதை இம்மான்றத்திற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். 1997-98 மற்றும் 1998-99 ஆண்டுகளுக்கான 30-09-1998 வரை அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு உள்ளன:

| 1997-98 | இலக்கு | சாதனை |
|---|---|---|
| விவசாய பம்ப் செட்டுகள் | 40,000 | 40,000 |
| குடிசைகள் | 40,000 | 40,000 |
| தொழிற்சாலை (உயர்அழுத்த/தாழ்வழுத்த) | 22,950 | 22,950 |
| ஊரக மின்மயாமக்குதல் | | 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி முக்கிய கிராமங்கள் அனைத்தும் 31-3-1992க்கும் முன்னேயே மின்சார மயமாக்கப்பட்டுவிட்டன |

1998-99 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம்

| | இலக்கு | 30-9-1998 வரை அடையப்பட்டது |
|---|---|---|
| விவசாய பம்ப் செட்டுகள் | 40,000 | 14,369 |
| குடிசைகள் | 40,000 | 20,292 |
| தொழிற்சாலைகள் (உயர்வழுத்த/தாழ்வழுத்த) | 27,550 | 9,848 |

நிலுவையிலுள்ள வீட்டு மின் இணைப் விண்ணப்பங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எந்த ஒரு விண்ணப்பமும் ஒரு மாதத்திற்கு மேல் தாமதமடையாமல் பார்த்துக் கொள்ள இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.



53. விவசாயத்திற்கான மின் இணைப்பிற்கு இயல்பான திட்டத்திற்கும், சுய நிதி மின் இணைப்புத் திட்டத்திற்குமென தனித்தனியான முன்னுரிமை வழங்கும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது. 6-11-1995 முதல் திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.50,000க்கும் குறைவாகச் செலவாகும் விரிவாக்கத்திற்கு ரூ.10,000மும், ரூ.50,000 மேல் செலவாகும் விரிவாக்கத்திற்கு ஆகும் செலவை முழுவதுமாகவும் ஒவ்வொரு விவசாய விண்ணப்பதாரரும் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட திட்டத்தின்கீழ் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விவரம் வருமாறு: (6-11-1995 லிருந்து)

| | காலம் | இணைக்கப்பட்ட நீரேற்றிகள் |
|---|---|---|
| ரூ.10,000 வரை | 1995-96 | 9862 |
| | 1996-97 | 9113 |
| | 1997-98 | 7318 |
| | 1998-99 (9/98) | 2931 |
| ரூ.50,000க்கு மேல் / உள்ளபடியான செலவு | 1997-98 | 155 |
| | 1998-99 (9/98) | 116 |

### தெருவிளக்கு மின்மயம்

54. 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியம் 78,178 தெரு விளக்குகளை இயக்கி வைத்தது. 1998-99 ஆம் ஆண்டில் 74,000 தெரு விளக்குகளை இயக்க மின்வாரியம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்

55. ஒரு குடிசைக்கு ஒரு மின் விளக்கு என்ற திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் 30,000 குடிசைகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன.

1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் கொல்லிமலை மற்றும் கல்வராயன் குன்றுப் பகுதிகளிலுள்ள மலைவாழ் மக்களின் 28 குக்கிராமங்கள் மின்சார மயமாக்கப்பட்டன.

### ஜீவன்தாரா கிணற்றுத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு

56. ஆண்டு இலக்கு 40,000 நீரேற்று இயந்திர மின் இணைப்புகள் என்ற இலக்குக்கு உட்பட்டு, முன்னுரிமை அடிப்படையில், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களில் ஊரக வளர்ச்சித் துறையினரால் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தோண்டப்படும் கிணறுகளில் பொருத்தப்படும் நீரேற்றும் இயந்திரங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு ஆணையின்படி ஆண்டொன்றுக்கு 2,000 மின் இணைப்புகள் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் 1995-96 ஆம் ஆண்டு 2,442 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1996-97 ஆம் ஆண்டில் 2,603 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டு 2,000 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன.

### மின் இழப்பு

57. தேசிய சராசரி மின் இழப்பு 21 விழுக்காடாகும். இந்த அரசும், தமிழக மின்சார வாரியமும் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக இம்மாநிலத்தில் மின் இழப்பானது 1997-98 ஆம் ஆண்டில் 17 விழுக்காடாக இருந்தது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள்ளாக மின் இழப்பை 16 விழுக்காடாக குறைக்க இவ்வாரியம் திட்டம் தீட்டியுள்ளது. இக்குறிக்கோளை அடைய மின் பகிர்வு மின்மாற்றியின் அருகில் குறைவழுத்த மின் தேக்கிகளைப் பொருத்துவது பரிசீலனையில் உள்ளது. 66 கே.வி. மின் பாதைகளை அகற்றி விடுவதன் மூலம் மின் செலுத்துகையின் மின் அழுத்தம் சமநிலைப்படுத்தப்படும். உயர்வழுத்தத்திற்கும் தாழ்வழுத்தத்திற்கும் உள்ள விகிதங்களை அதிகரிக்கக்கூட முயற்சிகள் செய்யப்படும்.

### மின் தணிக்கை

58. அரசு ஆணை நிலை எண் 72, தேதி 10-5-1996ன் மூலம் தமிழக அரசானது வியாபார நிறுவனங்களும் உயர்வழுத்தத் தொழிற்சாலைகளும் மின் தணிக்கைக்குட்படுவதைக் கட்டாயக் கடமையாக்கியுள்ளது. முதற்கட்டமாக 2,000 கே.வி.ஏ. மின் திறனுக்கு அதிகமாயுள்ள உயர்வழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் இதை அமலாக்கியுள்ளது. தமிழக மின்வாரியம் அரசு ஆணையின்படி 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து இதனை மேற்கொண்டுள்ளது. மின்





தணிக்கை முறை மின்சாரச் சேமிப்புக்கு சாதகமாகப் பலன் அளிக்கும். மின் தணிக்கை முறை உற்பத்தி அதிகரிப்பையும் தரத்தை உறுதி செய்வதையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

59. தமிழக அரசு மின் தணிக்கை முறையை அமல்படுத்த வல்லுநர்களின் கண்காணிப்புக் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இக்குழு, இதுவரை 76 மின் தணிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறாக தொழிற்சாலைகளுக்கு மின் தணிக்கை செய்தல் ஆரம்பம் ஆகியுள்ளது.

### 1997-98 ஆம் ஆண்டிற்கான திட்டச் சாதனைகள்

60. 1997-98 ஆம் ஆண்டிறக்ான ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.870.39 கோடியாகும். இது தவிர திட்டம் சாராத செலவுகளுக்காக ரூ.82.79 கோடியை மத்திய அரசின் மின் சக்தி நிதிக் கழகத்திடமிருந்தும் ரூ.60 கோடியை ஊரக மின் சக்திக் கழகத்திடமிருந்தும் பெற எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் மின் சக்தி நிதிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட நிதியுதவியையும் சேர்த்து ரூ.859.04 கோடி உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. இவை தவிர ஊரக மின் சக்திக் கழகத்தின் உதவியுடன் செலவினங்களில் முதலீட்டுச் செலவினமாக வராத பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்க ரூ.61 கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது. தெரு விளக்குகளைத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தமிழக அரசு ரூ.18.55 கோடி செலவு செய்துள்ளது. திட்டப் பணிகளுக்காகவும் திட்டத்தின்கீழ் வராத பணிகளுக்காகவும் மின்சார வாரியம் ரூ.938.59 கோடி செலவு செய்துள்ளது.

### 1998-99 ஆம் ஆண்டுத் திட்டம்

61. மின் உற்பத்திக்காக ரூ.371.26 கோடியும், மின்சாரச் செலுத்துகை மற்றும் பகிர்மானம் செய்தல் ஆகியவற்றுக்காக ரூ.431.91 கோடியும், ஊரக மின் வசதிக்காக ரூ.24.84 கோடியும், நில அளவு ஆய்வுகள் போன்ற பணிகளுக்காக ரூ.14.65 கோடியும், ஆக மொத்தம் 883.04 கோடி ரூபாய் 1998-99 ஆம் ஆண்டுக்கான திட்ட நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுய நிதி மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் விவசாய மின் இணைப்பு விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூ.10 கோடியும், தெரு விளக்குகள் அமைப்பதற்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடாக ரூ.18.20 கோடியும், குடிசை மின் இணைப்புகளுக்காக

ரூ.4.42 கோடியும், மின் கட்டமைப்பு மேம்பாடு, சிறப்பு விவசாய மின் இணைப்புத் திட்டம், ஊரக மின் வசதித் திட்டம் ஆகிய பணிகளுக்காக ரூ.7.76 கோடியும் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர திட்டத்தின்கீழ் வராத செலவுக்காக ஊரக மின் வசதிக் கழகம்/ஊரக மின் வசதிக் கழக வங்கி ஆகியவற்றின் மூலம் ரூ.60 கோடி நிதி வசதி பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மின்சார உற்பத்தி, மின்சாரம் செலுத்துகை, மின்சாரப் பகிர்மானம் ஆகியவற்றுக்காக மின் நிதி வசதிக் கழகத்தின் மூலம் ரூ.154.94 கோடி கடன் வசதி பெறவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்துப் பணிகளுக்காகவும் மின்சார வாரியம் 1998-99 ஆம் ஆண்டிற்காக ரூ.1097.98 கோடி திட்ட ஒதுக்கீடு செய்துள்ளது.

30-9-98 ஆம் நாள் வரை இந்த ஆண்டில் ரூ.379.44 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இது ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 34.56% ஆகும்.

வருவாயும், வருவாய் இனச் செலவுகளும்

62. 1995-96 ஆம் ஆண்டில் வருவாய் இனச் செலவு ரூ.4205.01 கோடியும், வருவாய் இன வரவு ரூ.4544.20 கோடியும் ஆகும். அரசின் உதவித் தொகை ரூ.415.93 கோடியாகும்.

63. 1996-97 ஆம் ஆண்டில் வருவாய் இனச் செலவு ரூ.4747.37 கோடியும், வருவாய் இன வரவு ரூ.5077 கோடியும் ஆகும். அரசின் உதவித் தொகை ரூ.586.51 கோடியாகும்.

64.1997-98-ல் நிதி நிலை அறிக்கையின்படி வருவாய்ச் செலவினம் ரூ.5808.58 கோடியாகவும், வருவாய் வரவு ரூ.5473.60 கோடியாகவும் (இதர வரவினங்களில் ரூ.55.50 கோடியும், கட்டணச் சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கும் ரூ.275 கோடியும் இதில் அடங்கும்). வருவாய்ப் பற்றாக்குறை ரூ.334.98 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

65. 1997-98க்கான வருவாய்ச் செலவினங்கள் ரூ.5570.47 கோடி, வருவாய் வரவு ரூ.5502.77 கோடி (இதில் இதர வருமானம் ரூ.62.33 கோடியும், மின் கட்டண சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.250.05 கோடியும் அடங்கும்) பற்றாக்குறை ரூ.67.70 கோடியாகும்.

66.1998-99க்கான நிதிநிலை அறிக்கையின்படி வருவாய்ச் செலவினம் ரூ.6655.44 கோடியாகவும், வருவாய் வரவு ரூ.6232.88



கோடியாகவும் (இதர வரவு ரூ.65.90 கோடியும், கட்டணச் சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கும் ரூ.250 கோடியும் இதில் அடங்கும்) பற்றாக்குறை ரூ.422.56 கோடியாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

67. தமிழ்நாடு மின்சார வாரியம் வெகு தொலைவிலுள்ள சுரங்கங்களிலிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்கான செலவு, நிலக்கரியின் விலை உயர்வு, இரயில்வே கட்டண உயர்வு. ஊழியர்களின் செலவு, நிர்வாகச் செலவு மற்றும் இதர பொருட்களுக்கு ஆகும் செலவு ஆகியவற்றால் கடுமையான நிதி நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. அதிகரித்து வரும் மின் சுமையைச் சமாளிக்க அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதனால் 1989-90-ல் 69% ஆக இருந்த அனல் மின்சாரத்தின் விகிதாச்சாரம் 1996-97ல் 81% ஆக உயர்ந்துள்ளது. இதனால் மின் உற்பத்திச் செலவு கணிசமாக அதிகரித்தது.

68.1998-99க்கான பற்றாக்குறை ரூ.421.79 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (வருவாய்ப் பற்றாக்குறை ரூ.422.56 கோடியும் முதலீட்டின் செலவில் ரூ.0.77 கோடி உபரியும் ஆகும்)

69. மின் உற்பத்தியின் இடு பொருட்களின் விலை உயர்வு, மின்சாரம் வாங்குவதில் விலை உயர்வு ஆகியவை காரணமாக வருவாயில் பெரிய துண்டு விழுந்து இருக்கிறது.

மின் கட்டணத் திருத்தம்

70. இந்த ஆண்டு 19-7-1998 நாளிட்ட அரசு ஆணை எண் 115, எரிசக்தித் துறையின் ஆணையின்படி 20-7-1998 முதல் மின் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டது. 1998-99-ல் மின் உற்பத்தியின் சராசரி விலை யூனிட்டிற்கு 237.55 காசுகளாக இருந்தது. இதே நேரத்தில் மின் விநியோகத்தின் சராசரி வரவு யூனிட் ஒன்றுக்கு 192 காசுகளாக இருந்தது. இது கட்டண மாற்றத்திற்கு முன்பு இருந்த நிலை. இதனால் ரூ.1276.37 கோடிக்கு வருவாய்ப் பற்றாக்குறை இருந்தது. இதர இனங்களின் மூலமாக வரவு ரூ.65.90 கோடியையும் அரசு வழங்கும் இழப்பீட்டுத் தொகையான ரூ.250 கோடியையும் கணக்கில் கொண்டு அந்தப் பற்றாக்குறை ரூ.960.47 கோடியாகக் குறைகிறது. 20-7-1998 அன்று அமல்படுத்தப்பட்ட கட்டண விகித மாற்றத்தால் எஞ்சியுள்ள

[1998 நவம்பர் 24

எட்டரை மாதங்களுக்கு ரூ.461.95 கோடி கூடுதல் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. மின் கட்டண திருத்தத்திற்குப் பின்னும் வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுகட்ட மேற்கொண்டு நிதி ஆதாரங்களைத் தேட வேண்டியுள்ளது.

**தூய்மையான, ஒளிவு மறைவு அற்ற நிர்வாகத்திற்காக அரசு எடுத்த நடவடிக்கைகள்**

71. மக்களோடு நல்லுறவு பேணவும், ஒளிவு மறைவு அற்ற நிர்வாகத்தை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு ஏற்றுள்ள உறுதியை நிறைவேற்ற தமிழ்நாடு மின்சார வாரியம் முறைப்படுத்தப்பட்ட மக்கள் உரிமைப் பட்டயம் ஒன்றைத் தயாரித்துள்ளது. உயர்ந்த, தரமான சேவையை வழங்க இந்தப் பட்டயம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பட்டயத்தில் மின் துண்டிப்புக்கு பின் மின்சாரம் பெறுவது, பழுதடைந்த மின் அளவிகளை மாற்றுவது மற்றும் பலதரப்பட்ட மின் விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு பெறும் வழி முறைகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. மேலும் குறைகளைத் தெரிவித்தல், அவற்றுக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றுக்கான முறைகள் இதில் தரப்பட்டுள்ளன.

**பணியாளர் அமைப்பு**

**ஊதிய உயர்வு**

72. மின்சார வாரிய ஊழியர்களுக்கு 1-12-1996ல் ஏற்பட்ட ஊதிய மாற்ற உடன்படிக்கையின்படி கீழ்க்கண்டவாறு ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

| எண் | தற்போதுள்ள ஊதிய விகிதம் | மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1. | 950-20-1050-30-1500 | 3050-75-3950-80-4590 |
| 2. | 1050-30-1200-40-1840 | 3370-100-5770 |
| 3. | 1150-40-1350-45-1980 | 3795-110-6435 |
| 4. | 1250-45-1475-50-2225 | 4200-130-7060 |
| 5. | 1350-45-1440-50-2440 | 4450-130-7570 |
| 6. | 1650-55-1925-65-2770 | 5600-175-9100 |
| 7. | 1750-65-2075-75-2450-85-2960 | 5850-200-9850 |
| 8. | 2150-85-2575-95-3050-105-3680 | 7225-225-12175 |



1998 நவம்பர் 24]

தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரிகளுக்கும் 1-12-1996 முதல் கீழ்க்கண்டவாறு ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டு உள்ளன:

| எண் | தற்போதுள்ள ஊதிய விகிதம் | மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1. | 2150-85-2575-95-3050-105-3680 | 7225-225-12175 |
| 2. | 2475-95-3045-105-4200 | 8100-275-13875 |
| 3. | 2550-95-3025-110-4565 | 9275-300-15575 |
| 4. | 2680-95-2965-110-4725 | 9500-300-15800 |
| 5. | 3300-110-3850-125-5475 | 11000-350-18350 |
| 6. | 4575-125-5200-150-6100 | 15100-425-19350 |
| 7. | 5550-175-6600 | 17600-500-22100 |

சுமார் 80,500 ஊழியர்களும், 9,500 அதிகாரிகளும் இந்த ஊதிய மாற்றத்தில் பயன் பெற்றனர். மேற்கண்ட ஊதிய மாற்றத்தினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாதம் ரூ.15 கோடி அதாவது ஆண்டுக்கு ரூ.180 கோடி கூடுதல் செலவு ஆகும்.

**ஊதியக் கொடை**

73 மின்சார வாரியம் ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் வரும் ஊழியர்களுக்கு 8.33% ஊதியக் கொடையும் ஊதியத்தில் 11.67% கருணைத் தொகையும் 1997-98 ஆம் ஆண்டிற்கு வழங்கியது.

**ஊழியர்களுக்கு சிறப்பான பணிகளுக்கான பதக்கம் வழங்கும் திட்டம்**

74. வாரிய அதிகாரிகளும் ஊழியர்களும் பணிகளில் நாணயத்தையும் தொழில் ஈடுபாட்டைக் கடைபிடிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். வாரியம் பல துறைகளில் பணிபுரியும் ஊழியர்களின் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் வாரியத் தலைவரின் மின் சக்திப் பதக்கம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியப் பதக்கம் ஆகியவற்றைச் சிறப்புமிகு பணியாளர்களுக்கு வழங்குகிறது.

(i) 1996 ஆம் ஆண்டுக்கான வாரியத் தலைவரின் மின் சக்திப் பதக்கத்தை 10 ஊழியர்கள் பெற்றுள்ளனர். 1997 ஆம் ஆண்டிற்கான பதக்கங்களைப் பெற தகுதி வாய்ந்த ஊழியர்களைத் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

(ii) சிறந்த பணிக்கான 1996 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரியப் பதக்கங்கள் 5 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டிற்கான பதக்கங்களைப் பெறத் தகுதி வாய்ந்த ஊழியர்களைத் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

**ஒப்பந்தத் தொழிலாளர்கள்**

75. இதுவரை மின்சார வாரியத்தில் உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க 12,836 ஒப்பந்தத் தொழிலாளர்கள் களப்பணி உதவியாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். கடந்த 1997-98 ஆம் ஆண்டில் இறந்த ஊழியர்களின் வாரிசுகளாக 348 பேர் பல பிரிவுகளில் பணி அமர்த்தப்பட்டனர்.

76. எண்ணூர், மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு 1-4-1997 முதல் நிரந்தர களப்பணி உதவியாளர்களின் ஊதியத்தில் 30-ல் 1 பங்கு தினக் கூலியாக வழங்கப்பட்டு உள்ளது.

மின் விநியோகம் மற்றும் இதர வட்டங்களில் பணி புரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு பொதுப் பணித் துறை அட்டவணையில் கண்டுள்ளபடி இரண்டாம் நிலை மஸ்தூர் பெறும் தொகைக்குச் சமமாக தினக் கூலி வழங்கப்படுகிறது.

**மாநில மின்சார கட்டுப்பாட்டு ஆணையம்**

77. இந்திய அரசு கடந்த 25-4-1998ல் மத்திய மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணையம் மற்றும் மாநில மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது. தமிழ்நாடு அரசு மற்றும் பல மாநில அரசுகள் விவசாய மற்றும் பல துறைகளுக்கு மானியங்கள் அளிக்கும் மாநில அரசின் அதிகாரத்தில் குறுக்கிடுவதாக எதிர்ப்பு தெரிவித்தன. எனவே, மத்திய அரசு மேற்கண்ட அவசர ஆணைக்குப் பதிலாக 2-7-1998 அன்று மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணை 1998 சட்டத்தை நிறைவேற்றியது. இந்தத் திருத்தப்பட்ட சட்டம், மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணையத்தை விருப்பம்போல் அமைப்பதற்கு, மாநில அரசுகளுக்கு உரிமை வழங்கியதுடன், மானியங்கள் வழங்குவதிலிருந்த கட்டுப்பாட்டை நீக்கியது. இந்திய அரசு இந்தச் சட்டத்தின்படி மத்திய மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணையத்தை அமைத்துள்ளது. ஒரிசா மாநிலம் தனியாக ஒரு சட்டத்தைப் பிறப்பித்து, மாநிலக் கட்டுப்பாட்டு ஆணையத்தை





ஏற்படுத்தியுள்ளது. ஆந்திரப் பிரதேசம் மற்றும் அரியானா மாநிலங்கள் தனித் தனியாக தங்கள் மாநிலச் சட்டங்களை இயற்றியுள்ளன. ஆசிய மேம்பாட்டு வங்கி, மின் சக்தி நிதிக் கழகம் போன்ற நிதி நிறுவனங்கள் மின்சார வாரியங்களின் சீரமைப்பு மற்றும் மாநில மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணையங்கள் அமைப்பது ஆகியவற்றை வற்புறுத்துகின்றன.

தமிழ்நாடு அரசு மத்தியச் சட்டத்தின்படி மாநில மின்சாரக் கட்டுப்பாட்டு ஆணையத்தை அமைக்க முடிவு செய்து அதற்கான உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ஆகியவர்களை பரிந்துரைக்க ஒரு குழுவையும் 27-7-1998 தேதியிட்ட அரசு ஆணை எண் 120-ன்படி அமைத்துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம், ஒரிசா, அரியானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் செய்துள்ளதைப் போலவே தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீரமைப்பதற்கான தேவை பற்றி ஆய்வு செய்வதற்கான ஓர் ஆலோசகரை அமர்த்துவதற்கு முடிவு செய்துள்ளது.

78. நான், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் மாண்புமிகு உறுப்பினர்களின் பயனுக்காக கோடிட்டுக் காட்டியுள்ளேன். தமிழ்நாடு மின் நுகர்வோர்களுக்கு நம்பகமான வகையில் மின்சாரம் வழங்குவதே நமது குறிக்கோள். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை இது சம்பந்தமாக வரவேற்கின்றேன். இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை கவனத்தில் கொண்டு நம்பகமான வகையில் தரமான மின்சாரத்தை இந்த மாநிலம் முழுவதும் வழங்குவதற்கு பாடுபடும் என்று உறுதியளிக்கின்றேன்.

....

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலக நிருபர் பிரிவால் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.